CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. VI.] September 1929. [No. 2.

श्री शारदायै नमः ।



श्रीरामचन्द्रपरब्रह्मणे नमः

சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

सुबोधरामचरिते

॥ युद्धकाण्डः ॥

चिरं युद्ध्वाऽथ रामेण कुम्भकर्णे हते पुनः ।
अतिकायादयः पुत्रा रावणेन नियोजिताः ॥ १६ ॥

अथ பிற்பாடு कुंभकर्णे கும்பகர்ணன் चिरं நெடுநேரம் युद्ध्वा யுத்தம் செய்து रामेण ஸ்ரீராமரால் हते (सति) கொல்லப்பட்ட அளவில் पुनः மறுபடியும் रावणेन ராவணனால் अतिकायादयः அதிகாயன் முதலிய पुत्राः பிள்ளைகள் नियोजिताः அனுப்பப்பட்டனர் ॥ १६ ॥

अतिकायश्च समरे लक्ष्मणेन निपातितम् ।
श्रुत्वा सन्तप्तहृदयो रावणो दुःखितोऽभवत् ॥ १७ ॥

रावणः ராவணன் समरे யுத்தத்தில் लक्ष्मणेन லக்ஷ்மணரால் अतिकायं அதிகாயனை निपातितं வீழ்த்தப்பட்டவனாக श्रुत्वा கேட்டு सन्तप्तहृदयः தவிதவிக்கும் மனமுடையவனாகவும் दुःखितः (च) துக்கமடைந்தவனாகவும் अभवत् ஆனான் ॥ १७ ॥

ततो रावणनिर्दिष्टो ब्राह्मेणास्त्रेण शक्रजित् ।
बद्ध्वा सहानुजं रामं विजयी स्वपुरीमगात् ॥ १८ ॥

ततः பிறகு रावणनिर्दिष्टः ராவணனால் ஏவப்பட்ட शक्रजित् இந்திரஜித்தன் ब्राह्मेण பிரம்மாவினுடையதான अस्त्रेण பாணத்தால் सहानुजं தம்பியுடன் கூடிய रामं ராமரை बद्ध्वा கட்டிவிட்டு विजयी ஜயமடைந்தவனாக स्वपुरीं தனது நகரை अगात् அடைந்தான் ॥ १८ ॥

अथ जाम्ववदादिष्टो मारुतिर्मारुतोपमः
महौषधीनां लाभाय जगामौषधिपर्वतम् ॥ १९ ॥

अथ அச்சமயம் जाम्बवदादिष्टः ஜாம்பவானால் ஏவப்பட்டவராயும் मारुतोपमः வாயுவுக்கு சமானருமான मारुतिः வாயு குமாரனான ஆஞ்சநேயர் महौषधीनां சஞ்சீவி மூலிகைகளின் लाभाय அடைதல் பொருட்டு औषधिपर्वतं சஞ்சீவி பர்வதத்தை जगाम அடைந்தார் ॥ १९ ॥

गृहीत्वा चौषधिगिरिं रणभूमिमवाप्य सः ।
महौषधीनां गन्धेन सर्वान्प्राबोधयच्च तान् ॥ २० ॥

सः மாருதியானவர் औषधिगिरिं சஞ்சீவி பர்வதத்தை गृहीत्वा எடுத்துக்கொண்டு रणभूमिं போர்க்களத்தை अवाप्य அடைந்து महौषधीनां சஞ்சீவி மூலிகைகளின் गन्धेन வாசனையால் तान् ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் உள்பட सर्वान् அனைவரையும் प्राबोधयत् எழுப்பி விட்டார் ॥ २० ॥

(To be continued)

ஸ்ரீராமஜயம்.

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் 6.] சுக்கில—புரட்டாசி. [இதழ் 2.

வீட்டுக்கல்வியும் பெண்மக்களும்.

(பத்திராதிபர்.)

மக்களின் புத்தி விசாலிக்க, அவர்களுக்குக் கல்வி கற்பித்தல் அவசியமாகும். கல்வி கற்பித்தல் என்றால் பள்ளிக்கூடங்களில் படிக்கச்செய்வது மட்டுமன்று. பள்ளிப் படிப்பைக்காட்டிலும் வீட்டுப் படிப்பே முக்கியமாயும் நல்லறிவுக்கு மூலகாரணமாயும் அமைந்துளது. "இளமையிற் கல்" என்றபடி, சிறு வயதில் நல்ல பழக்கங்களிருந்தாற்றான் அதைக்கொண்டு பள்ளியில் படிக்கும் படிப்பை நல்வழியில் உபயோகிக்கக் கூடிய நற்புத்தி ஏற்படும். இளம் பிள்ளைகளின் மனம் வெகு தீட்சணியமுள்ளதாயும் கண்டதையெல்லா முடனுக்குடன் கிரகிக்கக் கூடிய அரிய சக்தி யுடையதாயு மிருக்கின்றது. சிறு பிள்ளைகளின் மனத்தை புகைப்பட மெடுக்கும் கருவிக்குச் சமதையாகக் கூறலாம். எதிரிலிருக்கும் உருவம் சிரித்த முகமாயிருப்பினும் கடுகடுத்த நோக்காயிருப்பினும் அதை அவ்விதமே கிரகிக்கும் அக்கருவிபோல, பிள்ளைகளின் மனமானது உயர்வு தாழ்வு, நன்மை தீமை, உத்தமம் அதமம் என்ற பாகுபாடு சிறிதுமின்றி எல்லாவற்றையும் கிரகிக்கக் கூடிய சக்திபெற்றுள்ளதென்பதைப் பெற்றோர்கள் நன்கறிந்து கொள்ளல் அவர்கள் பிள்ளைகளுக்கு உதவும் முதற்கடமையாம். எதைக் கண்டாலும் எதைக் கேட்டாலும் அவற்றையெல்லாம் கிரகித்துக் கொள்ளக்கூடிய இளம் பருவத்தில் பெற்றோர்கள் கவனக்குறைவாக இருந்து விடுவார்களாயின் பிறகு அப்பிள்ளை

தன் எவ்வளவு தூரம் பள்ளிப் படிப்புப் படித்த போதிலும் அதனால் ஒருசிறிதும் பயனேற்பட மாட்டாதென்பது திண்ணம்.

இளம் பிள்ளைகளின் பாலியச் லீலைகளைக் கண்டு களிக்கும் பெற்றோர்கள் அவர்களுக்கு நற்பழக்கங்களைக் கற்பித்துப் பாதுகாக்கும் பொறுப்பைக் கனவிலும் மறக்கலாகாது. மக்களுக்குச் சத்துருமாதா பிதாக்கள் என்றதோர் முதுமொழியுண்டு. பிள்ளைகளின் மீதுள்ள ஆசையினாலும் பாசத்தாலும் பெற்றோரில் பலர் தமது முக்கிய கடமையை மறந்து விடுவதினால் தான் உலகில் தீயகுணம், தீச்செயல் முதலியன பெருகிவருகின்றன. பிள்ளைகள் புத்திசாலிகளாகவும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் இருப்பதற்கும் அவிவேகிகளாகவும் தீயொழுக்கமுள்ளவர்களாகவும இருப்பதற்கும் பெற்றோர்களே காரணமாயமைந்துள்ளார்கள. பிள்ளைகளைப் பெறுவதால் மட்டும் பெருமையில்லை. அவர்களை நல்லவர்களாகப் பழக்கி வளர்த்தால் மட்டுமே அத்தாய் தந்தையர் புகழ்ச்சிக்குரியராவர். பெற்றோர் என்று கூறுங்கால், தாய் தந்தை இருவர்களையும் அச்சொல் குறிப்பதாயினும், பிளளைகளுக்கு வீட்டுக்கல்வி போதிபபவள் தாயே ஆவாள். ஆடவனுக்குப் பொருளீட்டுதல் ஒன்றே முககியக் கடமையாகும். மககளைப் பரிபாலித்து அவர்களை நல்வழியில் ஆரோககிய திடதேகத்துடன் வளர்த்து நல்ல பிள்ளைகளாகுமாறு வளர்த்தல் தாயைச்சேர்ந்த கடமை எனபதை மறக்க முடியாது. தான் பெற்றெடுத்த பிள்ளைகருச் சிறிய நோய் கண்டாலும் துடிதுடித்து இமைகொட்டாது கவனித்து ஆகார நித்திரைகளையும் பொருட்படுத்தாது பாதுகாக்கும் தன்மை தாயிடத்திலமைந்துள்ளது போல மககளை நல்வழிப்படுத்தும் பொறுப்பும் தாய்க்கே உரியதாகும். பிள்ளை துஷ்டனென்றும் தீயனென்றும் பெயரெடுத்தால் தன் மகனுக்கும் தனக்கும் யாதொருவித சம்பந்தமும் கிடையாதெனத் தகப்பன் பகிரங்கமாக விளம்பரமிடவும் துணிவான். ஆனால் பெற்ற தாய்மட்டும் தான் பெற்ற பிள்ளையைப் பிறர் கேட்க தூஷிக்கவே மாட்டாள். இவ்வளவு தூரம் பற்றுள்ள தாய் தன் பிள்ளைக்கு வீட்டுக்கல்வியைப் பழக்கத் தவறிவிடுவாளாயின் இவள் அப்பிள்ளையைச் சுமந்து பெற்றதும் தன் இரத்தத்தை யூட்டி வளர்த்ததும் வீணேயாம். பிள்ளைகளிடத்துள்ள பெரும் பற்றால் அவர்களுக்குத் தீக்குணங்களை யுபதேசிக்கும் பொறுப்பையும் சில சமயம் தாய்மார்கள் ஏற்றுக்கொண்டு விடுகிறார்கள். காலால் உதை, முகத்தில் துப்பு, செருப்பாலடி என்ற சொற்களைக் கூறிச் சீராட்டும் தாய்மார் பலர், பிள்ளைகள் துடுக்காகப் பேசினாலும், பிற பிள்ளைகளை யடித்தாலும், உடனுக்குடன் கண்டிக்காது, இக்குற்றங்களைத் தம்மிடம் சொல்ல வருகிறவர்களையும் எதிர்த்துப் பேசி, தம் மக்கள் செய்தது சரியெனச் சாதிக்கும் தாய்மாருமுண்டு. போன்பால் தாம் செய்வது தீமையென்பதறியாமலே தம்மக்களின் நற்பழக்கங்களுக்கு இடையூறு விளைவிப்பாருமுளர். கற்பித்தல் என்பது இருவகைப்படும். ஒன்று வீட்டுக்கல்வி. மற்றொன்று பள்ளிக் கல்வி. முதன்முதலாயுள்ள வீட்டுக் கல்வி சரிவர அமையாதபோனால் பள்ளிக்கல்வி பயனை யளிக்கவேமாட்டாது. மத்தியகாலத்தில் கிராம வாழ்க்கையிலிருந்த தாய்மார்களால் பிள்ளைகளின் தேகத்திடன் மிகச் சிறப்பாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அக்குழந்தைகளின் வளர்ப்பு தாய்மார்களின் மேற்பார்வையிலேயே நடைபெற்றது.

நாகரிகம்மிக்க தற்காலத்தில் தான் பெற்ற பாலகனுக்குப் பாலூட்டி வளர்க்கக் கூடிய தன்மையையும் பல தாய்மார்கள் கொண்டிருக்கக்காணோம். தற்காலம் பிள்ளை பெறுதல் இன்பநுகர்ச்சியின் நிகழ்ச்சியாகக் கருதப்

படுவதால் பிரஜாவிருத்தியைத் தடுத்தல் என்ற சங்கமும் அதற்குரிய நூல்களும் பெருகத் தலைப்பட்டுள்ளன. விவாகமும் இல்லறவாழ்க்கையும் நன்மக்களைப் பெற்று அவர்களை நல்வழியில் வளர்த்து நற்குடிகளாகப் பெருகச் செய்தலென்ற கொள்கை மாறி சிற்றின்ப நுகர்ச்சிக்காகவே ஓர் ஆணும் பெண்ணும் விவாகம் செய்துகொள்வதென்ற எண்ணம் மக்களிடையே பரவி வருவதால், விவாகச்சட்டம், வாழ்க்கைச் சட்டம் இவைகளும் தலைகாட்டி வருகின்றன. இரண்டு வருடத்தில் மூன்று முழுப்பிரசவமும், இரண்டு குறைப் பிரசவமுமாகப் பெண்கள் அவதிப்பட்டுத் தசையும் என்புமாகக் கண் குழிவிழுந்து காலோய்ந்து உடல் கூனித் திண்டாடும் பரிதாபக் காட்சி தீரவேண்டுமாயின் அதற்காகப் பிள்ளை பெறும் சட்டம் என்பதாக ஒன்று ஏற்படுதலும் நிச்சயமே. சினிமாப் படக்காட்சிகளும் காதற் சுவை ததும்பும் கதைகளும் சிற்றின்பப் பேய்களும் தலை விரித்தாடுங்கால் அதற்காகப் பிரஜாவிருத்தியைக் குறைக்கும் உபாயங்களினால் மட்டும் பெண்கள் தேக சுகம் பாதுகாக்கப் படமாட்டாது. நாகரிக உலகில் வாழும் பெண்களின் உடல் நலத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கச் சட்டமொன்று ஏற்படுதலும் இன்றியமையாததே. இவ்வாறு பல சட்ட திட்டங்களால் பெண்கள் உடல் நலம் பெறுதவரை வீட்டுக் கல்வியைப் பற்றிப் பேசுதல் பகற்கனவேயாகும்.

வீட்டுக் காரியங்களிலும். பிள்ளை வளர்ப்பிலும் முற்காலமிருந்த பெண்களின் தேகத்திடன் தற்காலத்தியப்பெண்மக்களிடம் இல்லையென்பதுண்மை. பெண்களின் தேக நலம் பாதுகாக்கப்பட்டாலன்றி அவர்கள் தம் மக்களுக்கு வீட்டுக் கல்வி பயிற்றல் எங்ஙனம் முடியும்? இதிலும் விசேஷமான செய்தியாதெனில், அனேகமாக தனவந்தர்கள் வீட்டில் ஒரு பிள்ளை பிறந்துவிட்டால், அது வேலையாட்கள் வசம் ஒப்படைக்கப்படுவதன்றி, அடிக்கடி தாய் முகங்காணும் பாக்கியத்தையும் அக்குழவி அறவே இழந்து விடுகின்றது. வேலையாட்கள் தம் இனத்தாரிருக்குமிடங்களிலேயேஇக்குழந்தைகளுடன் திரிவதால், மோட்டார் துடைத்தல், குதிரை ஓட்டல், விளக்குத் துடைத்தல், அருவருப்பான பேச்சுக்களுரைத்தல் இவைகளே வீட்டுக் கல்வியாக ஏற்படுகின்றன. பிள்ளை வளர்ப்பும் வீட்டுக் கல்வியும் தாயைச் சேர்ந்த பொறுப்பாயின் அதற்குரிய கல்வி பெண்மக்களுக்கு போதிக்கப்படல் அவசியத்திலும் அவசியமாம்.

மக்களுக்கு வீட்டுக் கல்வி நன்கு அமைய வேண்டுமாயின் மக்களைப் பெற்ற தாய், தந்தையர்கள் நல்ல மாதிரியாக நடந்து கொள்ளல் வேண்டும். பெற்றோர்களின் நடவடிக்கைதான் பிள்ளைகளுக்கு வீட்டுக் கல்வியெனப்படும். கடவுள் பக்தி, சமயப்பற்று, ஆடம்பரமற்ற வாழ்க்கை, கடுமொழியுரையாமை, பொய் சொல்லாமை முதலிய நற்பழக்கங்கள் பெற்றோரிடம், அதிலும் முக்கியமாகத் தாயிடம் அமையாதிருக்குமாயின் அவ்வுதரத்தில் உதித்த மக்களுக்கு வீட்டுக் கல்வி எவ்வாறு கிடைக்கும்? பெண் மக்கட் குரிய படிப்பு நிறுவப்படாதவரை பெண்கள் கற்றறிந்தவர்களாக மாட்டார்களென்பதும் பெண்கள் தக்க அறிவுபடைத்தாலன்றி, பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக வளர்க்கப் படமாட்டார்களென்பதும் மக்கள் இளமையில் நல்வழி புகட்டப்பெறுர்களாயின், நல்ல பிரஜையாக வாழமுடியாதென்பதும் நல்ல பிரஜைகள் குறைந்தால், அரசாங்கம் தக்க சட்ட திட்டங்களைக் கையாள நேருமென்பதும் வெளிப்படை, மக்கள் பிறப்பைத் தடுக்கும் சட்டமும் இதையும் மீறிப் பிறக்கும் பிள்ளைகளைச் சரிவர வளர்ப்பதற்குப் பிள்ளை வளர்ப்புச் சட்டமும் ஏற்படாது மக்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே யறிந்து நடக்கக்கூடிய நற்காலத்தைக் கடவுளளிப்பாராக.

சிவமயம்.

ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் 14-8-29-ல்.
'பெண்கள் கடமை' என்னும் விஷயமாகப் பிரசங்கித்த போது
யாழ்ப்பாணம், அளவெட்டிச் சைவ வாலிப சங்கத்தார் பாடிய

வந்தனோபசாரப் பாக்கள்.

வான்வழிப் படரும் மல்லல்யாழ் வாழ்க்கைக்
கந்தரு வக்குழாம் போல்திரி குயிலே!
கலையுணர் புலமையில் தலைமையோ னெனவே
பலர்புகழ் கொள்கை குலவிய ஒருவரைக்
கூறுதி யெனலும், வேறுகொள் ஆங்கிலப்
புலமையோ? வடமொழிப் புலமையோ? கொழிதமிழ்ப்
புலமையோ? மனத்தினிற் கருதிய தென்றலின்,
ஆங்கில ஞானம் புலமையே யல்லது
புலமை யாதலும் மாபோ? பார்வதி
காந்தன் அருளிய கனிதமிழ்ப் புலமையும்,
ஆரியப் புலமையும் அமைந்தவர் தம்மைத்
தெரிதல் வேண்டினன் செப்புதி பண்டைப்
புலவரை யொழித்தெனப் புகன்றேன் ஆதலின்
பாரதம் விரும்புசீர்ப் பாரத நாட்டில்,
வழிவழி வந்த மறையவர் குலத்தில்,
தோன்றிய வித்வச் சூடா மணியறம்
பரப்பிய கொள்கை பாலம்மாளே
அனையர் மற்றவர் அளவெட்டிக்கு
வருவ ரென்றலின் வந்தனம்
தமதுரை கொண்டு ஜன்மப்பயன் பெறலே.

கலித்துறை.

படருற்ற வாங்கிலங் கற்றென்னை யாண்மக்கள் பாற்றிவிட்டார்,
அடையத் துணையில்லை; என்றோரா விற்கழுத் திற்சுருக்கிட் (டு)
இடருற் றிறக்கத் துணிந்த தமிழெங்கள் பாலம்மையார்
கடலிற் பிரசங்கம் கேட்டோடி வந்து களித்தனளே.

நந்தாத கல்ப தருவும், சுரபியும், நிதியும்
அந்தோ இருத்தலின் வானவர்க் கென்குறை என்றவனி
சிந்தா குலமற எல்லார தாவின்னில் தீர்க்கவந்த
சிந்தா மணிஎங்கள் பாலம்மாள் பத்ர சிந்தாமணியே.

சிந்தாமணிப் பத்திரிகாசிரியராகிய திருமகளார் வை. பாலம்மாள் அவர்கள் மீது பாடியது.

திணை—பாடாண்டிணை   துறை—இயன்மொழி

கருமா முகிலே! கருமா முகிலே!
இருமா நிலம்புகழ் கருமா முகிலே!
நீயே,
வேண்டுழிப் பெய்கிலை; வேண்டா விடத்து
மீண்டும் மீண்டும் மேவிப் பொழிகுவை;
பெய்தும் பெயாதும் பேணிக் கெடுக்குவை;
கறுத்துங் கடுங்குரலெடுத்துங் கொடுக்குவை;
கொடுப்பது போன்று கொடாதுங் கொடாது
கரப்பது போன்று கொடுத்து மயக்குவை;
புகழ்வு மிகழ்வும் புணர்த்தியு முணர்கிலை;
இன்பொடின்னுமை யென்னு மியைந்திலை;
இனையை யேனும் வெள்கிலை மேனின்
றுருமி மழைப்பெய லோய்கிலை; அதனால்,
இனியசொற் பயில்தந் தேற்குமா றுதவி
மறையா நல்லொளி மரீஇ யொண்பொருள்
பிறைபோல் வளர்வான் பெய்துவரு முகிலா
ஒங்கு பாலம்மையோ டொருநீ
யாங்ஙன மொத்தியோ? வீங்குகரு முகிலே!

16—8—1929.
தெல்லிப்பழை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
நவநீதகிருஷ்ணபாரதி

யாழ்ப்பாணம், உரும்பராய் இளைஞர் மகா நாட்டில் 13-8-1929-ல்
ஸ்ரீமதி சகோதரி. வி. பாலம்மாள் அவர்கள் மகோபந்நியாசஞ் செய்தகாலத்து
பண்டிதர் வே. மகாலிங்கசிவம் கூறிய வெண்பாக்கள்.

கங்கைச்சடைக் காட்டிற் கரந்ததாள் காவேரி
பொங்குகடற் கண்வீழ்ந்து போயதால் தங்கமிர்தம்
சிலம்மாள் வானோர்வாய்ச் சென்றொளித்த தேமொழிசேர்
பாலம்மாள் பேருணர்ப் பண்பால்.

ஆன்றோர் சபைக்கு கமைந்த அலங்காரம்
என்ற மனிதர்க் கிசையமிர்தம்—சான்றிலகு
நாவன்மைச் செல்லமிகு ஞானத்திற் காழ்கடலாம்
பாவை பாலம்மாள் வாய்ச்சொல்.

சென்னை புலால் மறுத்தல் சங்க விரிவுரையாளர்
திரு. கா. சி. சிவசங்கர முதலியாரவர்கள் கூறிய

வாழ்த்துப் பாக்கள்.

சீலமுடனே வடமொழியிற் செய்ய தமிழிற் புலமை பெறு
பாலம் மாளா மறைத்திருவோர் பண்பார் மகளை யீன்றளித்த
தேல மணக்கும் வாய்மகளிர் எடுத்து முத்தங் கொடுக்கின்றார்
கோல நிறையா டவர்மார்பிற் குனித்து நடனஞ் செய்கின்றாள்.

நீராட்டி மைதீட்டி திலகக்காட்ட விளையாடும்
அருட்டைப் பருவத்தா ளருங்கலைதேர் புலவரெலாஞ்
சீராட்டிப் பாராட்டுஞ் "சிந்தாமணி" சிறந்த
போராட்டி யிவ்வுலகிற் பெருமையுடன் வாழியவே.

தோனகப்பா.

ஆங்கில மொழியென வாரிய மொழியென
வீங்குறு மியன்சுவை விஞ்சிடு தமிழெனப்
பற்பல மொழியும் பொற்புறக் கற்றுத்
தென்னாட் டரிவையர்க் கோர்சிர மணியாய்ப்
பன்னாட் டிலும்புகழ் பல்குற வாழ்வீர்!
அன்பே யுருவாய் அருள்கொடு வாழ்வீர்!
இன்பம் மீக்கொள வென்னுளங் குடிகொள்
அன்னாய்! அன்னாய்! ஆருயிரன்னாய்!
செய்ய யாழ்ப்பாணச் செந்தமிழ் மாணவி
செய்யவே சில சொற் செப்புவல் கேட்டிசின்
அதுதான்;
ஐந்தாண் டாயழ கேர்புற வளர்க்கும்
சிந்தாமணியெனும் செந்தமிழ் நங்கையை
சிறுவன் னெனது சிற்றில்லிற்கும்
வாவிடுக்குகவென வரம் வேண்டுவதே.

இங்ஙனம்,
தங்களன்பார்ந்த மகள்
அ. சிவமாமணி, யாழ்ப்பாணம்.

மண்டைதீவு,
18—12—1928.

நமது தாய்நாட்டின் அபிவிருத்திக்காகவும் அதனால் ஏற்படும் நன்மைக்காகவும் ஒளிமழுங்கி நடைப்பிணம்போல் சுதந்தரமற்று ஏமாந்திருக்கும் நமது சகோதரிகளின் முன்னேற்றத்துக்காகவும், தங்களாலியற்றப்பட்ட சிந்தாமணி யென்ற மாதாந்த சஞ்சிகையை எனது மகள் மூலமாய்க் கிடைக்கப்பெற்று மகிழ்ந்தேன். அதைப் படிக்கப் படிக்க தெவிட்டாக் கனிபோன்ற ஆணித்தரமான சொற்கள் நிரம்பத் ததும்பி யிருப்பதால் நமது சகோதரிகளின் சுதந்தரத்துக்கு ஊன்றுகோல் போன்று தாங்கள் ஏற்படுத்திய சிந்தாமணி யென்ற சஞ்சிகையும் தாங்களும் நீடூழிகாலம் இவ்வுலகில் உலாவ எம்பிரான் திருவருளால் சகல சுகங்களுடன் மென்மேலும் அபிவிருத்தியடைவீர்களாக!

இப்படிக்கு,
தங்களன்புள்ள சகோதரி,
மிஸிஸ் கந்தையா.

பாரத ஜோதி.

புத்தரது திவ்விய சரித்திரம்.

(ஸ்ரீமான் பி. ஆர் ராஜசூடாமணி எழுதியது.)

முதல் அத்தியாயம்.

பூவுலகின்கண் சித்தார்த்தர் எனும் திருநாமம் புனைந்து விளங்கி ஈரேழு பதினான்கு உலகங்களிலும் நிகரின்றி வானுறை விண்ணவரும் வாழ்த்தும் சிறப்புற்று மாஞானியாய்க் கருணையங் கடலாய் நிர்வாணத்தையும் நீதிநெறியையும் கற்பித்து மனிதரை யாட்கொள்ளவந்த உலககுருவான புத்ததேவரது திவ்விய சரித்திரம் இஃதே. மாந்தருக்காய் எம்பிரான் மீண்டும் ஈங்கு அவதரித்தனர்.

மிக்க மேன்மைதங்கி யிலங்கும் திவ்விய லோகங்களுக்கிப்பால் இவ்வுலகைப் புரக்கின்ற நான்கு திக்குப் பாலகர் வாழுமிடத்திற்குங் கீழே சமீபத்திலுள்ள தெனினும் மேன்மையுற விளங்கும் பல மண்டலங்களில் மண்ணுலகைத் துறந்தேகிய புண்ணியாத்துமாக்கள் திரும்பவும் ஈங்கு அவதாரஞ்செய்து உலகிற்கு நலம் புரியவேண்டு மென்னும் சிறந்த அவாவுடன் முப்பதினாயிர மாண்டளவும் காத்திருக்கின்றனர். அம்மண்டலங்களிற் காத்திருந்தோருள் தலைவராகிய புத்ததேவர் இவ்வுலகோருக்காய்த் திரும்பவும் அவதரிப்பதைக் குறித்த ஐந்து அவதார இலட்சணங்களை வானவர் கண்டு “மண்ணினைக் காக்குமாறு புத்தர்பிரான் மீண்டும் அவதரிக்குங்காலம் இதோ கிட்டியது” என்றார்ப்பரித்தனர்.

“ஆம், அஃது உண்மையே. யான் இதன் முன்னர் பன்முறை புவியிற் பிறந்துளேன்; ஆயினும், இத்தருணம் உலகோரை யீடேற்றக் கடைசி முறையாய் அவதரிக்கின்றேன். இத்துடன் யான் பிறப்பிறப்பிலேன். யான் உலகிற்கு வழங்கும் அறநெறி கடைப்பிடித்தொழுகுவார்க்கும் பிறப்பிறப்பற்றுவிடும். பனிபோர்த்த இமாசலத்தின் தென்பாரிசத்திலே சுசீலர்களும் அறநெறியிலொழுகிக் குடியோம்புமோர் அரசனும் வாழ்கின்ற சாக்கிய குலத்திலே யான் இதோ அவதரிக்கின்றேன்” என்று புத்தர்பிரானும் புகன்றார்.

விண்ணுலகில் இச்சம்பவம் நிகழ்ந்தவன்று, இரவிலே, மாயா தேவி தன் கணவனாகிய சுத்தோதன மன்னன் மருங்கே உறங்க, வானோருலகினின்று மிக்க ஜோதி வாய்ந்த அறுகோண நட்சத்திரமொன்று, ஆறுகொம்புகளுடையதும் காமதேனுவின் பால் வெண்மை வாய்ந்ததுமான யானையினுருவாகி, ரோஜாமலர் நிறத்தொடு நன்முத்தின் நிறமுங் கலந்த வண்ணமாய்ப் பேரொளி வீசி ஆகாயத்தூடே பாய்ந்து வலப்பக்கமாய்த் தன் உதரத்துள் புகுந்ததெனக் கனவு கண்டாள்; திடுக்கிட்டெழுந்தாள். எல்லாத் தாயர்க்கும் பிறக்கும் மகிழ்ச்சியினும் பன்மடங்கதிகமான பேருவகையால் உளம் பூரித்தாள். பொழுதுபுலர்வதன்முன்னரே, இவ்வுலகின் எறக்குறைய எல்லாப் பாகத்திலும் அழகுவாய்ந்த ஒரு வகையான ஒளி பரவியது. பொங்குங் கடற்றிரைகள் தாமே தம்மைத் தாலாட்டிக் கொண்டுறங்கின. அந்த நள்ளிருளில் செங்கதிரோன் வரவை எதிர்பார்த்திருந்த கடிமலர் முகைகளெல்லாம் நடுப் பகலில் விளங்குவன போல மலர்ந்து மணம் வீசின.

தினகரனின் இளங்கதிர்பட இரவினிருள் குவிந்த கானகம் தங்க ஒளியால் தளதளத்தல்போல

மாயா தேவியின் ஆனந்தம் நரகத்தில் இருள் செறிந்த பாகத்திற்கூடப் புகுந்து ஆங்கு குடிகொண்டிருந்த துயரத்தையும் துன்பத்தையும் தொலைத்துக் களிப்புண்டு பண்ணிற்று. அங்குள்ளவர்கூடத் தாழ்ந்த இனிய குரலில் "சகோதரர்களே! பிறப்பதற்காகக் காத்திருக்கும் ஆத்துமாக்களே! இறப்பதற்காக வாழ்வோரே! எழுமின்! எழுமின்! கேண்மின்! கேண்மின்! புத்தர்பிரான் அவதரித்தார்!" எனச் சம்பாஷித்தனர். அத்தருணம் நரகத்திலுள்ள எண்ணிறந்த ஆத்துமாக்களுக்கு சாந்தி பிறந்தது. பூமடந்தையும் களிக்கூத்தாடினாள். நீரிலும் நிலத்திலும் வானிலும் எவருமறியவொண்ணாப் புதுமையுடன் ஆறுதல் எனும் காற்று வீசியது.

காலையிற் கதிரவன் களிப்பொடு குண திசை எழுந்தனன். மன்னன் மனைவி கனவு கண்ட செய்தி பரிதியினொளிபோல் பாரெங்கும் பரவ, கனவின் பொருளுணர்த்தும் கனவுநூல் கண்ட கட்டுரையாளர் அரண்மனைக்கேகி மன்னனைக் கண்டு "ஓ அரசனே! நின் உயிர்த்துணைவி கண்ட கனவு நற்கனவே. கற்கடகம் கதிரவனொடு கலந்து விளங்குகின்றது. ஆதலால் அரசி ஓர் அழகிய ஆண்மகவைப் பெறுவாள். அவன் தெய்விகப் புதல்வனாய் விளங்குவான். அவன் வெகு அற்புத ஞானவானாய் உடலெடுத்த உயிர்கட்கெல்லாம் முத்தியளித்து மாந்தரின் அஞ்ஞான இருள் கடிந்தருளுவான். அரசனாயிருந்து நாடாள விரும்பின் மன்னாதி மன்னனாய் மண்ணுலகம் முழுவதையும் ஆளுவான்" என்றனர்.

புத்த தேவர் மீண்டும் இம்மண்ணுலகில் இங்ஙனம் திரு அவதாரம் செய்வாராயினர். மாயா தேவி பத்துத் திங்களும் நிறைபவே, ஒரு நாள் மத்தியான வேளையில் அரண்மனையைச் சார்ந்த பூங்காவில் ஓர் பலாச மரத்தடியில் படுத்திருந்தனள். அம்மரத்தின் கடுக்கிளை நன்று சிறப்புற வானோக்கி எழுந்து நறுமணங் கமழும் மலர்க்கொத்துக்களையும் கதிரவனொளியில் தளதளத்த பசட்டான இலைகளையும் வெகு மாட்சிமையான கிரீடம்போல் தாங்கி கோயிற் கொடிமரமென வளைவின்றி வளர்ந்தோங்கி நின்றது. அந்த புத்தர்பிரான் இப்புவியின்கண் அவதரித்த நற்செய்தி யறிந்து மாயாதேவியரைச் சூழத் தன் கிளைகளைத் தரையுற வளைத்துத் தாழ்த்திப் பசந்தழை மண்டபம் அமைத்துக் குளிர் நிழல் விரித்தது. தூயவன் வருகையை அம்மரமொன்றுதான் உணர்ந்ததோவெனின் இவ்வுலகத்துள்ள சராசரப் பொருள்களனைத்தும் எம்பிரான் வருகை யறிந்து பேருவகையால் உளம் பூரித்தன. பூமடந்தை புனிதனின் திருமேனியைத் தாங்குமாறு நானாவித நறுமண மலர் அலர்த்தி மெல்லணை அமைத்தாள். தேவியும் மஞ்சநீராடுதற்கு மனவிருப்புற்றபோது மருங்கேயுள்ள ஒரு கரும்பாறை படீரெனப் பிளந்து தெள்ளெனத் தெளிந்த பளிங்குநீர் அருவியொன்றைப்பெருக்கிற்று. இங்ஙனம் இயற்கைப் பொருள்களெல்லாம் உடனிருந்து உதவி செய்ய உத்தமியும் நோவென்பதே உணராது பேரெழிற் குமரனை ஈன்றனள். அத்திருக்குமரனின் குறைவிலாத் திருவடிவத்தில் அருட் பிறப்பின் முப்பத்திரெண்டு திவ்விய இலட்சணங்களும் நிறைந்து துலங்கின. இந்நற்செய்தி அரண்மனைக்கெட்டியது.

அப்பால் மைந்தனை அரண்மனைக்கு எடுத்துச் செல்ல வந்தோர் சிறப்பு என்னே! அன்னவர் மேரு மலையில் வாழ்கின்ற திக்குப்பாலர்கள் என்றோ? அவர்கள் மாந்தரின் நல்வினை தீவினைகளைக் கணக்கெழுதி வைக்கும் மாதேவர்கள். அவர்களுள் கீழ்த்திசைக்கதிபனான இந்திரன் வெண்ணுடை தரித்து வெண்முத்தினும் கதிருறச் செய்த சூலாயுதங்கள் தாங்கிய

விண்ணவர் புடைசூழ விளங்குபவன். தென் திசைத் தேவனாகிய யமன் நீலக்கற்கள் இழைத்த கேடகங்கள் ஏந்தி, நீலமேகக் குதி ரைகள் நடத்தும் கும்பந்தர்கள் என்னும் பரி வாரம் புடைசூழ அரசாள்பவன். மேற்றிசைக் கீசனான வருணன் பவளக் கேடகங்களேந்தி இரத்த வருணமான பரிமாக்கள் செலுத்தும் பராக்கிரம சேனைகளையுடையவன். வடதிசைக் கதிபனான குபேரன் பசும்பொற் கேடகங்க ளேந்திக் காஞ்சன வருணமான அசுவங்கள் மீதேறும் யட்சர்கள்சூழச் செங்கோல் செலுத் துபவன்.

இத்தகைய சிறப்புடைய மாதேவர்கள் தமது ஆடம்பரங்கள் எவற்றையும் சிறிதுமே வெளிக் காட்டாமல் பார்வைக்குப் பல்லக்கு சுமந்தேகும் சிவிகையார்போல மாறுவேடம் தரித்துச் சிவிகை எடுத்து வந்து மாயாதேவி யையும் குழந்தையையும் தூக்கிச் சுமந்து அரண்மனை சேர்த்தனர். இச்செய்தியை மானி டர் எவருமே அறியார். எனினும் அத்திரு நாளில் இமையவர் யாவரும் இம்மண்ணிற் குற்ற மகா பாக்கியத்தை உன்னி அகமகிழ்ந்து உயர்வு தாழ்வு பாராட்டாது மானிடரோடு மானிடரா யுலாவுவகாயினர்.

சுத்தோதனன் இஃதொன்றையுமே உணர்ந் திலன். கனவு நூலார் உரைத்த எதிர்காலச் செய்திகளை உன்னி மனக்கவலையில் மூழ்கி யிருந்தனன். அத்தருணம் ஜோதிடர்கள் வந்து திருக்குமான் பிறந்த காலத்தின் நட்சத்திர நிலை களை நோக்கி வியந்து மன்னனைப் பார்த்து, "அரசரேறே! நின் பிள்ளை, கலி தீர்க்கப் பிறந்த இத்திருமைந்தன், பலவாயிரம் வருடங் கட் கொருமுறை தோன்றி இவ்வுலகையெல் லாம் ஒரு குடைநிழற் கீழாளும் சீருடை யோன். தன லக்ஷ்மி, தானிய லக்ஷ்மி, தைரிய லக்ஷ்மி, சௌரிய லக்ஷ்மி, வித்தியா லக்ஷ்மி, கீர்த்தி லக்ஷ்மி, விஜய லக்ஷ்மி, இராஜ்ய லக்ஷ்மி எனும் அஷ்ட லக்ஷ்மிகளும், சக்கிர ரத்னம், அச்வ ரத்னம் முதலிய ஏழு ரத்ன பாக்கியங் களும் திகழப்பெற்றவன்" என்றுரைத்தனர்.

இதைக் கேட்டதும் அரசன் தன் அற்புத மைந்தனின் பிறந்த நாளை மகோற்சவமாய்க் கொண்டாட வேண்டுமெனத் தன் நகர மாக்க ளுக்குக் கட்டளையிட்டனன். மன்னவனாணை பிறந்ததும் நகரத்தார் வீதிகளிலும் பாதைகளி லும் தெருக்களிலும் அலகிட்டுப் பனிநீர் தெளித்து எங்கும் தோரணங்கள் கட்டி, மாங் களிலும் மாட மாளிகைகளிலும் கூட கோபு ரங்களிலும் வெளி முற்றங்களிலும் பாதை களின் இருமருங்கிலும் பலகோடி விளக்குகள் ஏற்றி ஜகஜ்ஜோதியாக ஒளிரச் செய்தனர். வாள் சுழற்றுவோர், உடலைப் பலவாறு வளைத் துக் குட்டிக்கரணங்கள் போடுவோர், செப்படி வித்தைக்காரர், வேழம்பர், அபிநயர், நிருத்தர், பாம்பாட்டியர், கண்கவர் வனப்பிற் சேலை கட்டி ஒப்பின்றி அசைகின்றவண்ணச் சிறு பாதங்கள் புனைந்த பொற்சிலம்புகள் கலீர் கலீ ரென இளநகை உமிழ நடனம் புரியும் கணிகை யர், விலங்கின் தோல் போர்த்து உரு மாறி நடிப்பவர், சிங்கம் முதலிய கொடிய விலங்கு களை வாய்கட்டி யாட்டுவோர், பல்வகை வாத் தியங்கள் முழக்குவோர் யாவரும் தத்தம் செயல்களால் விரிந்த கண்ணும் வியப்புமாய் ஆங்காங்கே கூடி நோக்கிநின்ற ஜனங்களைக் களிக்கச் செய்தனர். இவ்வருங்குமான் பிறந்த நற்செய்தி யறிந்து, தூரதேசங்களினின்று பல வர்த்தகர்கள் விலை மதித்தற்கரிய கம்பளிப் போர்வைகள், மரகதக் கற்கள், மாலைவானத்து நானாவித நிறந் தோய்ந்த இரத்தினக் கம்பளங் கள், தன்னியல்பிலே மறையும் இயல்புடைய நாணம் மிக்க ஓர் எழில் முகத்தை மறைக்கப் பன்னிரண்டு மடிப்பிட்டு மறைத்தாலும் மறைக்கவொண்ணா நேர்மை வாய்ந்த வெண்

ராசுகள், வெண் முத்தும் சந்தன மணியும் கோத்தச் சித்திரப்பணி குயிற்றிய பீதாம்பரங்கள் முதலியன பொற்கமலத் தட்டுகளிலேந்தி வந்து இளங்குழவியின் இணையடிகளிற் சமர்ப்பித்துத் தொழுதேகினர். சிற்றரசர்கள் பலர் கபிலவாஸ்துவின் இளவரசை தரிசிக்க வராயினர். இங்ஙனம் அத்திருமதலை எல்லாச் சீரும் சிறப்புமடையப் பெற்றமையால் அந்நகரத்தார் தம்மிளவரசை எல்லாப் பாக்கியங்களும் உடையவன் எனும் பொருள்பட சர்வார்த்தசித்தன், சுருங்கச் சொல்லின் சித்தார்த்தன், எனப் பெயரிட்டு அழைப்பாராயினர்.

இத்தெய்வப் புதல்வனைத் தரிசிக்க வந்தோருள் அசிதர் என்ற புனித மாதவரும் ஒருவர். ஆண்டினும் அறிவினும் முதியவர். உலக விஷயங்கட்கு அடைபட்ட செவியுடையவர். அவர் கானகத்தில் அரசமரத்தினடியில் தியானத்திலமர்ந்திருக்க, வானவர் புத்தாவதாரத்தைப் புகழ்ந்து பாடிய தேவ கானத்தைக் கேட்டு நிஷ்டை கலைந்து மாந்தரின் துயர் தவிர்க்கப் பிறந்த வள்ளலைத் தரிசிக்கப் போவாக் கொண்டு சுத்தோதனன் மாளிகைக் கெழுந்தனர். மாயா சுதனண்டை வந்தபோது மன்னன் எழுந்து முடிவணங்கினன். அத்தகைய புண்ணிய புருஷரின் திவ்விய பாதங்களில் தன் செல்வக் குமாரனைச் சமர்ப்பித்தால் அன்னவனுக்குச் சர்வானுக்கிரகங்களும் கிட்டுமெனக் கருதி மாயா தேவி தன் மகனைப் பெரியவர் பாதங்களிற் கிடத்தினள். அது கண்ட தூயவர், "ஓ தேவியே! அங்ஙனமன்று" என்று கூவி இரண்டடி பின் வாங்கி நின்று ஒட்டி புளிர்த்து சுருக்குகள் படிந்த தம்முகத்தைக் குழந்தையின் திவ்விய பாதங்களில் எண் முறை பொருத்தி வணங்கி உரைப்பாராயினர் :

"வானவர் போற்றும் மதலாய்! உன்னைப் பன்முறை வணங்குகின்றேன். உன்னைப் பன்முறை போற்றுகின்றேன். நீயே ஆதி பகவன்! இளஞ்செம்மை கலந்த வொளி நின் திருமுகத்தைச்சூழ வீசுகின்றது. பாதமுத்திரைகளை இதோ பார்க்கின்றேன். ஸ்வஸ்திகையின் சுருண்ட இளங் கொடிகளும், அருட்பிறப்பின் முப்பத்திரண்டு திவ்விய இலட்சணங்களும், எண்பது உபலட்சணங்களும் விளங்குகின்றன. நீயே மகாபுத்தன். இவ்வுலகத்தார்க்கு நெறிமுறை வகுத்துரைக்க வந்தவன் நீயே. நீ வகுக்கும் தரும மார்க்கத்தைத் தழுவுவார்க்கெல்லாம் முத்தியளிப்பாய்; நீ திருவாய் மலர்ந்தருளவிருக்கும் பேரின்பச் சொற்களைக் கேட்கும் பாக்கியமிலான் யான். இம்மண்ணுலகை விட்டு யான் அகலவேண்டிய காலம் இதோ அணுகிற்று. இப்பயனற்ற தசைப் பொதியைக் களையவேண்டுமென வெகு நாட்களாய் விரும்பினேன். எனினும் உன்னைத் தரிசிக்க வேண்டுமென இதுகாறும் காத்திருந்தேன். இதோ உன்னைத் தரிசித்து விட்டேன். யான் கிருதார்த்தனானேன்" என்றுரைத்தார்.

பிறகு, மன்னர்பிரானை நோக்கி "அரசே! இது நீ அறிக! மனித சமூகமெனும் மரத்திலே பலவாயிரம் வருடங்கட் கொருமுறை மலரும் நறுமணமலரிஃது. இம்மலர் இப்புவியில் ஒரு முறை மலருமாயின் மண்ணும் விண்ணும் மற்றெங்கும் ஞான நறு மணம் வீசி, அன்பெனும் இனிய தேன் மாரி பொழிந்திடும். ஆ! ஆ! என்ன விந்தை! மண்ணுலகத்து அரசர் கிளையில் தேவருலகத்துத் தெய்வத்தாமரை மலர்ந்ததே ஆ! ஆ! மகா புண்ணிய வமிசமே! அன்று, அன்று, முற்றிலும் பாக்கியமான வமிசமென்று சொல்லுதற் கிடமில்லை. ஏனெனில், மன்னனே! இக்குழந்தையின் பிறப்பால் நீ அடையும் மகிழ்ச்சியைப் பிறிதொரு நிகழ்ச்சி சிறிது கெடுத்து விடும். மகா தேவியே! இவ்வரிய அவதாரத்தினால் நீ தேவர்களுக்கும்

மனிதர்களுக்கும் அரியளாகி விட்டனை. துயரங்கட்கும் துன்பங்கட்கும் இலக்காகாவண்ணம் நீ தெய்வீகம் பெற்றனை. வாழ்வு துயரம், அஃது துன்பம். ஆதலால் இன்னுமேழு நாட்களில் பிறவித்துன்பம் சிறிதுமே யணுகாத் தூய நிலை சென்றடைவாய்'' என்றனர்.

அங்ஙனமே நிகழ்ந்தது. ஏழாவது நாளன்று மாலைப் பொழுதில் மாயாதேவி இள முறுவல் பூத்த முகமாய் மீண்டு மெழாத நித்திய நித்திரை போயினள். மகாமுக்தர்கள் வாழும் விண்ணுலகினில் தாயிற் பெரிய தாயான மாயாதேவிக்கு எண்ணிறந்த தேவர்கள் என்றென்றும் பலவாறு பணிவிடை புரிந்து அவளைத் தொழுது நிற்கின்றனர்.

இதன் பின்னர், நமது புத்தர்பெருமானை வளர்ப்பதற்கு, மகா பிரஜாபதி எனும் அரசிளங் குமரியைச் செவிலித் தாயாக நியமித்தனர். இவ்வுலகினிற்கு ஆறுதலூட்ட வல்ல திருவாயிலூட்டுதற் கேற்ற சிறந்த செழும் பால் அம்மங்கையின் மார்பிடத்திலூறலாயிற்று.

சித்தார்த்தருக்கு எட்டு வயதாயிற்று. தன் மகன்பால் கண்ணுங் கருத்துமுடைய சுத்தோதனன் ஒரு அரசிளங்குமரன் அறிந்திருக்க வேண்டியன யாவுங் கற்பிக்க வேண்டுமென உறுதி கொண்டனன். . மகாபுத்தனாய் விளங்க ஒருவன் பாடுபட வேண்டிய துன்பங்களையும் அதனால் ஏற்படும் மாட்சிகளையும் அவன் வெறுத்தனன். தன் மகன் புத்தனாவண்ணம் தான் எவ்வகை உபாயங்களைக் கையாட வேண்டுமோ அவற்றையெல்லாம் சிறிதும் தவறாது செய்யத் தீர்மானித்தனன். ஆதலால் அவன் தன் அமைச்சர்களை அழைத்து "அறிவிற் சிறந்தவர்களே! ஒரு ராஜகுமாரன் கற்கவேண்டியவை அனைத்தையும் கற்பிக்கத் திறமை வாய்ந்த மாஞானி ஒருவர் உளரேல் உரைமின்'' என, அவ்வமைச்சர்களனைவரும் ஒருங்கு சேர்ந்து "மன்னனே! விசுவாமித்திரர் ஒருவரே நின் மகனுக்குக் கல்வி கற்பிக்கத் தகுந்தவர். அவரே மகாஞானி; புராண இதிகாசங்களில் மிகத் தொன்மையாய் விளங்குபவரும் அவரே. அட்சர விலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாஸ்திரம், ஜோதிடம், தருமசாஸ்திரம், யோக சாஸ்திரம், மந்திர சாஸ்திரம், சகுன சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், உருவசாஸ்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், நிருத்தம், சப்தப் பிரமம், வீணைவேணு, மிருதங்க தாளம், அஸ்திரப் பரீட்சை, கனகப் பரீட்சை, இரதப் பரீட்சை, கஜபரீட்சை, அசுவ பரீட்சை, இரத்தினப் பரீட்சை, பூமி பரீட்சை, சங்கிராம விலக்கணம், மல்லயுத்தம், ஆகருஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், மதன சாஸ்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவ வாதம், பைபீல வாதம், கௌஸ்துக வாதம், தாதுவாதம், காருடம், நஷ்டம், முஷ்டி, ஆகாசப்பிரவேசம், ஆகாசகமனம், பரகாயப் பிரவேசம், அதிருசயம், இந்திரஜாலம், மகேந்திர ஜாலம், அக்கினிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம், திருஷ்டிஸ்தம்பம், வாக்ஸ்தம்பம், சுக்கிலஸ்தம்பம், கன்னஸ்தம்பம், கட்கஸ்தம்பம், அவஸ்தைப் பிரயோகம் என்னும் அறுபத்திநான்கு கலைகள் கற்றுணர்ந்த கல்விக்களஞ்சியம் அவரே'' எனப் புகன்றனர். அமாத்தியர்கள் மொழிந்தது கேட்டு மன்னன் மகிழ்ந்து விசுவாமித்திரரை வரவழைத்தனன். அத்துறவி மன்னன் விருப்பமறிந்து இளவரசனுக்கு குருவாயிருக்க இசைந்தனர். ஒரு சுபதினத்தில் அரசிளங்குமரர் சந்தன மரத்தாற் செய்த கரும்பலகையும் எழுதுகோலும் கையிலேந்தி விசுவாமித்திரர் முன் வணங்கி நின்றனர். விசுவாமித்திரர் "செல்வக் குழந்தாய்! இம்மந்திரத்தை யான் உரைக்கும் வண்ணமே எழுதுக'' என்று சொல்லி மிகவும் மேன்மை தங்

கிய மறையோரே யன்றி மற்றெவரும் கேட்கலாகாத காயத்ரி மகாமந்திரத்தைத் தாழ்ந்த குரலில் உச்சரித்தனர்.

உடனே திருமைந்தரும் "குருவே! இதோ யான் எழுதுகின்றேன்" என மிகப் பணிவுடனே பகர்ந்து அதிவிரைவாய் அம்மந்திரத்தை எழுதுவாராயினர். நமது மைந்தர் அதை ஒரு பாஷையிற்றானே எழுதினர்? அவர் அவற்றைப் பல்வேறு பாஷைகளிற் பற்பல வடிவுடைய எழுத்துக்களிலே வரையலாயினர். நாகரி, தக்ஷிணம், நீயம், மங்கலம், பருஷம், யவம், தீர்த்தியம், யூகம், தாரதம், சிக்யானி, மகம், மத்தியாசாரம், சித்திராட்சரம், ஞஞாட்சரம், இன்னும் கடலினாழத்தில் வாழ்கின்றவர்களும், குகைகளிலும், பாதாளத்திலும், வாழ்கின்ற நாகர்களும், பருதியின் ஒளியையும், நிலையும் வணங்குகின்ற மாசர்களும், மலையர்களும் பேசுகின்ற பாஷைகளிலே எச்சாதியாரும், எத்தேசமாந்தரும் வழங்குகின்ற உரையிலே தம் குரு மொழிந்த மந்திரத்தை எழுதி அதை ஒவ்வொரு பாஷையிலும் தாம் எழுதிய வண்ணமே படித்துக் காட்டலானார்.

விசுவாமித்திரரும் "குழந்தாய்! வெகு நன்று, இனி நாம் கணிதம் கற்போம். லட்சம் வருமளவும் நான் கற்பிக்கும் வண்ணமே சொல்லி வா" என்றுரைத்து, ஒன்று, இரண்டு மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு ஒன்பது, பத்து எனவும், பத்துப் பத்தாய் நூறு எனவும், நூறு நூறாய் ஆயிரம் எனவும், கணக்கைப் பெருக்கிக் கற்பித்துக் கொண்டே போயினர். சிறுவரும் அவர் கற்பித்த வண்ணமே லட்சம் மட்டும் கணக்கிட்டு வந்து அத்துடன் நில்லாது, மேலும் கணக்கிடலாயினர். கோடி, அயுதம், நியுதம், கம்பம், விஷ்கம்பம், அவால், அஷ்டாதம்; இதன் பின்னர் குமுதம், குந்திதம், உத்பலம்; அதிற்கப்பால் புண்டரிகம், பதுமம், இதற்கு மேலாய் அஸ்தகிரி மலையைத் தூள் செய்து அதன் ஒவ்வொரு பொடியையும் கணக்கிடும் கணக்கு; அதற்கப்பால் ஆகாயத்தில் தோன்றும் நட்சத்திரங்களை எண்ணும் கதம், கடல் நீர்த்திவலைகளை கணக்கிடும் கோடிகதம், நட்சத்திரங்களின் கிரக வட்டத்தைக் கணிக்கும் இங்கா, கங்கா நதியிலுள்ள மணற் பொடிகளை திட்டம் செய்யும் அநந்தகல்பம், இதற்கும் மேலானது இவ்வுலகெங்கும் பதினாயிர வருடங்களாகப் பெய்யும் மழைத் திவலையின் கணக்கும், இவற்றிற்கும் மேலானது, தேவர்கள் தமது இறந்தகால எதிர்காலங்களைக் கணக்கிடும் மஹாகல்பமுமாம் என்று சொல்லி முடித்தார்.

இது கேட்ட விசுவாமித்திரர் "மகாமேன்மை தங்கிய அரசிளங்குமாரனே! நீ உரைத்தது மிகவும் சிறப்பாயிற்று. இவை யனைத்தும் நீ அறிவாயெனின் நீட்டல் அளவை, யான் கற்றுக் கொடுக்க வேண்டுமோ?" என்றார். சிறுவரும் பணிவாய் "ஆசிரிய! மனமுவந்து கேளும்; கூறுகின்றேன். பத்துப் பரமாணுக்கள் சேர்ந்தது ஒரு பரஸூக்ஷ்மம். பத்து பரஸூக்ஷ்மங்கள் சேர்ந்தது ஓர் திருஸரேணி; ஏழு திருஸரேணிகள் சேர்ந்தது சூரிய கிரணத்தில் காணப்படும் சிறு அணு. அத்தகைய அணுக்கள் பத்துச் சேர்ந்தது ஓர் எலியின் மீசை முனையாகும். அத்தகைய மீசை முனை பத்துக் கொண்டது ஓர் லிக்யம். பத்து லிக்யம் ஓர் யுகம்; பத்து யுகம் ஓர் வாற்கோதுமைபரிசியின் நீளம், எழுவாற் கோதுமை ஒன்று சேர்ந்த நீளம் விட்டியின் இடையளவாகும். அதுபோலப் பத்து வாற்கோதுமை கொண்டது கோதுமை மணியின் நீளமாம். பத்துக் கோதுமை மணிசேர்ந்தால் ஒரு விரற்கணுவின் நீளமாகும், பன்னிரண்டு விரற்கணுவின் கனம்

ஒரு சாண். சாண்கள் சேர முழம்; முழங்கள் சேர கஜம்; கஜத்திலிருந்து ஒரு வில்லின் நீளம்; பின்பு வேலின் நீளம். மூவாயிரத்திரு நூறு வேல்கொண்ட நீளம் ஒரு யோஜனை. பிறகு ஆசிரியீ! தாங்கள் விரும்புவதாயின் சூரிய கிரணத்தில் பறக்கிற அணுக்கள் எத்தனை சேர்ந்தது ஒரு யோஜனை தூரம் என்று சொல்ல மாட்டுவேன்" என்று, சிறிதும் பிறழாது வெகு விரைவாய் அணுத்திரளின் கணக்குரைத்தார். இதுகாறும் திகைத்துக் கேட்டிருந்த குரு இளவரசரின் மலர் முகத்தை உற்றுநோக்கித் தம்மிடம் சீடனாய் வந்துள்ளவர் யார் என அறிந்து உடனே நமஸ்கரித்து "மாட்சிமை தங்கிய அரசிளங்குமரனே! நீ குருவிற்கும் குருவன்றோ? உனக்கும் யானோ குரு? அன்று, அன்று. இவ்வுலகினிற்கு வழிகாட்ட வந்த குரு நீயன்றோ? யான் உன்னைத் தொழுகின்றேன். நீ என் பள்ளிக்கு வந்தது, நூற்களும் குருக்களுமின்றியே யாவும் அறிந்தோன் என்பதும், அத்துடன் குருபத்தியுமுடையோன் என்பதும் எனக்குக் கற்பிக்க வன்றோ"? என்றுரைத்தார்.

புத்தர்பிரான் தமது குருநாதர்கள் அனைவரிடத்திலும் மிக்க வணக்கமுடையவர். எனினும் அவர் யாவரினும் சிறந்த ஞானி; மகா சாந்தகுண சம்பன்னர்; வெகு இதமாய் சம்பாஷிப்பவர்; ராஜகம்பீரர்; கனிவு நிறைந்த மனத்தினர்; அன்பின் களஞ்சியம்; அஞ்சாத நெஞ்சினர். குதிரை மீதேறி வேட்டைக்குச் சென்று மருண்டோடும் மானைத் துரத்துவதில் அவரினும் சிறந்த வாலிபரே இலர். அரண்மனை அங்கணத்தில் நடைபெறும் ரத சாரத்தியத்தில் அவரை வெல்ல யாராலுமாகாது. எனினும் அவர் வேட்டையில் மானைத் தொடர்ந்தோடி அது தனக்கு அகப்படும் தருணத்தே அதைத் தப்பியோடவிட்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கி விடுவார். குதிரைப் பந்தயத்தில் பந்தயம் கெலிக்குமென்ற சமயத்தில் தமது குதிரையை நிறுத்திவிடுவார். ஏனெனின் நுரை கக்கிப் பெருமூச்செறியும் குதிரையைக் கண்டு மனம் நொந்து சிந்தனையில் மூழ்குவார். அன்றேல் தமக்குப் பந்தயம் கிடைப்பதனால் தம்முடன் போட்டிக்கு வந்த மற்ற இளைஞர்கள் தோல்வியடைந்து மனம் நோவரே எனக் கருதுவார். இதுவுமன்றியின் வேறேதேனும் மேலான மனோபாவங்கள் அவரைக் கவர்ந்துகொள்ளும். இருதளிரிலைகளோடு முளைத்தெழுகின்ற செடி நாளடைவில் சாகோப சாகைகளாகி விரிந்தெழல் வீசுதல்போல் சித்தார்த்தரின் பெருங்கருணை நாள்தோறும் பெரிதாகி எங்கும் பாவலாயிற்று. இவ்விள வாலிபர் துக்கம், துன்பம், கண்ணீர் என்பன இன்னவை என்றேயறியார். அச்சொற்கள் சுக போகாதிகளில் சதா மூழ்கியிருக்கும் மன்னர்களால் அறியப்படாத வெறும் வார்த்தைகளாகவே யிருந்தன.

அழகிய வசந்த காலத்தில் ஒருநாள் மாலைப் பொழுதில் சித்தார்த்தர் அரண்மனைப் பூங்காவிலிருந்தபொழுது காட்டு அன்னங்கள் இமாசலத்திலுள்ள தம் கூடுகளை அடைய வடதிசை நோக்கி ஆகாய வீதி வழியே கூட்டங்கூட்டமாய்ப் பறந்தேகின. அவை பரஸ்பரம் சிநேக பாவத்தோடு உறவாடி, கூடுகளில் தமது வரவை வெகு ஆவலாய் எதிர்பார்க்கும் குஞ்சுகள்மீதுள்ள பாசம் இழுக்க நீல வானத்தை நீந்திக் கடக்கையில், இளவரசனது ஞாதியான தேவதத்தன் தன் வில்லைக் குலைத்து அப்பறவைகளை இலக்கு நோக்கி ஓர் கொடும் பாணம் தொடுத்தனன். தட்டுத் தடங்கலில்லாத நீலாகாச வழியே விரைவாய்ப் பறந்து செல்லத் தன் இறக்கைகளை அகல விரித்துத் தனது பரிவாரங்கட்கு வழிகாட்டிப் பறந்து சென்ற ராஜ ஹம்சத்தை அக்கொடிய பாணம்

தாக்கிற்று. சாம் தைத்ததும், பாலினும் வெண்மையும் பஞ்சினும் மென்மையுமாகிய இறகுகள் செங்குருதி தோய சித்தார்த்தர் நின்ற பக்கம் அது விழுந்தது. அதுகண்டு அவர் மனம் பதைத்து விரைவாய் எழுந்து மெல்லென இரு கைகளால் வாரியெடுத்தார்; பத்மாசனத்தமர்ந்து அதை மடியில் வைத்து வாழைத் தளிர்போன்ற கருணை வடிவான கரங்களால் தடவி அதன் அச்சத்தை ஆற்றலானார். நிலைகுலைந்த இறகுகளை வருடிச் சீராக்கிப் படபடவென்றடித்திருந்த அதன் நெஞ்சினைத் தேற்றி அதற்கு மனவமைதி யளித்தனர். இடக்கரத்தால் அதை மெல்லெனப் பிடித்து வலக்கரத்தால் அதில் தைத்திருந்த கொடிய அம்பினை நோவுண்டாகா வண்ணம் வெகு ஜாக்கிரதையாய்ப் பிடுங்கி யெறிந்தனர். புண்ணை ஆற்ற வல்ல பச்சிலைகளைக் கசக்கிப் பிழிந்து சாற்றை அப்புண்ணிலூற்றிப் பசுந்தளிர்களைப் புண்மீது பொதிந்து கட்டினர். நம் இளவரசர் இங்ஙனமெல்லாம் அப்பறவைக்காக இரங்கி அதைக் காப்பாற்றினர்; எனினும், அப்பறவை அநுபவித்த நோவு எத்தகையது என அறியாததனால் அதை அறிதற்காக அன்னத்தைத் தாக்கிய பாணத்தால் தமது கையில் குத்திக்கொண்டனர். அவருக்கு அவ்வேதனையைச் சகிக்க முடியவில்லை. இச்சிறு அநுபவத்தைக் கொண்டு அப்பட்சியின் நோவு எத்தகையதா யிருக்குமென ஒருவாறு சிந்தித்து அதற்காகக் கண்ணீர் வடித்து அதை நேயம் ஆதரவான சைத்தியோபசாரங்களினால் தேற்ற வாரம்பித்தனர்.

அச்சமயம் தேவதத்தனது ஏவலன் வந்து "பிரபோ! என் யஜமானர் ஓர் அன்னப்பறவையை வீழ்த்தினர். அது இங்குள்ள ரோஜாச் செடிகளின் மத்தியில் விழுந்தது. அதை என்னிடம் கொடுத்தனுப்புமாறு பிரார்த்திக்கக் கொள்ளுகின்றார்" என்றனன். அதற்கு சித்தார்த்தர் "நான் இப்பறவையைக் கொடேன். இது இறந்திருக்குமாயின் கொன்றவனுக்கு அதை அளிப்பது உசிதமாகும். ஆனால் இவ்வன்னம் இன்னும் உயிரோடிருக்கின்றது. என் ஞாதி இதன் வெண்ணிறக்கைகளிற் பொருந்திய வேகத்தைப் போக்கினனேயன்றி இதைக் கொன்றிலன்" என்றுரைத்தனர்.

இம்மொழிகளைக் கேட்டுக்கொண்டு வந்த தேவதத்தன் "என் அருமை அண்ணா! கானகத்திலும் வானத்திலும் திரிகின்ற பிராணிகள் உயிரோடிருப்பினும் இறப்பினும் அவற்றை வீழ்த்தியவனுக்கே அவை உரிமையாகும். ஆகாயத்திலிருக்கும்பொழுது அவை எவருக்கும் சொந்தமல்ல. நான் அவ்வன்னத்தை வீழ்த்தியபடியால் அது எனக்கே சேரவேண்டியது" என்றனன். அப்பொழுது சித்தார்த்தர் அப்பறவையின் முகத்தைத் தன் முகத்துடன் அணைத்துக் கம்பீரமான குரலிலே "தேவதத்தா! யான் இதைக் கொடேன். இப்பறவை எனக்கே உரியது. கருணையின் உரிமையாலும் அன்பின் சிறப்பாலும் எனக்குச் சொந்தமாக விருக்கும் கோடானுகோடிப் பொருட்களில் இதுவே முதன்மையானது. ஏனெனில் இப்பொழுது எனக்கு ஓர் உண்மை புலப்படுகின்றது. இக்கணம் என்னுள்ளத்தை எழுப்புகின்ற உணர்ச்சியால் யான் மனிதர்கட்கு அன்பும் கருணையும் கற்பிப்பேன். வாயில்லா உயிர்கட்கு ஓர் வாயாயிருந்து இஞ்ஞாலத்தின் துயர்ப்பிரவாகத்தை அணைகோலித் தடுப்பேன். மாந்தர்கட்கு மட்டுமன்று; உள்நாடி எவ்வுயிர்கட்கும் துயர் தவிர்ப்பேன். ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்வேன். தேவதத்தா! நீ இன்னும் இதன்பொருட்டு வாதாடுவதாயின் நாம் பெரியோரை யணுகி அவரைக்கொண்டு நம் வழக்கைத் தீர்க்கச்சொல்லு

வோம். அவர்கள் தீர்ப்புக்கு உடன்பட்டு நடப்போம்" என்றார்.

அவ்வாறே நடந்தேறியது. இவ்விருவர் தம் சண்டையைத் தீர்க்க வாதிப் பிரதிவாதிகளின் கட்சிகளும் இருதிறத்தாரது நியாயா நியாயங்களை வாதித்தற்கு ஒரு சபையும் கூடியது. அச்சபையின் அபிப்பிராயங்களைக் கேட்டுத் தீர்மானிக்க ஒரு நியாயாதிபதியும் ஏற்பட்டனர். சிலர் இதுவே சரி எனவும், சிலர் அதுவே சரியெனவும் கூறி இருகட்சிகளிலும் பலர் வாதித்தனர். அவ்வேளையில் திடீரென்று ஒரு யோகீசுவரர் எழுந்து, "சபையோரே! கேளுங்கள்! இவ்வுலகத்திலுள்ள உயிர்கள் எத்தகைய நிலையில் இருப்பினும் சரி, அவை விலை மதித்தற்கரிய அருமை வாய்ந்தவை. உயிர் எனும் பொருட்குச் சிறிதெனினும் சிறப்பேனும் மதிப்பேனும் உண்டெனின் அதை அழிக்க நாடுகின்றவனுக்குள்ள உரிமையினும் அதைக் காக்க முயலுவோனுக்குள்ள உரிமை அதிகமேயாம். கொல்லுகின்றவன் தன்னால் மறுபடியும் படைத்தற்கியலாத உயிரை நாசம் செய்கின்றான். காக்கின்றவனோ உலகை உயிர்மயமாய் நிறைக்கின்றான். ஆதலால், அப்பறவை சித்தார்த்தருக்கே சேரவேண்டும்" என்று மொழிந்தார். இத்தீர்மானத்தை யாவரும் அங்கீகரித்தனர். அரசன் இங்ஙனம் முடிவு செய்த அந்த யோகியை உபசாரம் செய்து அவருக்குப் பரிசளிக்க வேண்டுமென அவர் இருந்த பக்கமாய்த் தேடியபொழுது அவரைக் கண்டிலன். அங்கு அருகாமையில் நின்றிருந்தவர்கள் அவர் இருந்த இடத்தினின்று ஓர் நாகப்பாம்பு பாய்ந்தோடுவதைமட்டுமே காணலாயினர். என்ன விந்தை! இந்த உலகத்திற்கு உதவி புரிவதற்காக தேவர்கள் இங்ஙனமே பன்முறை உருமாறி வருகின்றனர். இதுமுதல் நம் புத்ததேவர் தமது கருணைப் பெருக்கால் அன்பின் செயல்கள் பல செய்யலாரம்பித்தார்.

எனினும் நம்மிறைவர் ஒரு சிறு பறவையின் துயரமன்றிப் பிற துயர் அறிவரோ? அந்த ராஜஹம்சம் புண் ஆறியதும் ஆனந்தத்தோடு தன் இனத்தைச் சேரப் பறந்தேகியது.

இதன் பின்னர் ஒரு நாள் அரசன் சித்தார்த்தரை அழைத்து "அருமை மகனே! இவ்வசந்த காலம் எவ்வளவு மனோகரமாயிருக்கின்றது! பூமி தன்பாலுள்ள செல்வத்தைப் பாடுபடும் குடியானவனுக்கு எங்ஙனம் அளிக்கின்றது என்றும், எனக்குப் பிற்காலத்தில் உனக்குரிமையாகவிருக்கும் இந்நாடு எங்ஙனம் எல்லோருக்கும் உணவளித்து நமது பொக்கிஷத்தையும் நிறைக்கின்றதென்றும் நீ பார்க்க விரும்புகின்றனையன்றோ? நவமான தளிரிலைகளும், நானாவித மலர்களும், பசும் புல்லும் செழிக்கப்பெற்றுக் கலப்பையின் கீச்சொலியும், வண்டின் ரீங்காரமும் முழங்க இனிதுற விளங்கும் இவ்விளவேனிற் காலத்தில் இந்நாட்டின் வசீகரத்தைக் காண நீ என்னுடன் வரவேண்டும்" என அழைத்தான். அங்ஙனமே மன்னனும் மைந்தனும் குதிரை மீதேறி நாட்டுப்புறங்களைச் சுற்றிப் பார்க்கச் சவாரி போயினர். ஏரிகளும் வாவிகளும் சோலைகளும் நிறைந்த ஓர் அழகிய இடம் சேர்ந்தனர். அங்கு செந்நிறமான வளமேறிய வயலில் 'கிரீச்' என்று கரைகிற கலப்பைகளை வலிமிக்க மாடுகள் கழுத்துக்கள் தாழ இழுத்து உழுதுகொண்டிருந்தன. கலப்பையின் கொழுவினின்றும் செழித்த வளமிக்க மண் மிருதுவான நீண்ட அலைகள் வீசி உழுவு சாலின் இருகரைகளிலும் விழுந்துகொண்டிருந்தது. கலப்பைக் கொழு நிலத்தினுள் ஊடுருவிப் பிளந்து செல்ல உழவன் கலப்பைமீது நின்று அழுத்திக்கொண்டிருந்தனன். தென்னஞ் சோலைகளிற் சிற்றோடைகள் சின்னஞ்சிறு அலைவீசி 'கடகட, களகள' எனப் பிதற்றிக்கொண்டேகின. அவ்வோடைகளின் இரு கரைகளிலும் அருகம்

புல்லும், பசும் புல்லும் மெத்தெனத் தழைத்திருந்தன. சில வயல்களில் குடியானவர்கள் விதை விசிக்கொண்டிருந்தனர். வசந்த காலம், சலப்பும் பல்லிகளாலும் இரையும் தேனீக்களாலும், இன்னிசை பாடும் ஞிமிறினங்களாலும் ஊர்ந்தேறும் உயிர் வகைகளாலும் காதற் கதையுரைக்கும் கருங்குயிற் கீதங்களாலும், பேரானந்தமயமாய்க் கலகலத்தது. காவுகள்தோறும் கிள்ளைகள் மழலைச் சொற்கள் பொழிந்தன. பல்வகைப் புள்ளினங்களின் தீங்குரல்கள் மயங்கின. மஞ்சக் குருவி தன் பச்சிலைக் கூண்டினின்று ஒலி சிந்தி விளையாடியது. வெண்கோடுகள் தீட்டப் பெற்ற அணிற் பிள்ளைகள மரங்களினடியில் கீச்சொலி கிளப்பிக் குதித்தோடின. மீன்கொத்திப் பறவைகள் நீரோடைகளின் மீது படிந்து கிடந்த மரக்கிளைகளிலிருந்து அங்கு மிங்கு மோடிய மீன்களை நோக்கியிருந்தன. பல்வண்ணங்களாற் பொலிந்த கோயில் மண்டபங்களின் மயில்கள் ஆடின. மாமரச் சோலைகளில் தீங்குயில்கள் இனிய கீதம் பாடின.

நீலப்புறாக்கள் இணைகள் தோறும் எதிரொலி முழங்கக் கூவின. சிறிது தூரத்திற்கப்பாலிருந்த ஓர் கிராமத்தினின்று ஒலித்த கலியாண வாத்திய கோஷம் சோலையின் இசைகளோடு மருவி முழங்கிற்று. இளவரசர் இவையனைத்தையும் கண்ணுற்றுக் களிப்பெய்தினர். ஆயினும் இவற்றை யெல்லாம் ஆழ்ந்து நோக்க, ரோஜாமலர் போன்ற இவ்வாழ்க்கையின்கண் மறைந்திருந்த முட்கள் காணலாயின. மேனி கருகிய குடியானவன் இவ்வுலகில் உயிருடன் வாழும் உரிமையின்பொருட்டு அற்பக் கூலிக்காய் நெற்றிவெயர்வை நிலத்திற் சிந்த அரும் பாடுபட்டனன். குடியானவன் எரிகின்ற வெயிலில் பாரமான கலப்பையை இழுப்பதற்காய் எருதுகளின் சூரிய காந்திப் பட்டுப் போன்ற முதுகைக் கோலினால் குத்திப் புண்படுத்தினன். பல்லி எறும்பையும், பாம்பு பல்லியையும், பருந்து பாம்பையும் பல்லியையும் கொன்று தின்றன. மீன் கொத்திப் பறவை வெகுநேரம் பாடுபட்டு விரும்பிப் பிடித்த மீனை மஞ்சப் பருந்து பிடுங்கிக் கொண்டோடிற்று. அழகிய வண்ணாத்திப் பூச்சியை வேட்டையாடி உண்ணும் புல்புல் குருவியை செம்பருந்து வேட்டையாடித் தின்றது. இங்ஙனம் ஒரு கொலைபாதகன் மற்றொரு கொலைபாதகனைக் கொன்று தின்ன, முடிவில் அக்கொலைபாதகனை அவனிலும் வலிமிக்க ஓர் கொலைபாதகன் தனக்கு இரையாக்கிக் கொண்டு பிழைக்கின்ற தன்மையுடைய உயிர்களின் வாழ்க்கைப் போராட்டம் எங்கும் தெள்ளத் தெளிவாய்த் தோன்றிற்று. இவ்வுலகில் ஓருயிர் மற்றோருயிரின் மரணத்தினால் பிழைக்கின்றது. ஒருவனை யொருவன் கொன்று பின்னர் தானும் மடிகின்ற மானிடன் முதலாய் புழு ஈறான சகலஜீவகோடிகளும் பரஸ்பரம் இயற்றி வரும் இக்கொடிய போரினை அழகிய வெளித் தோற்றங்கள் நடன சாலையின் முன் தொங்கும் பகட்டான திரைச்சீலையே போல மறைத்து விடுகின்றன.

சித்தார்த்தர் பசிதாங்க வொண்ணாத உழவனையும், மெய்வருந்திப் பாடுபடும் மாடுகளையும், நுகத்தைத் தாங்குவதினால் மாடுகளின் கழுத்தில் உண்டான புண்களையும், உயிருடன் வாழும் உரிமைக்காக ஏற்படும் கொடிய வாழ்க்கைப் போராட்டத்தையும் கண்ணுற்றுப் பெருமூச்செறிந்து, "எனக்குக் காண்பிக்க விரும்பிய உலகத்தின் அழகு இஃதோ! அந்தோ! அவ்வேழை உழவோனது உணவு நெற்றி வேர்வையால் உப்பிறு முவர்ப்பாயிருக்கின்றதே. அம்மாட்டின் உயிர் கவரும் உழைப்பு என்னே? இம் முட்புதரான கானகத்திலும் வலிமிக்க உயிர்கட்கும் வலியற்ற உயிர்கட்கும் தம்மில் நடைபெறும் சமரம் எவ்வளவு கோரம்? ஆகாயத்திலும் எத்தனை கொடும் போர்! நீரிலும்

இப்போராட்டம் குறைந்த பாடில்லை போலும். ஐயோ! என்னை விட்டுச் சற்று அகல்மின். யான் காண்கின்ற இக்காட்சியைக் குறித்துச் சிறிது சிந்தனை செய்ய வேண்டுகின்றேன்'' என உயிர்கள் மீதுள்ள பேரன்பினுல் மனங் கொதித்துரைத்தனர்.

பின்னர், ஒரு நாகமரத்தடியின்கீழ் பத்மாசனத் தமர்ந்து, இவ்வுலக வாழ்க்கையின்கண்ணுள்ள உயிர்க் கொலை யெனும் பிணியையும் அதன் மூலகாரணத்தையும் அதற்குகந்த மருந்தையுங் குறித்துச் சிந்திக்க வாரம்பித்தனர். அவரது உள்ளத்தில் உலகத்துயிர்களின் பொருட் டெழுந்த வானளாவிய பெருங் கருணையாலும், ஜீவகோடிகளிடத்துள்ள சமபாவமான அள விறந்த அன்பாலும், உயிர்க்குற்ற நோயை அகற்றுதற்கு நாடும் பேரவாவாலும் அவ ருடைய மனமாதிகாணங்கள் புறச்செயலும் அகச்செயலுமற்று தியான நிலையடைந்தது. இங்ஙனம் நம்மிளைஞர் நிர்வாண மார்க்கத்தின் முதற்படியாகிய தியான நிலை பெற்றனர்.

அத்தருணம் ஸப்தரிஷிகள் ஆகாசமார்க்க மாய்ப் பறந்து அந்நாகமரத்தை யணுக, எக் காரணத்தாலும் தளாத அவ்விண்ணோரது செட்டைகள் திடீரென அசைவற்றன. அது கண்ட அத்தேவர்கள் ''இஃது என்னே! மேலும் செல்ல வியலாதவாறு நம்மை தடுக்க ஈங்கு யாதுளது?'' என வினவினர். அன்பின் திவ்விய அலைகளை உணரும் தன்மையினோ தலால் பரிசுத்தர் வாழுமிடங்களை வெகு யெளி தில் தெரிந்துகொள்ளும் வல்லமையுடைய அத் தேவர்கள் கீழே நோக்கியபொழுது, செவ் விற ஒளி சுற்றிலும் வீச இவ்வுலகத்தின் பொருட்டு பெருங்கருணை வடிவாகி அதைக் காக்குமாறு ஒரு வழி காணவேண்டுமெனும் உறுதிப்பாடுடன் நீடிய நிஷ்டையில் அமர்ந் திருந்த புத்தர்பிரானைக் கண்ணுற்றனர். அச் சமயம் அந்தரத்து ஓர் அசரீரி தோன்றி ''ஓ தேவர்களே! இவ்வுலகினைப் புரக்கவந்த தேவாதி தேவரிவர். கீழிறங்குமின்! தொழு மின்!'' என மொழிந்தது. அவ்வண்ணமே அத்தேஜோரூபிகள் கீழிறங்கித் தம் செட்டை களை யொடுக்கி அஞ்சலிபத்தராய் நம்தேவனைப் புகழ்ந்து பாடிப் பின் இச்செய்தியை வானவர்க் கிறைய அதிவிரைவில் விண்ணுலகேகினர்.

சுத்தோதனனின் ஏவலாளர் சித்தார்த்தரைத் தேடிவந்து அவர் நாக மரத்தடியில் நிஷ்டையி லமர்ந்திருக்கக் கண்டு அங்கு அவருக்காகக் காத் திருந்தனர். பகலோன் வானமேடையின் மத் தியில் வந்தனன். சற்று நேரத்தில் மேற் றிசைக் குன்றுகள்மீது இறங்கிவிட்டனன். இவ்வுலகத்து மற்றேனைய பொருட்களும் மரங்களும் நிமிஷந்தோறும் தம் நிழலை மாறுத லடைவிக்க, சித்தார்த்தர் வீற்றிருந்த நாகமரம், மேற்றிசை சாயும் பருதியின் செங்கிரணம் அவ ரது திவ்விய முகத்திற் சிறிதும் படாவண்ணம் தன் சாகைகளை அத்திசையிலேயே சாய்த்து நிழலகற்றாது நின்றது. அதுகண்டு வியந்து நின்ற ஏவலாளர் ரோஜாமலர்த் தருக்களிடை நின்று எழுந்த ஓர் அசரீரி ''மன்னன் மைந்தரை எழுப்பிடேல்! அவருள்ளத்தில் குடிகொண் டுள்ள நிழலகன்றாலன்றி அம்மரமும் தன்னிழ லைச் சிறிதும் மாற்றிடாது'' என்றுரைத்த சொற்களைமட்டும் கேட்கலாயினர்.

இரண்டாவது அத்தியாயம்.

சித்தார்த்தருக்குப் பதினெட்டு வயதானதும் அவர் உல்லாசமாய் வாழ்தற்கு மூன்று அரண் மனை கட்டவேண்டுமென சுத்தோதன மன்னன் கட்டளையிட்டான். திறமை வாய்ந்த சிற்பர்கள் குளிர் காலத்தில் கதகதப்பாயிருக்கத் தேக்கு, கருங்காலி முதலிய பெரிய மரங்களைச் செதுக்கி யெடுத்த சதுர உத்தரக் கட்டைகளாலும், அழகிய சித்திர வேலையடங்கிய அகிற் பலகை

களாலும் சந்தன மரத் தூண்களாலும், ஓர் அரண்மனை அமைத்தனர். கோடையில் குளிர்ச்சியா யிருப்பதற்கென்று சலவைக் கற்களால் இன்னொரு மாளிகையும் சண்பகம் மலர்கின்ற வசந்த காலத்தில் வாழ்வதற்கென்று நீலக் கற்களும் பலநிறக் கற்களும் கொண்டு வேறொரு மாளிகையும் நிர்மித்தனர். அவ்வழகிய மாளிகைகளைச் சூழ களின நந்தவனங்கள் நாநுவிதத் தளிர் துன்றி மதுமாரி சொரிகின்ற மலர்கள் தாங்கின. வானத்தழகும் தம்மெழிலும் காட்டும் ஒளிர்மணி நீரோடைகள் மணமண, முணுமுணு என்று பாடிக்கொண்டே அங்குமிங்கும் சுயேச்சையாய் ஓடின. பசும் புற்கம்பளங்கள் போர்த்த மைதானங்களும் கஸ்தூரி மணம் கமழ்த்தும் சோலைகளும் கண் கவர் காட்சி தந்தன. அச்சோலைகளின் மத்தியில் ஆங்காங்கு ஒளிமணி மண்டபங்களும், தனிரிலைப் பந்தர்களும் அமைந்து விளங்கின. மயநிர்மாணம் போன்ற அம்மாளிகைகளில் கணந்தோறும் நவநவமான கேளிக்கை விநோதங்கள் சூழ, சித்தார்த்தர் தம் மனோபீஷ்டப்படி வாழலாயினர். காளைப்பருவமடைந்த அவ்வாலிபருக்கு இவ்வுலகவாழ்வு வெகு இனிமையாகவே இருந்தது. எனினும் சில தருணங்களில் ஆகாயத்தில் அதிவிரைவாய்க் கடந்து செல்லும் கார்மேகம் தெள்ளிய நீரோடையை இருளுறச் செய்வதேபோல் இதன் முன்னர் கண்ட காட்சிகளால் தமக்குள் குடிகொண்ட பழைய சிந்தனைகள் அவர் உள்ளத்தைக் கலைத்துவிடும். அத்தருணங்களில் அவர் நீடிய சிந்தனைகளில் மூழ்கிடுவார்.

இங்ஙனம் தன் மகனைப் பலவகைச் சுகபோகாதிகளின் மத்தியில் வைத்திருந்தும், தன் மகன் அவற்றில் நிலையான விருப்பம் கொள்ளாததுகண்ட சுத்தோதனன் இதற்கென் செய்வதென்று தன் அமைச்சர்களை வினவினன். அமைச்சர்களெல்லோரும சித்தார்த்தரின் அறவிறச் சிந்தனைகளை மாற்றுவதற்குப் பற்பல உபாயங்கள் உரைத்தனர். ஆனால் மந்திரிப்பிரதானி, "அரசனே! காதல் ஒன்றே நம் இளவரசாது குணப்பிணக்குகளை மாற்ற வல்லது. இளங்குமரனது சோம்பித் திரியுர உள்ளத்தைக் கவருதற்குக் கடந்த ஞானியையும் கிட்டவல்ல மடவார் மாயவலையை வீசுங்கள். உள்ளையும் ஊனையும் உருக்கும் அழகொழுகு மென் மடவாரின் எழிற் சிறப்பை நம் சிறுவர் சிறிதேனும் அறிவாரோ? விண்ணுலகையும் வானவர் வாழ்வையும் ஞானத் துறையையும் நஞ்செனச் செய்து கமலமென் மலரைப் பழிக்கும் கன்னியர்தம் விழியின் வித்தையை இவர் சிறிதும் அறியாரே. ஆதலால் அவருக்கு அழகிய தோழிகளையும் கருத்தைக் கவரும் மனையாளையும் அளியுங்கள். உருக்குச் சங்கிலிக்குங் கட்டுப்படாத கல்நெஞ்சமும் ஓரிளங் கன்னியின் பசிய நீலப்பாசி போன்ற நீண்ட கூந்தலுக்குக் கட்டுப்பட்டுவிடும்" என்றனர். அதைக்கேட்ட அமைச்சர்கள் அனைவரும் அதுவே சரியென ஒத்துக் கொண்டனர்.

அப்பொழுது அரசன் தன் அமாத்தியர்களை நோக்கிக் கூறுகின்றான், "தேர்ச்சித் துணைவர்களே! அங்ஙனம் செய்கிறதற்கு ஓர் இடறல் இருக்கின்றதே. நாமே ஓர் பெண்ணை அவனுக்கென்று தெரிந்தெடுத்தால் காதல் வேறொரு கன்னியை நாடுமன்றோ? அங்ஙனமின்றி, அவன் தானாவே தனக்குகந்த ஒரு பெண்ணைத் தெரிந்தெடுத்துக்கொள்ளட்டும் என்று அழகிய பெண்களை ஓரிடத்தில் கூடும்படிச் செய்தால் இன்னது என்றறியாத அத்தகைய கூட்டத்தைக் கண்டு புன்னகை செய்து சீச்சீ என்று தள்ளிவிடுவான்" என்றனன்.

அங்கு ஒரு மந்திரி "அரசனே! அங்ஙனமன்று. கானகத்தில் வன்சிக்கமானது திறமை வாய்ந்த வேடுவன் வில்லினின்று ஒரு பாணம்

கிளம்புமட்டுமே சுயேச்சையாய்த் திரியும். இந்த வுலகில் எத்தகைய மனோபாவமுடைய வரையும் கவரவல்ல ஓர் அழகிய முகம் அல்லது ஓர் அழகிய பொருள் உண்டு. அப்பொருள் அல்லது அந்த முகம் விரும்புவோர்க்கு வானுலகத்து விந்தை போல விளங்கும். ஆதலால், மன்னா! நமது நகரத்தில் ஓர் திருவிழா நடைபெறச் செய்க. அத்திருவிழாவிற்கு இந்நாட்டிளம்பெண்கள் அனைவரும் நம் அரண்மனையிற் கூடவேண்டுமெனக் கட்டளையிடுக. வனப்பிலும் யௌவனத்திலும் சிறந்தோங்கும் சாக்கியகுலத்தணங்குகள் அனைவர்க்கும் பற்பல பரீட்சைகள் நடைபெறு மென்றும், அவற்றில் தேறியவர்க்கு இளவரசர் பரிசளிப்பாரெனவும் நாடெங்கும் பறைசாற்றுக. அங்ஙனம் அழகிற் சிறந்த இளம் பெண்கள் சித்தார்த்தர்முன் நடந்து செல்கையில் அவர்களுள் யாரேனும் ஒருத்தி அவர் மனதையும் கவரும் வசீகரத் தன்மையுடையளாயிருத்தல் கூடும். அவ்வாறு நாம் காதலைக் கொண்டே காதலை எழுப்பி நம் இளவரசரை இன்பவாழ்க்கையிற் புகுத்தி விடலாம்'' என்றுரைத்தார். அதுவே தீர்ந்த முடிவாயிற்று.

பறை சாற்றுவோர் நகரெங்கும் சென்று அரசன் கட்டளையை அறைவாயினர். அரசனது கட்டளைப்படி நகரத்து மடமங்கையர் அரண்மனையிற் கூடலாயினர். அவர்களெல்லோரும் அந்நகரத்து அணிமலர்கள். ஒவ்வொரு பெண்ணும் நீராடி, முகமினுக்கி, கஸ்தூரித்திலக மிட்டு, கரிய மென் கூந்தலை நாஞவிதமாய் அலங்கரித்து, வேல் போன்ற விழிகட்கு அஞ்சனந் தீட்டி, கல்லணியும் பொன்னணியும் பூட்டி, கல்கலத்த புதுப்பட்டாடை கட்டி, இடையில் மேகலை மாட்டி, காலில் செம்பஞ்சிக் குழம்பு பூசி, அழகுக்கழகு செய்திருந்தாள். வட இந்தியாவின் அவ்விளங் கொடிகள் குவளை மலர்க் கண்களைக் கமலச்சேவடிகளிற பொருத்தி, இளவரசாதுசிங்காசனத்தின் முன்னே அன்னநடை நடந்த காட்சி ஓர் அற்புதக் காட்சியாயிற்று.

சித்தார்த்தர் அரண்மனைச் சிங்கார மண்டபத்தில் அச்சம் விளைவிக்கும் ராஜகப்பிரதாபுடன், சாந்தம் முகத்தில் நடனம் செய்ய, காமம் அகற்றிய தூயராய் வீற்றிருந்தனர். அங்கு அவரிடமிருந்து பரிசு பெற வந்திருந்த பெண்கள் அவருடைய சிங்காதனத்தின் முன் செல்கையில், தங்களுக்கு இளவரசாது கடைக்கண் பார்வை கிட்டுமென எண்ணி மனப்பால் குடித்திருந்தனர்; அன்னவரது உள்ளங்கள், அவர் தங்களுடைய சுக போகாதி இச்சைகளுக்கதீதமானவர் என்றறிந்து திடீரென்று நடு நடுங்கின. அவர்கள் பெரிதும் நாணி, விறைத்தாடிய கையை நீட்டிக் குனிந்த பார்வையோடு பரிசு வாங்கிச் சென்றனர். அப்பெண்கள் அவருடைய சந்நிதானத்தில் ஒரு நொடிப் பொழுதும் தங்கத் துணிந்திலர். ஏனெனில் அவர் அத்தகைய தெய்வீகம் வாய்ந்தவர். ஐம்புலன்களை வென்ற துறவிகளினும் சிறந்த மனப்பாங்குடையவர்.

இங்ஙனம் ஒருவர்பின் ஒருவராய் அங்கு கூடியிருந்த பெண்கள் அனைவரும் பரிசு பெற்றுச் சென்றனர். பரிசுகளும் தீர்ந்துவிட்டன. அத்தருணம் கடைசியாக யௌவன யசோதரை வந்தனள். ஒளிவீசும் எழில் வாய்ந்த இவ்விளங்கன்னி சிங்காதனத்தை யணுகிச் சித்தார்த்தரை நோக்கி நின்றபோது அவர் திடீரென தம்மியல்பிழந்து திடுக்கிட்டெழுந்தனர். இங்ஙனம் அவர் மாறுதல் அடைந்ததை அருகாமையில் நின்றிருந்தவர்கள் குறித்துக் கொண்டனர். சித்தார்த்தர் அக்கன்னியை ஒரு முறை ஏறயிறங்க நோக்கினர். அவள் வேதன் படைப்பின் எல்லையாய் விளங்கினள். அவள் வடிவில் உமையாள்

ஒத்தவள், வனப்பில் சொல்லுங் கடங்கா வசீகரம்வாய்ந்தவள்; அவள் ஒருத்தியே இளவரசரது முகத்தையேறெடுத்து நோக்கினள். அவள் மலர்க்கைகளை நீட்டிக் கொண்டு "எனக்கொரு பரிசளஙோ?" என்று வினவிப் புன்னகை பூத்தாள். அதற்கு இளவரசர், 'சோதரியே! பரிசுகள் யாவும் தீர்ந்து விட்டன. இந்நகரத்திற்குப் பெருமைதன்னத் தோன்றிய எழிலாய்! வேறு பரிசு இன்றெனினும் இதை அணிந்துகொள்' என்று தமது கழுத்திலிருந்த மாகதமாலையைக் கழற்றி அவளுடைய மெல்லிடையிற் பூட்டினர். அத்தருணம் கண்ணோடு கண் கலந்து இருவருள்ளத்தும் காதல் பூத்தது. இளவரசர் பரிசளித்தபோது அவரருகாமையில் நின்றிருந்தோர் அந்த நடந்தவை அனைத்தையும் சுத்தோதன மன்னனிடம் சாங்கோ பாங்கமாய்ப் படித்தனர். அங்கு கூடியிருந்த பெண்கள் தத்தம் பரிசுகளை வாங்கிச் செல்கையில் சித்தார்த்தர் எவரையும் மதியாது வீற்றிருந்ததையும் முடிவில் ஸுப்ரபுத்தனுடைய மகளாகிய யசோதரையைக் கண்டவுடனே அவர் தம்மியல் பிழந்து திடுக்கிட்டெழுந்ததையும், அவர் அவளிடம் கனிவுடன் பேசித் தம் கண்டமாலையைக் கழற்றி அவள் இடையிற் பூட்டியதையும், அத்தருணம் அவ்விருவர் கண்களிலும் நிகழ்ந்த காதல் நாடகத்தையும் வெகு விமரிசையாக எடுத்துரைத்தனர்.

அது கேட்ட மன்னன் மனம் பூரித்தான். 'ஆகா! என் செல்வக் குமாரனின குணப்பிணக்கை மாற்றவொரு மருந்து கண்டேன். அம்மருந்தை யிக்கணமே அவனுக்களிக்க உபாயம் செய்மின். அப்பெண்ணை என் மகனுக்கு மணம் பேச ஸுப்ரபுத்தனிடம் தூதர்களை அனுப்புமின்' என்றுரைத்தான்.

தூதர்கள் அக்கணமே ஸுப்ரபுத்தனிடம் சென்று மன்னன் விருப்பை அறிவித்தனர். அப்பொழுது ஸுப்ரபுத்தர் "ஓ! தூதர்களே! பல நாட்டு அரசிளங்குமார்களும் இந்நாட்டு இராஜபுத்திர வாலிப வீரர்களும் என் மகளை மணம் புரிய விழைகின்றனர். சாக்கிய குலத்து முறைப்படி சாந்த குணமுள்ள சித்தார்த்தன், என் மகளை விவாகம் செய்ய விரும்புகின்ற மற்ற வாலிபர்களை வில் வளைத்தல், வாள் வீசுதல், அசுவசாத்தியம் முதலியவற்றில் வெல்வானாகில் என் மகளை அவனுக்கே மனக்களிப்புடன் அளிக்க எத்தகைய தடையுமிராது என்று அரசனுக்குரைமின். ஆனால் அரண்மனையில் சிறைப்பட்ட பறவைபோல் அடைபட்டிருக்கும் இளவரசர் இவற்றையெலாம் எங்ஙனம் செய்து முடித்தல் கூடும்?" என்றார்.

இச்செய்தி அறிந்த சுத்தோதனன் நெஞ்சம் புண்ணாயினன். ஏனெனின் இளவரசர் யசோதரையைத் தமக்கு மணமுடித்து வைக்க வேண்டுமென இரண்டொருதரம் மன்னனைக் கேட்கலாயினர். அந்தோ! அது வீணாசையன்றோ! வில் வளைப்பதில் வீரனான தேவதத்தனை வெல்வதெங்ஙனம்? காற்றினும் கடிதிலோடும் அனந்தன்றிபான அசுவங்களை நடத்தவல்ல அர்ச்சுனனை வெல்வதெவ்வாறு? கூரிய வாள் வீசுவதில் வல்லவனான நந்தனை தோற்கடித்தல் கூடுமோ? இங்ஙனம் கவலையுற்றிருந்த மன்னனை நோக்கி இளவரசர் புன்னகை பூத்திரைப்பாராயினர்: "தந்தையே! இவ்வித்தைகளும் யான் சிறிதறிவேன். அஸ்திர சஸ்திரப் பிரயோகங்களும், அசுவ சாத்தியமும், வீரர்கட்குரிய மற்றேனைய பயிர்ச்சிகளும் யான் கற்றுளேன். அப்பெண்ணை மணம் புரியத் துணியும் மற்றனைவரையும் அவரவர் விரும்பும் கலைகளில் எதிர்த்து வெல்லுவேன் என்று இந்நாடெங்கும் பறைசாற்றும். இதன் பொருட்டு யான் என் காதலியை இழக்கேன்"!

என்றுரைத்தார். அவ்வாறே நாடெங்கும் பறை சாற்றலாயினர்.

ஏழாவது நாளன்று நகரமாக்களும், நாட்டுப்புறத்தாரும், பிறதேசத்து ஜனங்களும் கபிலவாஸ்துவின் அருகிலுள்ளவொரு விசாலமான மைதானத்தில் வந்து கூடுவாராயினர். யசோதரை சர்வாலங்கார பூஷிதையாய் இரதத்திலேறி உற்றாரும் உறவினரும் புடைசூழ, பதினெண்வகை வாத்தியங்களும் முழங்க சாக்கியகுல வழக்கப்படி அவளுக்கென்றமைத்திருந்த கூடாரத்தில் வந்திறங்கினள். வீரதீரப் பிரதாப மோங்கிய தேவதத்தன், அர்ச்சுனன், நந்தன் முதலிய வீரர்கள் குதிரைமீதேறி அங்கு வந்து சேர்ந்தனர். சித்தார்த்தர் தமது கண்டகன் என்னும் வெண்குதிரை மீதேறி மைதானத்திற்கு வந்தனர். அவர் ஏறிவந்த குதிரை இதன் முன் ஒரு பொழுதும் அத்தகைய ஒரு ஜனத்திரளைக் கண்டறியாததால், அது உரக்கக் கனைத்துக் கொண்டும், பின் கால்களை நிலத்தில் உதைத்துக் கொண்டும் நின்றது. சித்தார்த்தரும் அப்பெருங் கூட்டத்தையும், மன்னரது வாழ்க்கையைப் பார்க்கிலும் தாழ்ந்த வாழ்வும், அரசர்களுடைய ஆடம்பரங்களும் சுகபோகாதிகளும் சிறிதுமே நுகருதற்கில்லாத ஜீவியமும் அரசர்களுக்கும் மற்றெல்லோருக்கும் பொதுவாயுள்ள சுகதுக்கங் கட்குப் பாத்திரமான மனிதர் கூட்டத்தைக்கண்டு மிக்க வியப்புற்று நின்றார். பிறகு சௌந்தரிய வதியாகிய யசோதரையைக் கண்டதும் அவர் புன்னகை பூத்து, கடிவாளத்தை இழுத்துக் கண்டகனுடைய விசாலமான முதுகினின்று கீழே குதித்து, அங்குக் கூடியிருந்த ஜனங்களை நோக்கி, "யான் வீரர்கட்குரிய வித்தைகளிலே தேர்ச்சியில்லான் எனவும், அதோ! அந்நல் முத்தை அடைவதற்கு தகுந்தவனல்லேன் எனவும் அவ்வழகிற்சிறந்த அணங்கை அடைய விரும்புவது எனக்கடாததெனவும் கருதும் என் எதிரிகள் திறமை வாய்ந்த பல அஸ்திர சஸ்திரப்பயிற்சிகளிலாவது அல்லது வேறு வித்தைகளிலாவது என்னைத் தோற்கடிக்க வேண்டுமெனின் அவர்கள் என்முன் வரலாம்!" என்று கர்ஜித்தார். அப்பொழுது தேவதத்தனும், அர்ச்சுனனும், நந்தனும் அவரை சஸ்திர வித்தையில் எதிர்த்தனர். நந்தனும் அர்ச்சுனனும் தமது பாணங்களுக்கு இலக்காய் இரண்டு பெரிய பேரிகைகளை ஒன்றரை யோசனை தூரத்திற்கப்பால் வைத்தனர். தேவதத்தன் தன் பேரிகையை இரண்டு யோஜனைக் கப்பால் வைத்துக் கொண்டனன். சித்தார்த்தர் தமது பேரிகையை இரண்டரை யோசனைக்கப்பால் வைக்கும்படி கட்டளையிட்டார். அப்பொழுது சித்தார்த்தருடைய பேரிகை ஒரு சிறு சோகி போலத் தோன்றிற்று. அம்மூவரும் தத்தம் வில்லைக் குலைத்துப் பாணப் பிரயோகஞ் செய்தனர். நந்தனும் அர்ச்சுனனும் அவர்களுடைய பேரிகைகளைத் துளைத்தனர். தேவதத்தனுடைய வில்லினின்று வெளியேறிய குறி தவறாத பாணம் அவனுடைய பேரிகையின் இருபுறத்தையும் துளைத்துக் கொண்டேகியது. இது கண்ட ஜனங்கள் ஆர்ப்பரித்தனர். அழகின் மகள் யசோதரை தன்னுள்ளம் குடிகொண்ட இளவரசருடைய பாணம் எங்கு தவறிவிடுமோ என அஞ்சி, அங்ஙனம் நிகழுமாயின் தான் அதைக் காணக் கூடாதெனத் தன் ஆடையின் முன்றானையால் முகத்தை மறைத்துக் கொண்டாள். சித்தார்த்தர் அம்மூவரும் உபயோகித்த வில்லை வாங்கிப் பரிசோதித்தனர். அது நிறம் தீட்டிய பிரம்பினாலாகியது. உடும்புத்தோலினால் வரிந்துகட்டப்பட்டது. வெள்ளிக் கம்பியை நாணாக வுடையது. தோள்வலியும் மனவலியுமுடையோரே அதை ஒரு சிறிது வளைக்குந் திறனுடையார். சித்தார்த்தர் அதைக் கையில் வைத்து வளைத்து அதன் கோணல்களைத் தீர்த்தார்;

அந்த வில்லின் இரு நுனிகளும் ஒன்றையொன்று மருவி, அதன் வயிறு படபடென வெடிக்குமட்டும் ஞாணை இழுத்தார். உடனே அதைத் தெறித்து, "இது விளையாட்டு வில்லேயன்றிக் காதலியை அடைவதற்கான வல்லமை காட்டப் போதியதன்று. சாக்கிய வீரர்கள் உபயோகிப்பதற்கு இதனினும் திண்ணிய வில் எங்குமிலதோ?" என்று வினவினர்.

அப்பொழுது அங்கு கூடியிருந்தவர்களில் வயதான ஒருவர் "இந்நகரத்துக் கோயிலில் ஒரு பூராதன வில்லிருக்கின்றது. அது அங்கு எவ்வளவு காலமாக விருக்கிறதென்று எவருமறியார். அதை வளைத்து ஞாணேற்ற எவராலுமாகாது; அங்ஙனமே ஞாணேற்றினும், அதை இழுத்துப் பாணப் பிரயோகஞ் செய்ய இயலாது" என்று கூறினர்.

உடனே சித்தார்த்தர் "வீரருக்குகந்த அவ் வில்லைக் கொணர்மின்" என்றார். அவ்வண்ணமே கரிய எஃகினாற் செய்தவப் புராதன வில்லைக் கொண்டு வந்தனர். அதன் தண்டின் மீது பொன் வேலைகளும், காட்டெருமையின் கொம்பு போல வளைந்த தலைகளிற் பொற் கொடிச் சுருள்களும் பிரகாசித்தன.

சித்தார்த்தர் அதன் திண்மையை இருமுறை தம் முழந்தாளில் வைத்துச் சோதித்துப் பார்த்தபின், தேவதத்தனிடம் "தம்பி! இப்பொழுது இவ் வில்லை வளைத்து நீ உன் பேரிகையைத் துளை; பார்ப்போம்" என்றார்.

அந்த முரட்டு வில்லை அவர்கள் சிறிதளவேனும் வளைக்க வில்லை. அப்பொழுது சித்தார்த்தர் சிறிது முன் பக்கமாக உடலை வளைத்து, வில்லைக் குனித்து ஞாணேற்றினர். நன்றாய் விறைத்து நின்ற வில்லின் ஞாணை ஒரு முறை இழுத்துக் குணதொனித்தனர்.

பின்பு அவர் அந்த வில்லிற் குகந்த ஓர் சரமெடுத்து ஞாணிற் பதித்து இழுத்துவிட்டனர். அக் கூரிய பாணம் காற்றிறப் பிளந்து வெகு தூரத்திற் கப்பாலிருந்த பேரிகையில் ஊடுருவிப் பாய்ந்து, அத்துடன் நில்லாது அந்த மைதானத்தைக் கடந்து கண்ணுக்குத் தென்படாது மறைந்தது.

இதன் பின்னர் தேவதத்தன் வாள் வீசி வெட்டுவதில் அவரை எதிர்த்து, ஆறங்குலம் கனமுள்ளதொரு பனைமரத்தை ஒரே வீச்சில் அறுத்தெறிந்தான். அர்ச்சுனன் ஏழங்குல கனமுடையதொரு மரத்தைத் துணித்தெறிந்தான். நந்தன் ஒன்பதங்குலம் கனமுடைய ஒரு மரத்தைக் கூறுசெய்தனன்.

சித்தார்த்தரது வாள் நந்தன் அறுத்தெறிந்த தடிபோன்ற இரண்டு தடிகளை ஒரே வீச்சில் மின்போல வெட்டி மரங்களிரண்டையுங் கடந்து அப்புறஞ் சென்றது. சித்தார்த்தர் அக்கூரிய வாளை மிக்கத்திறமையோடு வீசியதால், அவ்விருமரங்களும் நான்கு துண்டுகளாகப் பிரிந்த போதிலும், அவை தாம் வெட்டுண்டதை அறியாதன போல் அங்ஙனமே நின்று விட்டன. இதைக் கண்ட நந்தன், "வாள் மழுங்கிற்று! வாள் மழுங்கிற்று!" என்று கூவினன்.

மரங்கள் அறுபட்டுக் கீழே விழாதது கண்ட பொன்னியற் கன்னி யசோதரை மனம் பதைத்தனள். அத்தருணம் அவள் துயரத்தையும், நந்தன் செருக்கையும் அடக்கக் கருதிய வாயு தேவன், தென் திசையினின்று ஓர் இளந் தென்றலை யூதினன்.

அங்ஙனமே அவ்விரு மரங்களின் வெட்டுண்ட துண்டுகள் மண்ணில் விழுந்து புரண்டன. இதன் பிறகு, அவர்கள் குதிரையேற்றத்தில் திறனுடையோன் யாவன் என அறிய வேண்டி பஞ்சகல்யாணிக் குதிரைகள் மீதேறிக் கொண்டு அந்த மைதானத்தை மும்முறை சுற்றியோடினர். சுவேதாசுவமான கண்டகன்,

மற்ற மூன்று குதிரைகளும் வெகுதூரம் பின்தங்கப் பறந்தோடியது.

அப்பொழுது நந்தன் "இத்தகைய சாகசம் யாரே செய்யார்? கண்டகனைப் போன்ற குதிரை மீதேறி, இங்ஙனம் அதி விரைவாய்ச் செல்வதும் விந்தையோ? இதன் முன்னர் எவரும் ஏறியறியாத குதிரையைக் கொணர்மின். அக்குதிரையை நடத்துவதில் திறனுடையோன் யாவன் என விங்கு கூடியிருக்குங் கனவான்களே நிதானிக்கட்டும்" என்றனன்.

அவ்வண்ணமே குதிரைக்காரர்கள் அரசனின் குதிரை லாயத்தினின்று கார்மேக நிறமான ஓர் ஆண் குதிரையை மூன்று இருப்புச் சங்கிலிகளாற் கட்டி யிழுத்துக் கொண்டுவந்தனர். எத்துணை பயங்கரம்! அதன் கண்கள் அச்சம் விளைத்தன. முறுக்கி முன்னோக்கி நின்ற காதுகள் அதன் அகவெருட்சியை வெளிக்காட்டின. அதன் விரிந்த நாசித் துவாரங்களினின்று காற்று அனலாய்ப்பாய்ந்தது. கழுத்திலுந் தலையிலும் வளர்ந்து படிந்திருந்த உளைமயிர் காற்றில் பறந்தது. அதன் காலில் இலாடமும் தைக்கப்படவில்லை. அதன் முதுகு சேணமும் கண்டறியாது. அதன் மீது எவருமே இதுகாறும் ஏறினரில்லை. அம்மூன்று சாக்கிய இளைஞரும் அதன் மீதேறியிருக்க முயன்றபொழுது, அது அம்மூவரையும் அவர் கொண்ட வீரதீரப் பிரதாபங்களோடு மண்ணில் எறிந்து உருட்டி விட்டது. அவர்களுள் அர்ச்சுனன் மட்டும் அதன் மீது சிறிது நேரமேறியிருந்தனன். அவன் அதன் சங்கிலிகளை நீக்கச் சொன்னான். அதன் கடிஞாணைத்தன் திறமைவாய்ந்த கைகளிலேந்தி அதன் இருபுறத்திலும் இரண்டடியும் இரண்டுதையுங் கொடுத்தனன். அதனால் அது பெரிதுஞ் சீற்றங் கொண்டு சண்டமாருதப் பிரகிருதியாகி அந்த மைதானத்தை ஒருமுறை சுற்றி வந்து திடீரென்று தன் கழுத்தை வளைத்து அர்ச்சுனன் காலைக் கௌவி அவனைப் பூமியிலிழுத்துத் தள்ளிவிட்டது. அவன் அன்று உயிர் தப்பியது நல்வினைப் பயனாயிற்று. ஏனெனின், அது அவனை உதைத்துக் கொல்ல யத்தனிக்கையில், குதிரைக்காரர்கள் ஓடோடியும் வந்து, அதை இருப்புச் சங்கிலிகளாற் கட்டிவிட்டனர். அந்நேரம் ஜனங்கள் "சித்தார்த்தர் அக்கரும் பூதத்தோடு விளையாட வேண்டாம்: அதன் வயிற்றினுள் எரிமலை போலும்! அதன் கண்ணும் மூக்கும் வாயும் அனல் பாயும் எரிமலை வாய்கள்போலும்!" எனக் கூவினர்.

ஆனால், சித்தார்த்தர் அக்குதிரைப்பாகர்களிடம் "அந்தச் சங்கிலிகளை நீக்கி விடுங்கள். அதன் உளையை மட்டும் என்னிடம் கொடுங்கள்" என்றுமொழிந்து, அதைத் தமது இடக்கையால் மெல்லெனப் பற்றி வலக்கையால் அதன் ஒரு கண்ணை மூடிக் காதில் தாழ்ந்த குரலில் ஏதோ சில சொற்கள் முணுமுணுத்தனர். பின்னர் வலக்கையால் அதன் முகத்தையுங் கழுத்தையுங் கொதிக்கும் விலாப்புறத்தையும் தடவிக் கொடுத்தார். அப்பொழுது கண்டோர் வியக்குமாறு அக்கரிய பரிமா நம்மிறைவரை அறிந்துகொண்டது போல, வெகு வணக்கமாய்த் தலை தாழ்த்தி அடங்கி ஒடுங்கி நின்றது. அது அவர் கைப்பற்றியிருந்த கடிஞாணை யுணர்ந்து, எல்லோருங்கண்டு களிக்க அவர் செலுத்தியவாறே நடந்தது. இதைக் கண்ணுற்ற ஜனங்கள் எல்லோரும், "இனிப் பரீட்சை வேண்டாம். சித்தார்த்தரே யாவரினும் மேலானவர்" என்று ஆர்ப்பரித்தனர்.

சித்தார்த்தரை எதிர்த்த இளைஞர் மூவரும் "சித்தார்த்தரே எம்மினும் சிறந்தவர்" எனக் கூவினர்.

யசோதரையின் தந்தை ஸுப்ரபுத்தர், "ஓ அரசர் செல்வமே! எம்மாசைக் களஞ்சிய

மாகிய நீ மற்றவரினுஞ் சிறந்து விளங்க வேண்டும் என்பதே எங்கள் பேரவா. அங்ஙனமே பலித்தது. எனினும் நீ உன் ரோஜாமலர்ச் சோலையின் மத்தியில் கனவுகள் கண்டு வாழ்ந்திருக்க, வீரர்கட்குரிய இவ்வரிய பயிற்சிகளையும், போர் வல்லமைகளையும், இலௌகிக வழக்கங்களையும் எங்ஙனம் கற்றறிந்தாய்? நன்று! நன்று! அழகிற் சிறந்த இளவரசே! நீ நாடிய கன்மணியை நீயே அணிந்திடுக!" என மொழிந்தார்.

கோமளாங்கியான இளம் யசோதரை, தான் வெகு ஆவலாய் எதிர் பார்த்த சொல் தன் தந்தை வாயினின்று வரவே, தன்னிடத்தினின்று வெளியேறி, கரிய நூலும் பொன்னூலும் ஊடுபாவுகளாயிழைத்தவொரு மெல்லிய பட்டினால் தன் முகத்தை மெதுவாக மூடிக் கையில் மல்லிகை மாலை யேந்தி, அன்ன நடை பின்னிட நடந்து, இளைஞர் கூட்டங் கடந்து வந்தாள்.

கருங்குதிரையினின்று கீழிறங்கி அதன் வணங்கித் தாழ்ந்த கழுத்தில் ஒரு திட புயம் பதித்து, குதிரையின் பக்கம் சிறிது சரிந்து அருளொளி வீசி நின்றிருந்த சித்தார்த்தரது முன்னிலையிற் சென்று, தாழ்ந்து வணங்கி, காதற்களி பூப்ப நகையாடிய முகத்தின் திவ்வியப் பிரகாசத்தை மறைத்திருந்த துகிலை நீக்கி, இளவரசரின் கம்பீரமான கழுத்தில் நறுமணங் கமழ்ந்திடும் மலர்மாலை சூட்டினள். தன் கோல முககமலத்தை அவரது பரந்த மார்பிற் பதித்தனள். தாமரை யிதழ்க் கண்கள் அன்னவரது கமலச் சேவடிகளிற் பதியத் தலை குனிந்து "என் மனக்கோயில் கொண்ட காதலா! யான் உமது உடைமை; என்னைக் கனிவுடன் ஏற்றருளும்" என்று புகன்றனள். உடனே அங்கு கூடியிருந்தோரனைவரும் ஒரே குரலாய் "ஜய விஜயீபவ! தீர்க்காயுஷ்மான் பவ! நித்ய மங்கள முண்டாகுக! பல்லாண்டு வாழ்க! மங்கிலியம் தழைத்திடுக!" என்று வாழ்த்துப் பல கூறிக் குரவையிட்டனர். கருநூலும் பொன்னூலுங் கலந்த மென்றூசு மீண்டும் அம்முகத்தை மறைக்க, செந்தாமரைக் கையினைச் செந்தளிர்க்கை பற்ற, இருவுள்ளத் தாமரைகளிலும் காதற்களி வண்டுகள் ஒத்திசை பாட, சதிபதிகளிருவரும் மறைந்து செல்வதைக் கண்ட ஜனங்கள் ஆநந்தக் கடலில் ஆழ்ந்தனர். இங்ஙனம் இளவரசர் தாமாகவே தமது காதலியைச் சம்பாதித்துக் கொண்டனர். சுபமுகூர்த்தத்தில் மேஷராசியில் சாக்கியர்களுடைய வழக்கப்படி வெகு கோலாகலமாய்ச் சித்தார்த்தருக்குத் திருமணம் நடந்தேறியது.

சித்தார்த்தரைச் சிற்றின்ப வாழ்க்கையில் நிலைநிறுத்த சுத்தோதனன் காதலொன்றையே தஞ்சமென்றிருந்திலன். தன்னருங்குமரன் யசோதரையுடன் வாழ்தற்கு மனோல்லாசமான ஓரின்பமாளிகை அமைக்க வேண்டுமென மன்னன் கட்டளையிட்டனன். விச்ராமவனம் என்னும் பெயருடைய அம்மாளிகை வர்ணனைக் கடங்காதது. அரசனுடைய அரண்மனையைச் சூழ வெகு தூரம் விரிந்திருந்த விசாலமான சமநிலப் பிரதேசத்தின் மத்தியில் ஒரு பசுங்குன்று எழுந்தோங்கி யிருந்தது. ஹிமாலயத்தின் அகன்ற அடிவாரத்தினின்று பிதற்றி வந்த ரோஹிணி நதி பசுங்குன்றின் அடியை நனைத்து கங்கையைச் சேரவோடிற்று. அக்குன்றின் தென்பாரிசத்திலே தேக்கு, ஆல், அத்தி, அரசு, தேவதாரம், சந்தனம், புளி முதலிய விருட்சங்களும், காயாவண்ணமலர்கள் சொரியும் பல தருக்களும் நிறைந்த சோலைகள் செழித்து வெளியுலகத்தை முற்றிலும் மறைத்திருந்தன. அப்பூம்பொழில்களுக்கப்பாற் பரவிய நகரத்தின் ஜீவிய முழக்கமும் கண்ணுக்குத் தென்படாத செடி, புதர்களிலிருந்து இரை

கின்ற தேனீயின் இரைச்சல்போல காதுக்கினிமையாய் ஒலித்தது. வடதிசையில் வான்தாவு பனிச்சிகரங்களும், பெருங் கோபுரங்களும், திரண்ட பனிக் கோளங்களும், விரியுந் தோள்களும், அடுக்கடுக்காக நின்ற தட்டுக்களும், வாய்விள்ளும் வன் விடவுகளும், ஈட்டி போலும் செங்குத்தான குன்றங்களும், சிறிதும் சரிவின்றிஎழுகின்ற நெடுமலைச் சுவர்களும், விசாலமாய்ப் பரந்த மலைப் பிரதேசங்களும், பசிய சரிவுகளும் நிறைய, நீலவானந் தழுவ ஒன்றின் பின்னொன்றாய்த் தொடர்ச்சிகள் பல அணிவகுக்கும் ஹிமாசலத்தின் குவிந்தெழுகின்ற பெருங் குன்றுக் குவியல்கள் காணலாயின. அவை எவருடைய பாதமுங் கண்டறியாதவை; அளவு கடந்தவை; அற்புத நிலையம். அவற்றை வியப்புற நோக்குவார்க்கு, அவை வானூடு சென்று வானவரோடு உறவாடுகின்றனவோ எனக்கருதுமாறு செழித்த கற்பனாவன்மை யளித்து விளங்கின. இப்பனிக் கோயிலின் அடிப்பாகத்தில் பெரிய வனங்களும் குதித்து விழும் மலையருவிகளும் நிறைந்திருந்தன. அதற்குங் கீழாக ஈட்டி, தேக்கு, காட்டத்தி முதலிய மரங்கள் செழித்தடர்ந்த வனங்களில் வான்கோழிகளின் காகளநாதமும், புலி, சிறுத்தை முதலிய விலங்குகளின் கோர சத்தமும், கற்றடங்களிற் றுள்ளும் மானினங்களின் காலோசையும், வானத்தில் வட்டமிடும் பருந்துகளின் கீச்சொலியும் நிறைந்திருந்தன. இதற்கும் தென்பாகத்தில் பசும்புல் முளைத்து, விசாலமாய் விரிந்து கிடந்த சமநிலப் பிரதேசம் மேற்கூறிய வனப்புக்கள் நிறைந்த திருக்கோயிலில் வாசம் செய்யும் இயற்கைத் தேவியை வணங்குதற்காய் விரித்த ரத்தினக் கம்பளம் போலத் துலங்கியது. இக்காட்சிகளை நோக்கி நின்ற அச்சிறு பசுங்குன்றின் மீது மயன் நிகரான சிற்பர்கள் சித்தார்த்தாது மணி மாளிகையை அமைத்தனர். குன்றின் இருபுறத்திலும் வானளாவிய கோபுரங்கள், நாற்புறமும் பெருங் கற்றம்பங்கள் தாங்கிய நடைமண்டபங்கள், அம்மண்டபங்களின் கல்லுத்தரங்களில் கிருஷ்ணன், ராதை, கோபஸ்திரீகள் இவர்தம் லீலைகளையும், அநுமான், சீதை, திரௌபதை இவர்களது கதைகளையும் காட்டும் பதுமைகளைக் கவினுற அமைத்திருந்தனர். சக்கரமும் அங்குசமும் கையிலேந்தி, ஞானமும் செல்வமும், விக்னங்களை நாசம் செய்யும் குணமும், பெரு வயிறுமுடைய விநாயகரின் விக்கிரகம் நடுத்தலை வாயிலின் மீதே வெகு அழகாய் அமைந்திருந்தது.

தலை வாசலிலிருந்து வளைந்து திரிகின்ற பாதைகள் உள் வாசலையடைந்தன. அழகிய பூவேலையமைந்த சந்தன மரக் கதவங்களோடும், ஊதா நிற ரேகைகளோடிய வெண் சலவைக் கற்களாலும், சந்திரகாந்தக் கற்களாலும் அமைத்த படிக்கட்டுகளோடும், தூவெண் சுண்ணம் தீட்டிய சுவர்களிலெழுப்பப்பெற்ற தலைவாசல் பிரகாசித்துக்கொண்டிருந்தது. வாசலைக் கடந்து செல்ல, பற்பல சிற்ப வன்மை காட்டிய அணியான தூண்கள்மீது வர்ணாலங்கிருதமான மண்டபமேற்றட்டுகள் விளங்கின. அம்மண்டப நிழலில் வெண்தாமரையும் நீலோற்பலமும் மிதக்கின்ற நீர்நிலைகள் துலங்கின. அந்நீர்நிலைகளில் நீலமும் செம்மையும் பொன்னிறமுங் காட்டிய நளிர்மணி நீரில் அழகிய மீனினங்கள் நடனாடின. நானாவித வடிவுகளில் அமைந்த சாளரங்களும் மணித்தம்பங்களும் நிறைந்த சித்திரசாலைகள் கண் கவர்ந்தன. மணம் வீசு மலர்ச் செடிகள்சூழ்ந்த வெண்டளங்கள், பளிங்குப் படிக்கட்டுகள், குளிர் நிழல் விரிக்கும் லதாக்கிருகங்கள், விசாலமாய் உயர்ந்தெழுந்த சித்திரகூடங்கள் இவை யாவும் அளகையின் விந்தையோவென வியக்கத்தகுந்தனவாயிருந்தன.

அகன்ற கண்ணுடைய மான்குட்டிகள் இளம் வெயில் குளிக்கும் ரோஜா மலர்களைத் தின்று அசையாடின. வானவில்லின் நிறங் காட்டும் சப்தவர்ணக் கிளிகள் தென்னஞ் சோலைகளிற் சிறகடித்துப் பறந்தன. பொன்னிறம் தீட்டிய சுவர் மாடங்களில் சாம்பர் நிறப் புறுக்களும், பச்சை நிறப் புறுக்களும், அஞ்சாமல் தமது கூடுகளைக் கட்டின. வெண் கற்கள் பதித்த தளங்களில் நீல மயில்கள், செங்கால் நாரையும், மடவன்னமும் கண்டு களிக்கத் தோகை விரித்தாடின. பொன் வண்டுகள் ஒவ்வொரு மலரையும் மருவித் தேனுண்டு களித்தன. கைபளைச் சுவர்களில் அச்சமுடைய பல்லிகள் பயந் தவிர்ந்து இளம் வெயில் காய்ந்தன. மனிதர் அளிக்கும் இனிய தின்பண்டங்களை யினிதே வாங்கித் தின்ன அணிற்பிள்ளைகள் வெகு ஆவலாய் ஓடின. ஏனெனின், அங்கெங்கும் சாந்தியே தழைத்திருந்தது. மங்களகரமான கருநாகங்கள் செவந்தி, சாமந்திச் செடிகளினருகாமையில் சூரியனுடைய இளம் வெயில் காயத் தமது சுருண்ட உடலை நீட்டின. அதனருகாமையில் நாவியும் கஸ்தூரிமானும் துள்ளி விளையாடின. தவிட்டு நிறக் கண்ணுடைய குரங்குகள் மரக் கிளைகளிலுள்ள காகத்துடன் சம்பாஷித்தன. இக்காதல் மாளிகையெங்கும் வெகு கவர்ச்சியான உயிர் வகைகளாலும் இரம்மியமான காட்சிகளாலும் நிறைந்திருந்ததுமன்றி, அவ்வழகிற்கு அழகு செய்ய அழகிய பணிப்பெண்களும் வேலையாட்களும் நிறைந்திருந்தனர். இவர்கள் சாந்தமும் இன்குணமும் வேலை செய்வதில் மனக்களிப்புமுடையோர். ஒவ்வொருவரும் பிறரைச் சந்தோஷப்படுத்துவதில் பேராவலுடையவர். இன்பத்தில் விருப்பமுடையோர். கட்டளைகளை நிறைவேற்ற மகிழ்வோர்.

இம்மயக்கந் தரும் மாளிகையின் அரசியான யசோதரா தேவியால் விளையும் சல்லாப உல்லாச லீலைகளென்னும் மலர்கள் இருகரைகளாக, அதன் வழியே சித்தார்த்தரின் வாழ்வென்னும் சிற்றாறு இன்பக் கேளிக்கை விநோதங்களில் நடனமாடி இன்னிசை பாடி மெல்லெனத் தவழ்ந்து சென்றது.

அரசன் தனது முயற்சிகளை இத்துடன் விடுத்திலன். அம்மாளிகையில் இத்தகைய இன்பங்களை நிறைத்த மன்னன் "விச்ராமவனத்தில் மரணத்தையும், மூப்பையும், துக்கத்தையும், நோவையும், பிணிகளையுங் குறித்து ஒருவரும் ஒரு சொல்லும் மொழிதலொண்ணாது. சயனாலயத்தில் ஒரு பெண் நடனஞ் செய்கையில் கால் தளர்ந்தேனும், கருவிழி மயங்கியேனும், கீழே விழுந்திடின் உடனே அவள் இன்ப மாளிகையைவிட்டு வெளியேறவேண்டும். ஏனெனில் சித்தார்த்தன் அதைக் கண்டு அவளுக்காகத் துயருறுவான். வேதனை, பிணி, கண்ணீர், அச்சம், அழுகையொலி சுடுகாட்டுச் செய்தி நிறைந்த வெளியுலகத்தைக் குறித்து அங்கு ஒருவரும் ஒன்றுமே பேசலாகாது. அங்குள்ள பெண்களில் எவருடைய தலையிலேனும் ஒரு நரைத்த மயிர் இருப்பின் அது வொரு பெருங் குற்றமாகும். ஒவ்வொரு நாட் காலையிலும் வாடுகின்ற ரோஜா மலர்களையும், மற்றப் பூக்களையும், உதிர்ந்த இலைகளையும் பழுத்த இலைகளையும் அருவருப்பான மற்றெவற்றையும் அகற்றிக் கண்ணுக்குத் தென்படாத இடத்தில் வெகு தூரத்திற்கப்பால் கொண்டெறியவேண்டும்" என்று ஆணையிட்டான். இந்தக் கட்டளைகளைத் தவறி நடப்பவர்களைத் தண்டிப்பதற்கும் அவ்விஷயங்களை நிறைவேற்றுவதற்கும் பல உத்தியோகஸ்தர்களை நியமித்தான். ஏனெனின், அரசன் தனக்குள் "மனிதனாகாத துறவி மார்க்கத்தை நாடச்செய்வதும், அதைப்பற்றிய வீண் யோசனைகளைப் பெருக்குவதுமான அமங்களப் பொருள்களை அவன் பாராமலேயே யௌவனப் பருவத்தைச் செலவு

செய்து விடுவானாகில், அதன்பின் அவனுக்கு அத்தகைய வாழ்வின்மீதுள்ள நாட்டம் முற்றிலும் அற்றுப்போகும். அப்பொழுது, அவன் ராஜாவாக ஆளவேண்டுமென்று நினைத்தால் இவ்வுலகையெல்லாம் ஓராங்காணியாக ஆளுவான் என்ற பெரியோர் சொற்படி அம்மகா பதவியை அடைந்திருப்பதை நான் பார்ப்பேன்'' என்று சிந்தித்தனன்.

அதற்காக, காதல் என்னும் காவலாளனும் இன்பங்கள் என்னும் தங்கக் கிராதிகளுமுடைய அவ்வானந்த மாளிகையெனும் சிறைச் சாலையைச் சூழக் கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் உயர்ந்தெழுந்த ஓர் அரண் கட்டவேண்டுமென்று அரசன் கட்டளையிட்டான். அதற்கு பித்தளையினால் மடக்குக் கதவுகள் செய்தனர். நூறு மனிதர்கள் சேர்ந்து திறந்தாலன்றி அந்தக் கதவுகளைத் திறத்தலரிது. அவ்வாறே திறந்திடினும் அதனாலுண்டாகும் ஓசை அரை யோசனை தூரம் கேட்கும். அன்றியும் அந்த அரணுக்குள் இன்னொரு அரணும், அதற்குள் வேறோர் அரணும் கட்டும்படி மன்னன் ஆணை பிறந்தது. அந்த அரண்களுக்கும் வெளி அரணுக்குள்ள கபாடங்கள்போலவே பல கபாடங்களைப் பித்தளையினால் செய்து வைத்தனர். உள்ளிருந்து ஒருவன் வெளியேற வேண்டுமாயின் இம்மூன்று அரண்களுடைய கதவுகளையும் திறக்கவேண்டும். ஒவ்வொரு அரண் வாசலிலும் வெகு நம்பிக்கையான காவலாளர்களை நியமித்து அவர்களுக்கு "ஓ காவலாளர்களே! அந்த அரண்களின் வாசல்வழியாக ஒருவரையும் வெளியே விடவேண்டாம். என் மகனையும்வெளியே விடவேண்டாம். இதற்குத் தவறிநடப்பீராயின் உங்கள் உயிருக்கே சேதம் வரும்'' என்று அரசன் கட்டளையிட்டான்.

(தொடரும்)

ஹிந்து ஸ்திரீகளின் நிர்ப்பாக்கியம்.

(ஸ்ரீமதி G. சுமதிபாய், B.A., L.T., பிஷக்ரத்னம்)

பாரதமாதாவின் ஸ்துதி எங்கும் சப்திக்கும் நம் இந்தியாதேசத்தில், அம்மாதாவின் புதல்வியான பெண்கள்மாத்திரம் கைதிகளெனக் கட்டுண்டுழலுவது வியப்பன்றோ! ஹிந்துமாதா அன்னியரின் கையினின்று விடுதலைப்படவேண்டின், ஸ்திரீகள் ரூடியின் அநியாயத்தினின்றும், பழக்க வழக்கங்களின் கட்டுக்காவலினின்றும் தப்பவேண்டாமா? "நம்தேசத்துப் பெண்களுக்குக் குறையொன்றும் இல்லை'' என அனேகர் பெருமை பாராட்டுவதுண்டு. அத்தகையரின் அபிப்பிராயப்படி, ஸ்திரீகளுக்கு ஆகாரம், ஆடை, ஆபரணம் தவிர வேறு ஒன்றும் வேண்டியதில்லை போதும்! நம் இந்திய மகளிரின் நிசமான நிலைமையை இங்கு சற்று கவனிப்போம்.

குழந்தைப் பருவம் தொட்டே பெண்கள் உபேட்சிக்கப்படுகின்றனர். அனேக குடும்பங்களில் ஆண்குழந்தை பிறந்ததென்றால் வெகு ஆடம்பரம் செய்வதுண்டு; பெண் பிறந்தாலோ அதை அலட்சியம் செய்வதுமன்றி, "ஐயோ! நம் அதிர்ஷ்டம் பெண்ணாச்சே'' எனவும் மனம் வருந்துவர். மற்றும் ஆணுக்கு ஐந்து வயதானால் அட்சராப்பியாசம் செய்வதுண்டு. பெண்ணுக்கோ, கல்வி அவசியமில்லை! "அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பென்னத்திற்கு?'' என்பர் பலர். சிலர் தம் பெண்களை பள்ளிக்கு

அனுப்பினும் அவர்களின் வித்தியாப்பியாசம் அற்பகாலமே நீடிப்பது. பத்துப் பன்னிரண்டு வயது ஆகுமுன் அப்பெண்களின் கல்விப் பயிற்சி நிறுத்தப்படுகின்றது. இரண்டு மூன்று வருஷங்களில் அவர்கள் என்னதான் கற்கக்கூடும்? கல்விக்களஞ்சியத்தினின்றும் பரிகரிக்கப்பட்ட பெண்களுக்கு வேறென்ன சம்பத்து இருப்பினும் யாதுபயன்? கல்வி அறிவு இல்லாத ஆண்மகன் ஒருவனை அனைவரும் மூடனென ஏளனம் செய்வாரன்றோ? பெண்கள் மாத்திரம் வித்தையின்றி அஞ்ஞானத்திலிருப்பது தகுமோ? அன்றி பெண்கள் அனைவரும் சரஸ்வதி கடாட்சம் பெற்றவரோ?

இந்துக்களில், அதிலும் மேல் ஜாதியரில், ஒரு பெண்ணுக்குப் பத்துவயதாகுமுன்பே அவள் பெற்றோர் அவளுக்கு வரன்தேட ஆரம்பிக்கின்றனர். அந்தோ! அப்பெண்ணுக்கு அவ்வயதில் லௌகிக விஷயமொன்றும் தெரியாது. அத்தகைய பேதையை பசுதானம் செய்வதுபோல் ஒருவனுக்கு மணம் செய்து கொடுப்பது நம் தற்கால இந்து தர்மமாகும்! அப்பெண்ணுக்கு பகுத்தறியும் வயது வந்தபின் தனக்கு வாய்ந்த கணவன் தன் மனதிற்கு சம்மதம் இருப்பினும் இல்லாவிடினும், அவள் தன் மனோபாவத்தை வெளியிடுவதற்கில்லை. அவள் எண்ணத்தை யார்தான் கண்ணியம செய்வர்! தன் புருஷன் கூனனோ, குருடனோ, கிழவனோ மூடனோ, மூர்க்கனோ, யாவனாயினும் அவனுக்கே அவள் தன் வாழ்நாளையெல்லாம் சமர்ப்பிக்க வேண்டும். அவன் என்ன கொடுமை செய்யினும் அவள் எதிர்த்து ஏனென்று கேட்கலாகாது. அவள் துக்கிக்குங்கால் அவள் பெற்றோர் பெரியோர் "எல்லாம் அப்பெண்ணின் அதிர்ஷ்டம், நாம் என்ன செய்யலாம்" என்பர்! புருஷர்களுக்கு நம தேசத்தில் இத்தகைய கஷ்டமுண்டோ? ஆண்மகன் சுயேச்சையாக மணம் செய்து கொள்ளலாம். மற்றும், தன் மனைவி தனக்குச் சம்மதமில்லாவிடில், அவன் அவளை நீக்கிவிடுவதுமன்றி, வேறு கலியாணமும் செய்துகொள்ளலாகும். ஆண்களுக்கோ இந்து சட்டமும் சமயமும் வெகு அனுகூலமாகவே இருக்கின்றனவன்றோ! பெண்கள் கதியோ அதோகதி! புண்ணிய பூமியெனும் நம் தேசத்திற்கு இத்தகைய அநியாயம் தகுமோ?

நம் ஹிந்து சமாஜத்தில் பெண்களுக்கு வித்தைக்குத்தான் அருகத்துவம் இல்லை, ஐசுவரியத்திற்காவது சுதந்தரம் உண்டோ? அதுவுமில்லை. பெண்ணுக்குப் பிதாவின் ஆஸ்தியில் யாதொரு உரிமையும் இல்லை. எந்த நாள் மணம் முடிகின்றதோ அந்நாளே அவள் தன் தாய்வீட்டு பாத்தியதை இழந்து, வேறு ஒரு குடும்பத்தவளாகின்றனள். புருஷன் ஆஸ்திக்கும் அவளுக்குச் சுதந்தரமில்லை. கணவன் தனக்கு அனுகூலமாய் இருந்தால் அவன் சொத்தை அவள் அனுபவிக்கலாம். இல்லையோ, அவள்பாடு திண்டாட்டம் தான். புருஷன் இறந்துவிட்டாலோ, துக்கத்துக்கு உரியவள் மனைவி. சொத்துக்குப் பாத்தியஸ்தர் பிள்ளைகள், பங்காளிகள்! கைம்பெண்ணின் கொடுமையைக் கூறவேண்டியதே இல்லை. பந்து மித்திரரும் அவளை அநிஷ்டையென அவள் முகத்தில் விழிக்கவும் அஞ்சுவர். பேழைக்குள் இருக்கும் பாம்பென அவள் அஞ்சிப் பதுங்கி, யாதொரு நிருவாகமுமின்றித் தவிக்க வேண்டியதாகின்றது. சுய சம்ரட்சணைக்கோ அவளுக்கு வித்தையுமில்லை, சக்தி சாமர்த்தியமுமில்லை அவள் வாழ்நாளே வீண் நாளாகின்றதன்றோ! வித்தை, தனம், சக்தி இவைகளுக்கு முதன்மையாக சரஸ்வதி, லக்ஷ்மி, துர்க்கா முதலிய தேவிகளை வணங்குகிறோம். நம் பாரதநாட்டில், அத்தேவதைகளின் அம்சங்களான பெண்கள் கல்வி ஆதாரமோ பொருள் ஆதாரமோவின்றி, திடமின்றி, திராணியின்றி, அசக்தராய் நிர்பாக்கிய ஸ்திதியிலிருப்பது பரிதபிக்கத்தக்கதன்றோ! இதுவோ நம் ஹிந்து சனாதனதர்மம்?

பெண்களின் உயர்வு.

(ஸ்ரீமதி S. ஜயலட்சுமியம்மாள்.)

அநாதியாய், பரப்பிரும்மமாய், யாவராலும் கண்டறியக்கூடாததாய், சாதன சதுஷ்டயங்களுடைய யோகிகள் மாத்திரம் உள்ளத்தில் சதாகண்டு ஆனந்த பரவசம் கொள்ளும் வஸ்துவாய் இருக்கும் பிரும்மமானது லீலா விநோதமாக சிருஷ்டித்ததே இவ்வுலகம்.

இவ்வுலகில் அநேக தாவர ராசிகளையும் ஜீவ ராசிகளையும் சிருஷ்டி செய்து அதனதின் பூர்வ ஜன்ம கர்மங்களுக்கு ஏற்ப வாழ்வினையை ஊட்டி வைப்பவனும் நம்மை ஆட்டிவைப்பவனும் அவனே !!

அவன் படைத்துள்ள ஜீவராசிகளுள் உயர்ந்ததும், கிடைப்பதற்கு அரியதுமானது மானிட ஜன்மமே. அம்மானிடப் பிறவியிலும் சகல ஜீவ ராசிகளிலும் உள்ள பாகுபாடு போலவே, ஆண், பெண் என இருபாலரையும் சிருஷ்டித்துள்ளார்.

இருவரும் மன மொத்துத் தங்களுக்குள்ள உலகக் கடமைகளைச் செய்து இறுதியில் தன்னை யடைய வேண்டுமென்பதே இறைவனின் திருவுள்ளம்.

சிலர் ஆண்களுக்குத் தான் சகலமும் கைகூடும் என்பது சாஸ்திர சம்மத மென்றும், மோட்சமும் அவர்களுக்கே கைகூடுமன்றிப் பெண்களுக்குக் கிட்டா தென்றும் சொல்லக் கேட்கிறோம். அந்தோ இது அறியாமை !!

ஆண்களைப் போலவே ஸ்திரீகளும் புத்தியையும் சித்தத்தையும் படைத்தவர்கள். இன்னும் சொல்லப்புகின் ஆண்பாலரைவிடப் பெண்கள் எடுத்த காரியத்தைத் திட சித்தத்துடன் சாதிக்க வல்லவர்கள் என்பதற்கு ஐயமில்லை. யக்ஞ பத்தினிகளுக்கும் கண்ணனை பஜித்த கோபிகைகளுக்கும் மோட்சம் கொடுத்தால் ஸ்திரீகள் மோட்சமடையக் கூடியவர்களென்றும், சீதா, கைகேயி, சத்தியபாமா, சுபத்ரை முதலியவர்கள் சரித்திரத்தால், ஸ்திரீகள் தீரமாய் யுத்தம் செய்யவும் வல்லவர்கள் என்றும், கார்கி, மைத்ரீ முதலிய ரிஷிபத்தினிகளால், எத்தகைய ஞான சம்பத்தை ஸ்திரீகள் அடைந்திருந்தார்கள் என்றும், அகல்யாபாய், சாந்தபீபீ, மங்கம்மாள், அல்லி, விக்டோரியா மகாராணி முதலியவர்கள் ராஜ்யபாரம் எவ்வளவு புத்தி சாதுரியத்துடன் நடத்தினர்களென்றும், தாராபாய், மீராபாய், பத்மினி முதலிய ராஜபுதன ஸ்திரீகளும், காயினி முதலிய நம் பாரதமணிகள் அநேகரும் எப்படிக் கற்பரசிகளாய்விளங்கி இன்றும் இப்பரத கண்டத்தில் அழியாப் புகழை நிலை நாட்டி இருக்கிறார்கள் என்றும் நாம் பல நூல்களின் வாயிலாய் உணரவில்லையா !!

வீட்டிலும் ஸ்திரீகளால் தான் ஒரு குடும்பம் ஏற்றமோ இகழ்ச்சியோ, நன்மையோ தீமையோ, ஒற்றுமையோ பிரிவோ அடைகிறது.

ஸ்திரிகளே தம் கணவருக்கு நற்பெயரும் கௌரவமும் அளிப்பவர்; கெட்ட பெயரும் அகௌரவமும் அளிப்பவரும ஒரோவிடத்து அவரே. ஸ்திரீகள் தெய்வ பக்தியும் ஆசாரமுமுள்ளவர்களாக இருக்கும் வீட்டில், அதில் அவ்வளவு இஷ்டமில்லாத ஆடவர்களுங் கூட, ஆசாரமாகவும், தெய்வபக்தி உள்ளவர்களாகவும இருக்கக் காண்கிறோம்.

ஸ்திரீகள் நவீன நாகரிகம் வாய்ந்தவர்களாய் இருக்கும் வீட்டில், புருஷர்களுடைய நவ நாகரிகம் அளவு கடந்ததாய் இருக்கிறது !!

ஸ்திரிகள் தான தர்மங்கள் செய்யவோ அல்லது தேசாலம் செய்யவோ எண்ணம் உள்ளவர்களாய் இருக்கும் குடும்பத்தில் புருஷர்களுடைய எண்ணம் விருத்தியடைந்து அவர்கள் சிறந்த தேசநலத் தொண்டர்களாய் விளங்குவதைக் காண்கிறோம்.

மகாத்மா காந்தியடிகளும் தன் சரித்திரம் எழுதிய வியாசத்தின்கண் கஸ்தூரிபாய் மெய் புணர்வுள்ளவளாய், தான் செய்யும் காரியத்திற்கு அனுகூலியாய் இருந்திராவிடில் தன் நோக்கப்படி தான் இவ்வளவு காரியம் செய்திருக்க வியலாது எனச் சொல்லி இருக்கிறதை அதை வாசித்த நேயர் அறிவார்கள்.

இருவரும் மனமொத்துச் செய்யும் காரியங்கள் இத்தகைய மேன்மையை அடைகின்றன!!

அல்லின்றி, தன் புருஷர் கடுகளவு தேசநலப் பொதுக் காரியம் செய்தால் சில பெண்கள் "இவர் எதற்கடைவருக்கு இப்பாடு படுகிறார்? தன் காரியத்தை சுகமே பார்த்துக் கொண்டிருக்கும் பிரபுக்கள் பலரிருக்க, இவர் தலையில் கூழை கரைத்து கொட்டியதாரோ? பொழுது விடிந்தால் வீட்டில் அரை நாழிகை கால் தங்குகிறதில்லை. இங்கு முனிசிபல் மீடிங், அங்கு காங்கிரஸ்கமிட்டி, இங்கு தேசிய விஷயம், லெக்சர் என்று ஓடிக் கொண்டே இருக்கிறார்" எனச் சொல்லி அவர்கள் செய்யும் அரும் பெருங் காரியத்தின் அருமை தெரியாமல், அவரை நொந்து கொள்ளுகிறார்கள்!

சிலர் புருஷர்கள் தாராள மனதுடையவர்களாய்க் கேட்போருக்கு இல்லை யெனுமல் கொடுப்பவர்களாய் இருக்க, அது பிடிக்காமல் "உதாரிக் குணத்தின் அருமை தெரியாமல் கொடுத்து விடுகிறான்" என உரைக்கிறார்கள்.

அத்தகையோர்களிடம் வரும் யாசகர்களும் "யஜமான்தர்மப்பிரபு; கேட்டால் இல்லையென்று சொல்லமாட்டார்; ஆனால் அம்மாள்மட்டும்..." என்று இழுத்தாற்போல் சொல்லிவிடுவார்கள்.

ஆகையால் ஸ்திரீகள் பரோபகார உதார குணங்கள் அமையப் பெற்றவர்களாய் இருந்தால்தான் தன் சகோதரர்களையும் புருஷர்களையும் புத்திரர்களையும் பரோபகாரமுள்ளவர்களாகவும் தீரர்களாகவும் செய்ய வியலும்.

வீரபாக்கிரமம் மிகுதியும் கொண்ட நெபோலியனும் (Napoleon) ஒரு இடத்தில் தாய்மார்களே புத்திரர்களை தீரராகவும் நல்லவர்களாகவும் செய்ய வல்லவர்களென்றும் தன் தாயின் கூர்மையான புத்திமதியாலும் நல்லுபதேசத்தாலுமே தான் அவ்வளவு தீரமான செயல்களைச் செய்து வெற்றி கொண்டதாகவும் சொல்லி இருக்கிறார்.

இங்கிலீஷ் கவிஞரும் "The hand that rocks the cradle" rules the world" "தொட்டிலையாட்டும் அக்கையே இவ்வுலகை ஆளுகிறது" என்றிருக்கிறார்.

அதுபோலவே நம் தமிழ் பாஷையிலும் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது," "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழிகள் வழங்கிவருகின்றன.

ஆகவே பிள்ளைகள் சிறு வயதில் தாயாரால் வளர்க்கப்பட்டு அவர்கள் ஆதீனத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அப்பொழுதே நல்ல எண்ணங்களும் வார்த்தைகளும் நேர்மையான காரியங்களும் பழக்கமாகிவிடின், அவர்கள்பெரியவர்களாகும்போது நல்லவர்களாகவும் யாரிடமும் அன்பாய்ப் பேசுகிறவர்களாகவும் தங்கள் காரியத்தைக் குறித்த நேரம் தவறாமல் செய்கிறவர்களாகவும் காண்பவர்கள், இப்பிள்ளையைப் பெற்றவளன்றோ பாக்கியசாலி எனப் புகழ் கேட்கும் சிலாக்கியத்தை யடைகிறார்கள்.

ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டினும் அதுவும் ஸ்திரீகளால்தான்.

ஜனத்தொகையில் பாதியாயுள்ள ஸ்திரீகள் கல்வியிலும் அறிவிலும் முன்னேற்றமடைந்தால்தான் தேசம் முன்னேற்றமடையும்.

சிறு தேசமான ஜப்பான் முன்னேற்றமடைந்த காரணங்களுள் பெண் கல்வியும் ஒன்று. அங்கு 100-க்கு 90 பெண்கள் படித்தவர்களாய் இருக்கிறார்கள்.

இந்தியாவிலோ வென்றால் ஆங்காங்கு பல சகோதரிகள் உயர்தரக் கல்வியின் உரிமை பெற்றாலும் பல சகோதரிகள். தாய் பாஷையின் எழுத்துகூடத் தெரியாமல் இருக்கிறார்கள்.

ஆகையால் பெண்களுக்குப் போதுமானதும் வேண்டியதுமான துறையில் பல கல்விச்சாலைகள் ஏற்படுத்திக் கட்டாயக் கல்வியைப் புகட்ட வேண்டும்.

"ஒரு இறக்கையை உடைய பறவை எப்படி மேல் பறக்க முடியாதோ" அதுபோல ஒரு வகுப்புதாரரான ஆண்கள் மட்டும் முன்னேற்றமடைதல் கூடாத காரியம்,

பெண்களும் கல்வியறிவு வளர்ந் தோங்கி சகல விஷயங்களையும் அறிந்தவர்களாய் இருந்தால்தான் நம் தேசம் உயர்வடையும். தகுந்த வசதியும் சௌகரியங்களும் கொடுக்கப்படின் நம் இந்திய ஸ்திரீகள் சகலரும் கல்வியிற் சிறந்து விளங்குவார்களென்பதற்கு ஐயமில்லை.

பூமியைத் தாங்கி நிலையிற் நிறுத்திக் கொண்டிருக்கும் பூமா தேவியும் பெண்பாலே. சகல கலைகளையும் தன்னுள் அடக்கி வித்துவான்கள் நாவில் நர்த்தனமாடும் கலைமகளும் பெண்பாலே. அஷ்ட ஐசுவரியங்களையும் மானிடர்க்குக் கொடுத்து இக பரசாதகங்கள் செய்ய அனுக்கிரகிப்பவளுமான லக்ஷ்மியும் பெண்பாலே, சகல விதமான சக்தியையும் மானிடற்கு அளித்து முக்திக்கும் காரணரூபியாய் இருக்கும் பார்வதியான "சக்தியும்" பெண்பாலே. ஒரு பெண் திருமூர்த்திகளையும் தொட்டிலிற் குழந்தைகளாக்கி ஆட்டினாள். (அனுசூயை). ஒரு பெண் மாண்ட கணவனுயிரை யமனுடன் வாதாடி மீட்டனள். (சாவித்திரி). ஒரு பெண் "பொழுதே விடியக்கூடாது" எனச் சாபமிட்டபடியால் சூரியனும் உதிக்க பயந்து இருட்டான நாள்கள் பல சென்றன. (நளாயினீ). ஒரு பெண் தன் பாதிவிருத்திய மகிமையால் இறந்த தன் கணவன் தலையை மட்டும் எடுத்துப் பேசச் செய்தாள். (சுலோசனை). இத்தகைய அரிய பெரிய செயல்களைச் செய்தவர்கள் ஸ்திரீகளே யன்றோ!

பகவானும் யாருக்கு நாம் பூஜைசெய்யாவிட்டாலும் "பதிவிருதையான ஸ்திரீகளை யாம் எப்போதும் பூஜிப்போம்" எனச் சொல்லி இருக்கிறார்.

ஆகையால் நற்குண நற்செய்கைகளையுடைய பெண்களால் உலகம் உயர்வடையும் அவர்கள் பிறந்த குலத்திலும் புகுந்த குலத்திலும் பொன் எனப் போற்றப்பட்டு கண் எனக் கருதப்படுவார்கள்.

சகல மக்களையும் படைக்கும் ஈசுவரன் என்றும் பெண்களுக்குப் பெருமையையும் புகழையும் அளிப்பாராக.

ராஜம்.

(ஸ்ரீமதி பங்கஜம்.)

மாலை நேரம் சுமார் மணி ஐந்தரை யிருக்கலாம். பகலவனும் தன் கிரணங்களை யெல்லாம் சுருட்டிக்கொண்டு தன்னில்லமாகிய மேற்றிசையை அடையப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறான். பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களும், மாணவிகளும் தங்கள் புஸ்தகங்களுடன் தாமிருக்கு மிடத்தை நாடி அடைகின்றார்கள். ஆபீஸிலிருந்தும் பெரிய தனவான்கள் தங்கள் மோட்டார்களிலும் கோச்சு வண்டியிலும், ரிக்ஷாவிலும், பஸ்ஸிலும், கால் நடையாகவும் அவரவர் சக்திக்கியைந்தவாறு வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். மற்றும் பலர் தங்கள் வீட்டிலிருந்து சமுத்திரக்கரைக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். சென்னையில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் காணும் காட்சியை நம்மால் வர்ணிக்க முடியவில்லை. ஆனால் சமுத்திரராஜனே தன்னுடைய அலைகளாகிய கரங்களால் சைகை காட்டி பணக்காரன், ஏழை, படித்தவன், படியாதவன், சுகமாயிருப்பவன், வியாதியஸ்தன், சந்தோஷமுள்ளவன், துக்க முள்ளவன், புத்திசாலி, வைத்தியக்காரன்; ஆண்பால், பெண்பால், மேல்ஜாதி, கீழ்ஜாதி முதலிய யாதொரு பேதமுமின்றி 'வாருங்கள், வாருங்கள்' என்று அளவில்லாத ஆனந்தத் தோடழைத்துக் கொண்டிருக்கிறான். அந்த கரையோரத்தில் மைலாப்பூர் பக்கமிருந்து இருபெண்கள் சந்தோஷமாய் நடந்துவந்து அதிக சந்தடி இல்லாத இடத்தில் உட்காரலானார்கள். அவர்கள் பார்வைக்கு சாதாரணமாய்க் காணப்பட்டார்கள். ஏறக்குறைய இருவரும் இருபது வயது சென்றவர்களாயிருக்கலாமென்று தோன்றியது. அப்பெண்கள் குவீன் மேரி கலாசாலையில் கல்வி பயிலும் மாணவிகள். அவ்விருவரும் இண்டர்மீடியட் தேறி விட்டு பி. ஏ. வகுப்பில் வந்து சேர்ந்து ஒரு வாரமாச்சுது. இருவரும் கலியாணமானவர்கள். விடுமுறை நாட்களைத் தங்கள் ஊர்களில் பிரிந்திருந்து கழித்து வந்தபடியால் இன்று சந்தோஷமாய்ப் பேசுவதற்காக இங்கு வந்தார்கள். ஆனால் அவர்கள் தம் தாய்ப்பாஷையைப் புறக்கணிக்காமல் தமிழில் பேசலானார்கள்.

"கனகம்! நீ பரீட்சையில் முதன்மையில் தேறியிருப்பதைப்பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று வெகு சந்தோஷத்தோடு அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள் கோகிலம்.

கனகம்:—கோகிலம்! நீ பரீட்சையில் தவறியிருந்தாயானால் எனக்கெவ்வளவு விசனமிருக்குமென்பதை அதிக சந்தோஷமாய் உனக்குக் காண்பிப்பேனே; அச்சமயம் எனக்குத் தவறிப்போய் விட்டதே என்று நான் மிகவும் துக்கமடைகிறேன்.

கோகிலம்:—சரி, சரி. உனக்கெப்பொழுதும் பரிகாசம் தான். மதுரவல்லி தான் மேல் வகுப்புக்கு மாற்றப்பட்டிருந்தும் தன் அருமை சிநேகிதியாகிய அம்புஜத்தின் தவறுதலுக்காக அவள் படும் விசனம் கொஞ்சநஞ்சமல்ல. மேலும் ஒரு வருஷம் வீட்டிலேயே சும்மா யிருந்துவிட்டு அடுத்த வருஷம் அம்புஜத்துடன் சேர்ந்து படிப்பதாகப் பிடிவாதம் செய்தாளாம். அம்புஜம் அவளை வெகுவாய்ச் சமாதானப்படுத்தி அழைத்து வந்தாளாம்.

கனகம்:—ஆம்! நானும் அப்படித்தான் கேள்வியுற்றேன். உண்மை அன்பு அவ்வளவு

நான் செய்யக் கூடுமோ? அதற்குமேலும் செய்யும். அன்புக்காக ஆனந்தமாய் உயிரையும் தத்தம் செய்யலாம்.

கோகி:—உண்மை தான்! நீ லீவில் எங்கெங்கே போயிருந்தாய்? போன இடங்களில் என்ன விசேஷம்? நீ கண்டதும் கேட்டதுமாகிய ஏதாவது விசேஷங்களிருந்தால் எனக்குச் சொல்லு.

கன:—என் பெற்றோருடன் மூன்று வாரமிருந்தேன். பிறகு என் மாமியார் வீட்டில் ஒரு வாரமிருந்தேன். என் சகோதரி வீட்டில் ஆறு நாட்கள் தங்கிவிட்டுத் திரும்ப என் தாயகமாகிய கோவையில் இவ்விடம் வரும் வரை தங்கியிருந்தேன். என் மாமி வீட்டில் இருந்தபொழுது நான் பெரிய பெண்ணுகியும் படித்துக் கொண்டிருப்பதற்காக என்னைச் சிலர் பலவாறு பேசினார்கள் என்பதை அறிந்துகொண்டேன். அவ்வித மனோபாவமுள்ளவர்களுடன் நான் எப்படி நெருங்கிப் பழகுவது. அதனிமித்தம் யாருடனும் ஒதுங்கி நின்றவளாகவே இருந்தேன். ஆனால் என்னைக் குறித்து என்ன பேசினாலும் என்னைப் பார்ப்பதற்காக தினமும் பலர் வந்துகொண்டே யிருந்தார்கள். அனேகமாய் அங்கு பதின்மூன்று வயதுப்பெண்கள் புருஷருடன் தனிக்குடித்தனம் செய்வதே அதிகமாயிருக்கிறது. ஐயோ பாபம்! அவர்கள் அடுத்து குழந்தைக்குத் தாயாராகிவிடுகிறார்களென்பதை நினைக்க எனக்கு விசனம் உண்டாகிறது. சுயராஜ்யம் வேண்டுமென்றும் சுவாதீனம் வேண்டுமென்றும் போர் முழக்கம் செய்யும் ஆடவர்கள் தங்கள் குழந்தைகள் விஷயத்தில் இன்னும் சற்று முன்னேற்றி நடக்கக் கூடாதா? குறைந்தது 15 வயது நிறையப்பெற்ற பின்பாவது மணம் புரிவிக்கக் கூடாதா வென்று நினைப்பேன். கலியாண வயதையும் சம்மத வயதையும் உயர்த்த கவர்ண்மெண்டாரைச் சட்டம் செய்யக் கேட்டுக்கொள்ளுவது இழிவான காரியமென்றாலும், சில விஷயங்களுக்கு அவசியமென்றே தோன்றுகிறது. வேறு சொல்லக்கூடிய விசேஷம் ஒன்றும் காணோம். மற்றப்படி தமிழிலும் ஆங்கிலத்திலும் அனேக கதைப் புஸ்தகங்கள் படித்தேன். அவற்றுள் ஓர் தமிழ் மாதாந்திரப் பத்திரிகையில் (சிந்தாமணியில்) ஓர் கதை படித்தேன். அது என் மனதை மிகவும் கவர்ந்தது.

கோகி:—(இதுகாறும் மௌனமாயிருந்தவள் வெகு அவசரமாய்) என்ன கதை? என்ன? விசனமா? ஆனந்தமா? இப்பொழுதே சொல். எனக்குக் கேட்க வெகு ஆவலாயிருக்கிறது. ஏழரை மணிக்கு நாம் நம் விடுதிக்குப் போய்ச் சேர்ந்தால் போதும். இப்பொழுதுதான் மணி ஆறேகால் (எனத் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே சொன்னாள்).

கன:—என்னருமைத் தோழி! ஏற்கெனவே நான் உனக்குச் சொல்ல நினைத்தேன். மேலும் அதை நீயும்வற்புறுத்துகிறாய்; சொல்லுகிறேன், கவனமாய்க் கேள். அக்கதாநாயகியின் பெயர் ராஜம். ஆதலால் கதையின் பெயர் ராஜம் என்று போடப்பட்டிருந்தது. பெண்ணுக்குப் பெண் நேசிக்கிறதென்பதை இவ்வளவு ஸ்பஷ்டமாய் நான் இதுவரை அறிந்தது கிடையாது. ஆகையால் அப்பெண்ணின் மனோபாவம் ஒரு விதமானது. பாபம்! அதன் முடிவு அவளுக்குக் கேட்டையே விளைவித்தது.

கோகி:—என்னம்மா! நான் உன்னைக் கருத்துரை கேட்கவில்லையே. என் மனம் ராஜத்தை நாடி விட்டதால், கதையை அறிய ஆவல் கொள்ளுகிறது. சீக்கிரம் சொல். கதை முடி

ந்த பின் நம் அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொள்ளலாம்.

கன :—என்றால் முடியாது போ. நான் சொல்லமாட்டேன். இவ்வளவு அவசரம் எனக்குத் தேவையில்லை.

கோகி:—வேண்டாம் விளையாட்டு. நாளை விளையாடலாம், கோபித்துக்கொள்ளாதே. நீ நல்லவள் ; ஆரம்பி.

கன :—அது தான் சரி, ஆகட்டும் கேள். ராஜமும் பத்மாவும் சிறு வயதிலிருந்து பள்ளித் தோழிகள். ஏறக்குறைய ஒரே வயதினர்கள். ராஜம் கலியாணம் செய்துகொண்டு மாமியார் வீடு போய்விட்டாள். சிறு வயதிலிருவரும் வெகு அன்னியோன்னியமாயிருந்ததை ராஜம் கொஞ்சம் கூட மறக்காமல் அந்த அன்பைத் தன் மனதில் வளர்த்திக் கொண்டே வந்தாள். பத்மாவோ அவளை அறவே மறந்து விட்டாள். கொஞ்ச நாளைக்குப் பின் தெய்வ கடாட்சத்தால் இருவரும் ஒரே ஊரில் வசிக்கும்படி நேரிட்டது. இப்பொழுது அவர்கள் பெரியவர்களாய் விட்டார்கள். பத்மா பெரிய பரீட்சையில் தேறியிருந்தபடியால் மாதம் 325 ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்து வந்தாள். அவள் பெற்றோருக்கு அவள் ஒரே பெண். மெத்த பணக்காரி. பார்த்தவர் மனங்கவரும்படியான எழில் வாய்ந்தவள். தவிர, பெருந்தன்மையும் நன்மதிப்பும் கொண்டவள்.

நம் ராஜம் குடித்தனத்தில் இரண்டு ஆண் குழந்தைகளுடனும் ஓர் பெண்ணுடனும் வாழ்ந்து வருகிறாள். அவள் பணக்காரியுமல்ல, படித்தவளுமல்ல, அழகு வாய்ந்தவளுமல்ல. ஆனால் அவள் எதையும் விரும்பி நாடினவளல்ல. அவள் யாருடனும் வீண் வம்புக்காகப் பேசவுமாட்டாள். அதிகம் யாருடனும் நெருங்கவுமாட்டாள், தன் வீட்டுவேலைகளைக் குறைவறக் கவனித்துக்கொண்டு ஒழிந்த நேரங்களில் ஏதாவது புஸ்தகங்கள் படித்துக்கொண்டு தன் காலத்தைக் கழித்து வந்தாள். தானும் பத்மாவும் ஒரே ஊரில் வசிக்கும்படியான சமயம் நிகழ்ந்ததற்காக அவள் கொண்ட மகிழ்ச்சி கணக்கற்றது. அவளும் தானும் இனி அடிக்கடி பேசவும் சந்திக்கவும் வழியேற் பட்டுவிட்டதென்றும், தன்னைவிட அவள் எவ்வகையிலும் உயர்ந்தவளேயாயினும் தன்னை நேசிப்பாளென்றும் எண்ணி அகமகிழ்ந்தாள். அந்தோ பாபம்! அது பகற்கனவு தான்என்பதை அவள் அறிந்தாளில்லை.

பத்மா அவ்வூருக்கு வந்த ஒரு வாரம் கழித்து, ராஜம் ஒரு நாள்தன் குழந்தைகளை வீட்டில் விட்டுவிட்டு பத்மாவைப் பார்க்கப்போனாள். ஏனெனில் அவள் எங்குபோனாலும் குழந்தைகளைத்தன்னுடன் கூட்டிச்செல்வது மெத்த அவசியம் ; ஆனால் தான் போன இடங்களில் ஏதையாவது குழந்தைகள் கேட்டுவிட்டால் அது இவளுக்குப் பெரிய அவமானம். தவிர பத்மாவைப் பார்த்தும் சில வருடங்களாயிருந்தன. நடுவில் இரண்டொரு கடிதங்களிவள் எழுதியிருந்தும் பத்மா பதிலளித்தலில்லை. இதை யெல்லாம் யோசித்து அவள் தான் மாத்திரம் போவது தான் மேலெனக் கருதி அப்படியே செய்யலானாள். பத்மாவின் வீட்டை அடைந்தாள். அவ்வீடு வெகு அழகியதாயும் சாமான்கள் ஒழுங்காய் அமைப்பெற்றதாயும் பார்ப்பவர் மனத்தைக் கவரும்படியாகவுமிருந்தது. தவிர, ஒரு சிறு அழகிய பூந்தோட்டமும் இருந்தது. மாலை நாலுமணிக்குச் சற்று அதிகமிருக்கலாம். அவள் பாடசாலைக்கு அன்று விடுமுறையானதால் அப்பொழுதுதான் பத்மா தூங்கி யெழுந்து இடைவேளை ஆகாரத்தை உட்கொண்டுவிட்டு, கையில் ஓர் பத்திரிகையுடன் சாய்வு நாற்காலியில் முதல் ஹாலில் உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் ஓர்

பெஞ்சியின் மேல் அழகான ஓர் வெள்ளித் தட்டில் நேர்த்தியான வெற்றிலையும் அதன் உபகரணங்களும் வைக்கப்பட்டிருந்தன. அந்த ஸ்திதியில் பத்மா அடிக்கடி படிப்பதை நிறுத்தி வாசற் பக்கம் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அந்தப் பார்வையால் அவள் யாரோ முக்கியமானவர்களின் வரவை நாடி எதிர் பார்ப்பதாகத் தெரிந்தது. இச்சமயம் நம் ராஜம் புன்னகையுடன் கூடியவளாய், "பத்மா! சுகமா? என்னைத்தெரிகிறதா? நீ இங்கு வந்ததாகக் கேள்விப்பட்டதால் என் பாலிய சிநேகிதியாகிய உன்னைப் பார்த்துப் போகலாமென வந்தேன்" என்று சொல்லி உட்சென்றவளருகில் நின்றாள்.

பத்மா (பத்திரிகையைப் பார்த்தவண்ணமாய்) சரி என்று தலையை அசைத்துக் கொண்டு) இந்த வெய்யிலில் நடந்து வந்தாய் போலிருக்கிறது, உட்கார். (எனக் கூறிவிட்டு முழுகவனத்தையும் தன்படிப்பிற் செலுத்தி விட்டாள்.

ராஜம் "என்ன நம்முடன் அன்பாகப் பேசவில்லையே! மெத்த அவசரமும் அவசியமுமான சங்கதியைப் படிக்கிறாள் போலிருக்கிறது. அதை முடித்து விட்டு நம்முடன் பேசக் கூடும்' எனத் தன் மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு, "ஆ! ஆ! என்ன அழகு, என்ன வனப்பு, பார்த்தாலே போதும். நான் முன் பார்த்ததைக் காட்டிலும் இப்பொழுது வெகு ரூபவதியாகி விட்டாளே. இந்த சுந்தரவல்லியை என் அருமைத் தோழியாய் அடைந்ததற்காகக் கடவுளை பலமுறை வணங்குகிறேன்" என்று தன்னுள் கூறிக் கொண்டு, பத்மா எப்பொழுது பத்திரிகையை முடித்து விட்டுத் தன்னுடன் வசனிப்பாளென்பதை வெகு ஆவலுடனும் அவசரத்துடனும் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தாள்.

பத்மா திரும்பவில்லை. இவ்விதம் கால் மணி காலம் கடந்தது. ராஜம் திரும்பப் பேசலாமாவென யோசித்து ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அச்சமயம் சுமார் இருபத்தைந்து வயதுள்ள ஓர் மாது இரண்டு குழந்தைகளுடன் உட்பிரவேசித்தாள். அதையறிந்த பத்மா கையிலிருந்த பத்திரிகையை நழுவ விட்டுவிட்டு அவசரமாய் எழுந்து "வாருங்கள்! வரவேண்டும்" என்று வினயத்துடனும் அன்புடனும் கூறி மற்றொரு நாற்காலியை அவளுக்குக் கொடுத்து உட்காரச் சொல்லித் தான் தன் ஆசனத்திலமர்ந்தாள்.

"நீங்கள் மூன்று மணிக்கு வருவீர்களென்று நான் டீ சாப்பிடாமல் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். ஏன் வரவில்லை?" என்று பத்மா கேட்டாள்.

அதற்குக் கமலவல்லி "ஆம்! நானும் வர நினைத்தேன். திடீரென்று இரண்டு, மூன்று பேர் டீ சாப்பிட வந்துவிட்டார்கள். என்னதான் பரிசாரகனிருந்தாலும், நம்முடைய மேல் பார்வையில்லா விட்டால் எவ்விஷயமும் சரிவர முடிகிறதில்லை. ஆகையால் எல்லாவற்றையும் கவனிக்க வேண்டியிருந்தது. (குழந்தைகளைக் காட்டி) இவர்கள் அப்பா இப்பொழுதுதான் வந்தவர்களைக் கூட்டிக் கொண்டு கோர்ட்டுக்குப் போனார். நானிப்படி வந்தேன்" என்றாள். அதைக் கேட்ட பத்மா சரிதானென்று சொல்லி விட்டு, வீட்டிலிருந்த சமையற்காரனைக் கூவி 'கொஞ்சம் டீ போடு' என்றாள்.

கமலா:—வேண்டாம், நானிப்பொழுதுதான் சாப்பிட்டு விட்டு வந்தேன். அடிக்கடி சாப்பிட்டால் என்னுடம்புக்கு ஆகாது.

பத்மா:—பரவாயில்லை, ஒரு நாள் அபூர்வமாய்ச் சாப்பிட்டால் ஒன்றும் செய்யாது.

கமலா:—என்ன, வீடு எல்லாம் ஒழுங்காய் விட்டதா? சாமான் எல்லாம் சரிவரவைத்

தாய் விட்டதா? இன்னும் வீட்டைப் பொறுத்தமட்டில் ஏதாவது சௌகரியங்கள் செய்ய வேண்டியிருந்தால் சொன்னால் செய்து கொடுக்கலாம்.

பத்மா :—ஓ! எல்லாம் சரியாய்விட்டது. உங்கள் உதவி இல்லாமலிருந்தால் இவ்வளவு சீக்கிரம் இந்தப் புதிய ஊரில் எனக்கு இவ்வளவு சௌகரியம் கிடைக்குமா? நீங்களும் எனக்குப் புதிதாய்த் தோன்றாமல் நெடுநாள் பழகினது மாதிரியே காணப்படுகிறீர்கள். அப்படியே வீடும் புதிதாகத் தோன்றவில்லை.

கமலா :—இல்லை, அப்படிச் சொல்வது அதிகம். நான் பிரமாதமாய் என்ன செய்து விட்டேன்?

அவள் வந்ததையும், பத்மா அவள் வரவுக்காக உபசரித்ததையும், வரவேற்ற வைபவத்தையும், பின்னால் சம்பாஷணையின் போக்கையும் கூர்மையுடன் கவனித்த ராஜம், அதிலும் எளியாளாம், எத்தகைய மனோபாவத்தை அடைந்திருப்பாளென நாம் கூறவேண்டுமா? அதிலும் அவள் ஒருவித அன்பை உத்தேசித்து வந்தவளாதலால் அதிகம் பாராட்டாமல், காப்பி தயாராகுமுன் நாம் நம் வீடு செல்வது உசிதமெனக் கருதியவளாய் உடனே எழுந்து "பத்மா! நான்போய் வருகிறேன். நேரமாயிற்று" எனச் சொன்னாள். பத்மாவும் இதை எதிர்பார்த்திருந்தவளாதலால் 'ஏன்? சரி' என இருவகைப் பொருள்படும்படியாக பதில் சொன்னாள். "சாவகாசமாய் இன்னொருநாள் வருகிறேன்" எனப் பகன்று ராஜம் வெளியே வந்தாள். பத்மாவின் வீட்டு வாயிற்படியிறங்கும்பொழுதே அவள் கண்களில் அவளறியாமலும் அவளால் தடுக்கமுடியாமலும் ஜலம் மளமளவென்று வடிய ஆரம்பித்துவிட்டது. அந்தோ பாவம்! அவள் வரும்பொழுது என்ன நினைத்து வந்தாள்! தெய்வசங்கல்பம் அதற்கு நேர்விரோதமாய்த் திரும்பசேர்ந்துவிட்டது. நாடி அடைந்ததும், கொஞ்சநேரம் செயலற்றிருந்தாள். பத்மா தன்னிடம் நடந்துகொண்ட மாதிரிக்காகப் பிறகு அவள் விசனமடைந்திருப்பாளென்றும் மற்றொரு நாள் தான் போனால் தன்னுடன் பட்சமாயிருப்பாளென்றும் நினைத்துக் கொண்டாள். பின்பு கமலா என்பவள் ஓர் பெரிய வக்கீலின் மனைவியென்றும், பத்மா குடியிருக்கும் வீடு அவளுடையதென்றும், வீடு திட்டம் செய்து கொண்டு இரண்டு நாள் கமலா வீட்டிலேயே இருந்து கொண்டு, பிறகு பத்மா இவ்விடம் வந்தாளென்றும், அதிலிருவரும் ஒப்பற்ற நட்புடையவர்களானார்களென்றும், அநேகமாயிருவரும் ஒவ்வு நோங்களில் சேர்ந்தே காணப்படுவார்களென்றும் ராஜம் அறியலானாள்.

நாம் ராஜத்தை விட்டு பத்மாவைப் பார்ப்போம். ராஜம்போனவுடன் கமலா "அதுயார்?" என்று கேட்டாள். அவளைச் சிறு வயதில் பார்த்ததாக அலட்சியமாகவும், சுருக்கமாகவும், மேல் பேச்சு வாராமலிருக்கும்படியும் பத்மா பதில் சொன்னாள். பின்பு இருவரும் பழமும் டீயும் சாப்பிட்டு விட்டுக் குழந்தைகளுடன் சந்தோஷமாய் விளையாடிக் கொண்டிருந்து இரவு ஏழரைமணிக்குப் பிரியலானார்கள். வரவர, கமலாவும் பத்மாவும் அத்தியந்த சிநேகிதிகளானார்கள். அழகிலும் அந்தஸ்திலும் ஒருவரை ஒருவர் வென்றார்கள். இருவர்க்கும் வீட்டுக்கவலை கிடையாது. பாடசாலை நேரம் தவிர இருவரும் அநேகமாய் ஒன்றாகவே காணப்பட்டார்கள். இரு வீட்டுக்கு மிடையில் இரண்டு வீடுகளே தானிருந்தன. ஆகையால் அவர்களுக்கு வரப்போக வெகு சௌகரியமிருந்தது. அப்படியே நாட்களாயின.

என்றைக்குத் தன் பாலிய சிநேகிதி என்றும், தன்னுயிர்த் தோழியென்றும், தன்னுயிரினும் உயர்ந்தவள் என்றும், தன்னருமைக் குழந்தை

களுக்கும், தன் உத்தம பதிக்கும் மேற்பட்டவளென்றும் சிரேஷ்டமானவளென்றும் தன்னால் கருதப்பட்ட அப்பேர்பட்ட பத்மாவைப் பார்க்கப் போய்வந்தாளோ அன்றே ராஜம் மனம் கவலையால் சூழப்பட்டுக் கலவரமடைந்தாள். மனம் குன்றினாள். மெய் சோர்ந்து வாடினாள். தவிர, பித்துப் பிடித்தவள் போல் தன் செயலற்றுத் தவிக்கலானாள். ஆகிலும் தன்னை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் தன் புருஷனுக்கும் குழந்தைகளுக்கும் தான் செய்ய வேண்டிய கடமையைச் சற்றும் குறைவில்லாமல் செய்யலானாள். அவள் புருஷன் என்ன கண்டார். ஆகையால் அவளைப்பற்றி அவர் கவனிக்க இடமில்லை. ராஜமோ வரவர சாப்பாட்டிலும் பிரியமில்லாதவளாய் தூக்கமும் வரப் பெறாதவளாய் வீட்டு வேலைகளை மாத்திரம் செய்துகொண்டு வந்தாள். எவ்வளவு நாள் தாங்கும்! சரீரம் மெலிவடைந்து இளைத்துப் போனாள். அதனால் வேலை செய்யச் சக்தி அற்றவளுமானாள். அவள் பெண்ணுக்கு ஏழு வயதிருக்கும். மற்றவை இரண்டும் முறையே நான்கு, இரண்டு வயதுள்ள சிறு குழந்தைகள். வீட்டில் யாரும் கிடையாது. அவள் கண்களில் ஜலம் ததும்பிக் கொண்டேயிருக்கும். அதனால் அவள் வீட்டில் குழந்தைகளுடன் சந்தோஷமாயிருக்க முடியாமற் போய்விட்டது. ஒருநாள் "அம்மா! நீ ஏன் அழுகிறாய்? நான் சமர்த்தாயிருக்கிறேன். நன்றாய்ப் படிக்கிறேன், நீ அழாதே, இல்லாவிட்டால் நானும் அழுது விடுவேன்" என்று அவள் பெண்குழந்தை கேட்கும். அக்குற்றமற்ற குழந்தையின் வார்த்தையைக் கேட்டால் அவள் துயரம் இன்னும் பொங்கிவழியும். அக்குழந்தைக்கு பதில் சொல்லச் சக்தியற்றவளாய் மறைவில் போய் விடுவாள். அது "அப்பா! அம்மா ஏன் சும்மா அழுகிறாள்?" என்று தகப்பனிடம் சொல்லும். அவர் ஏன் என்று கேட்டால் "என்னமோ அவள் உளறுகிறாள்" என்று சொல்லி அவ்வார்த்தையை மறக்கடித்து விடுவாள் ராஜம். கொஞ்சநாள் பொறுத்து இன்னொருமுறை பத்மாவைப் பார்த்து வரலாமாவென நினைத்தாள். ஏன், ஒருகால் அவள் நம்முடன் அன்புடனிருந்தாளானால் நம் விசனம் குறைந்து போகுமேயென நினைத்தாள் பேதை ராஜம். அவ்விதமே தீர்மானித்து அவள் கால்கள் பின் இழுக்க, அவள் அன்பு முன் தள்ளப் பத்மாவின் வீட்டை அடைந்தாள். அவள் முன் பார்த்திருந்ததை விட அவ்வீடு சில புதியதும் நாகரிகமானதுமான சாமான்கள் நிறையப் பெற்று வெகு அழகாய் விளங்கியது. அச்சமயம் பத்மாவும் கமலாவும் சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பக்கத்தில் பூவேலை செய்யப்பட்ட அழகான தட்டில் மல்லிகைப் புஷ்பமும், மற்றொரு தட்டில் அதிகமணம் வீசும் மருவும் சில ரோஜாபுஷ்பங்களும், தலைக்குத்தடவிக் கொள்ளத் தைலமும் சீப்புமுதலியனவும் வைக்கப்பட்டிருந்தன. வீட்டுக்குள் வந்த ராஜத்தைப் பார்த்தும் அறியாதவள் போல் தன்னாட்டத்தில் கவனமாயிருந்தாள் பத்மா. அதை அறிந்த ராஜம் 'வந்தோ ஆய்விட்டது. என் எண்ணத்திற்கு விரோதமாய் நான் திரும்பினேனானால் இதுவே இந்த வீட்டுக்கு வந்தது கடைசிமுறையாகுமென்பதில் சந்தேகமில்லை. 'பார்ப்போம்' என வீட்டைச் சுற்றிப் பார்ப்பவள் போல் ஒவ்வொரு அறையையும் அங்குள்ள அழகான சாமான்களையும் அவைகள் வைத்திருந்த நேர்த்தியையும் பார்த்துக்கொண்டே போனாள். அப்படியே பூந்தோட்டத்தையும் சுற்றிவரலானாள். திரும்பிவரும் பொழுது அவள் படுக்கை அறையின் வழியாய் வந்தாள். அப்பொழுது அவள் கண்களில் திடீரென்று ஓர் வஸ்து தோன்றியது. அப்படியே திகைத்து நின்றாள். பிறகு சமாளித்துக் கொண்டாள். அது

என்னவென்றால் கமலாவும் பத்மாவும் சேர்ந்து பிடிக்கப்பட்ட ஓர் படமாயிருந்ததால் அது அவள் மனதை வெகுவாய்க் கவராலாயிற்று. அப்படியே அதை ஓர் ஐந்து நிமிஷம் உற்று நோக்கிய வண்ணமாயிருந்தாள். பின்னிட்டுத் தனக்குள், 'ஆம் இதுதான்' சரியான ஜதை' என்றாள். "எல்லாவிதத்தாலும் பார்வைக்கு வெகு பொருத்தமாயிருக்கிறது. ஆனா லிருவருக்கும் ஒரே ஒரு விதத்தில் நேரான வித்தியாசமிருக்கிறது" எனத் தன்னுள் சொல்லிக்கொண்டு அவ்வறையை விட்டகன்றாள். திரும்ப பத்மா இருந்த இடத்துக்கே வந்து சேர்ந்தாள். அச்சமயம் அவர்கள் ஆட்டம் முடிந்த தருணமா யிருந்தது.

"வீடெல்லாம் பார்த்தாயா? இந்தம்மாள் வெகு அழகாய் வீடு கட்டியிருக்கிறார்களல்லவா?" என்று ராஜத்தை நோக்கிக் கேட்டாள் பத்மா! அப்பொழுதும் அவளை 'வா' என்றாவது 'உட்காரு' என்றாவது சொல்லவில்லை. 'ஆம், வீடு புதிய மாதிரியாயும் வெகு முன்யோசனையுடனும் அழகாய்க் கட்டி முடிக்கப்பட்டிருப்பதும் தவிர, வீட்டுச் சாமான்களும் அவை வைக்கப்பட்டிருக்கும் ரீதியும் அதினும் நன்றாயிருக்கிறது. அதற்கு மேலாய் நீங்கள் உண்மை அன்பு பூண்டொழுகும் பான்மையும் மிகவும் நேர்த்தியாயிருக்கிறது' என்று பத்மாவின் கேள்விக்கு அதிக சந்தோஷமுடன் ராஜம் பதிலளித்தாள். அந்தோ! தன்னுடன் பத்மா இவ்வளவாவது பேசினாளே என்ற ஆனந்தம் ராஜத்துக்குக் கொஞ்ச நஞ்சமல்ல. தானாகவே உட்கார்ந்தாள். அதன்பின் பத்மா இவளுடன் பேசவில்லை. கமலாவும் பத்மாவும் தலை வாரிக்கொண்டார்கள். பூ வைத்துக்கொண்டார்கள். குழந்தைகளை அலங்கரித்தார்கள். வெகு சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டே யிருந்தார்கள். ஆனாலும் ஒரு பூவையாவது எடுத்து ராஜத்தின் கையில் கொடுத்தார்களில்லை. அவர்கள் கொடுக்கவில்லையென்ற வருத்தம் ராஜத்துக்குச் சிறிதுமில்லை. ஏன்? அவள் ஏதோ ஓர் எண்ணத்தால் அவள் தன் தலையில் பூவைப் படுதேகிடையாது. இதை அவள் யாரிடமும் சொன்னதும் கிடையாது. மெத்த அவசியமிருந்து யாராவது கேட்டால் தலையுள் வைத்திருப்பதாகச் சொல்லிவிடுவாள். ஆகையால் அவள் மனம் அதில் நாடவில்லை.

பத்மாவின் உள்ளங்கையைப் பார்க்கவேண்டுமென்று ராஜம் வெகுவாய்ப் பிரயாசப்பட்டாள். அது முடியவில்லை. எதற்காகவென்றால், அவர்கள் பன்னிரண்டு வயதுப் பெண்களாயிருக்குங்கால் ஒரு நாள் மாலை நேரம் ஸ்கூல் விட்டபின் ஓர் செடிகளடர்ந்துள்ள தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவ்விடம் ஓர் விதமான பால் வடியும் மரமொன்றைக் கண்டார்கள். அது எப்படியிருக்குமென்பதைப் பார்ப்பதற்காக அதைக் கொஞ்சம் ஒடித்தார்கள். அச்சமயம் தோட்டக்காரன் "அம்மா! அந்தப்பால் கையில் பட்டால் பிறகு என்ன செய்தாலும் போகாமல் ஒருவித கருப்பாய், மச்சம் மாதிரி நின்று விடும்" என்றான். உடனே பத்மா அதைப் பரீட்சித்துப் பார்ப்பதாகச் சொல்லி ஒரு சிறு கொம்பை ஜாக்கிரதையாய் ஒடித்து ராஜத்தின் உள்ளங்கையில் 'ப' என்று தன் பெயரின் முதல் எழுத்தை எழுதினாள். மறுநிமிஷம் ராஜம் மற்றொரு கொம்பை ஒடித்து பத்மாவின் வலதுகையைப் பிடித்து அதன் உள்ளங்கையில் சிறிய முற்றுப் புள்ளி ஒன்றை வெகு அழகாய்வைத்தாள். "என் ராஜம்! நான் பெயரை எழுதினேனே. உனக்கெழுத இஷ்டமில்லையா?" என்றாள். "என் பெயரின் முன்னெழுத்து இரண்டு எழுதவேண்டும். அதனால் உன் அழகான கையின் அழகு குறைந்து விடும். தவிர, உன் தை ஆட்சரம் எனக்கு உன்னை மறக்காமலிருக்க உதவும்.

என் கைப் புள்ளி உனக்கு என்னை மறக்கும்படி செய்யவுதவுமல்லவா" என்று பரிகாசமாய்ச் சொன்னாள். அதற்கு பத்மா "எந்த நாளிலும் உன்னைவிட உயர்ந்த சிநேகிதி எனக்குக் கிடைக்கக் கூடுமென்று நான் கொஞ்சமும் நினைக்கப் போவதில்லை" என்றாள். சிறு வயது வார்த்தையை என்றைக்கும் நிலை நிறுத்தமுடியுமா? தவிர, உலகில் அனைவரும் ஒரேமாதிரி சுபாவத்துடன் இருக்கமுடியுமா? அன்றைய சம்பவத்தை ராஜம் அஸ்திவாரமாய்க் கொண்டாள். பத்மா வரவர அதை அடியுடன் கிள்ளி யெறிந்தாள். ராஜம் அடிப்படியாய்க் கொண்டு தன் எண்ணங்களாகிய மாசற்ற அன்பினால் .மனக்கோட்டை கட்டிக்கொண்டே போனாள்.

ராஜமெங்கே, பத்மா எங்கே. முன்னவள் கல்வியில்லாத நிரட்சரகுட்சி. மிகுந்த ஏழை. தவிர, அதிக அழகில்லாதவள். பின்னவள் உயர்ந்த படிப்பு வாய்ந்தவள், ஐசுவரியமுள்ளவள். நல்ல அழகி. இத்தகைய ஸ்திதியிலிருவரும் அன்பு பூண்டொழுகுவது தகுமா? ஏற்குமா? தவிர, எளிய அப்பேதையைத் தன் அன்புக்குரியவள் என்று சொல்வது பத்மாவின் அந்தஸ்துக்குத் தாழ்மையைக் கொடுக்குமல்லவா? அன்னியர்தான் நகைக்கமாட்டார்களா? ஆதலால் முதலிலிருந்தே ராஜத்தை அலட்சியமாய் மரியாதையின்றி இருக்கச் செய்தாள். தன் கையில் அடையாள மிருப்பதால் பத்மா கையைப் பார்க்க அவள் நினைத்தாள்.

ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கொஞ்ச நேரம் பார்த்தாள் ராஜம். பத்மா ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. எந்த அன்பு அவளை இங்கு இழுத்துக்கொண்டு வந்ததோ அது அவ்வளை வீட்டுக்குப் போகத் தள்ளிற்று. துக்கத்தால் பிடிக்கப்பட்டிருந்த அவள் தன் நேசியைக் காணும்பொருட்டு தலைவாரி முகம் கழுவிப் பொட்டிட்டு தன் விசனத்தை வெளிக்குக் காட்டாமல் கூடியவரை சந்தோஷமாகவே இங்கு வந்தாளானாலும், அவளால் விசனம் தாங்கமுடியாமல் கண்ணீர் வர ஆரம்பித்து விட்டது. "சே! இனி நாமிங்கிருப்பது தகாது. ஒரு விதமும் முடியாது. நாம் வீடு செல்வோம்" எனத் தன்னுள் நினைத்து "நான் போய் வருகிறேன், பத்மா" என்று கூறிப் புறப்பட்டாள். "உம்" என்று தலையை அசைத்தாள் பத்மா. கமலா அப்பொழுது "அவளுக்குப் பூ கொடுக்கலாமே" என்றாள். "அதனாலென்ன, பாவாயில்லை" என்று ராஜம் சொல்லி வாசலுக்கு வர ஆரம்பித்தாள். கமலாவின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கவேண்டியதற்காக இரண்டு ரோஜாப் புஷ்பங்களை ராஜத்தின் கையில் கொடுத்தாள். அச்சமயம் திடீரென்று அவளுள்ளங்கை மச்சம் ராஜத்தின் கண்ணில் பட்டது. ஓர் இமைநேரம் ராஜம் அப்படியே நின்றாள். மறு நிமிஷம் வீட்டை நாடி வந்தாள். அச்சமயம் ராஜத்தின் மனோஸ்திதியை விஸ்தரித்து எழுத மனமில்லாமல் நிறுத்தலானேன்.

இப்படியே பின்னும் மூன்று மாதங்கள் கழிந்தன. பத்மாவின் க்ஷேமத்தைப்பற்றி ராஜம் பிறரால் அறிந்துகொண்டேயிருந்தாள். பத்மா அவளை நினைத்ததுகூடக் கிடையாது. எவ்வளவுதான் உயர்ந்தவளானாலும் உண்மை அன்பு என்ற விஷயத்தில் ராஜத்துக்குப் பின்னடைந்தவள் பத்மா என்று சொல்லுவது முற்றும் மிகையாகாது ஏன், நேர்விரோதமானவளென்றே சொல்லலாம். ஆனால் பத்மாமீதில் தப்பில்லை ஏன்! தன்னை நேசிக்கும்படியோ தன்னைப் பார்க்க வரும்படியோ அவள் சொன்னாளா? இல்லை, யோசனை யுள்ளவளாயிருந்தால் ராஜம் எப்பொழுது தன்னை பத்மா மதிக்க

வில்லையோ அப்பொழுதே அவன் தன் எண்ணத்தை அகற்றி யிருக்கவேண்டு மல்லவா? அப்படிச் செய்யாமல் 'ஐயோ! அவள் அன்பு நமக்குக் கிடைக்கவில்லையே' என்று அதைப் பற்றிக்கொண்டு தன் வாழ்நாளை அர்த்த மில்லாத வழியில் துக்கத்திற்காளாக்கி அல்லும் பகலும் அவள் ஸ்மரணையாயிருக்க ஏன் வழி செய்து கொண்டான்! தன் குடும்ப சந்தோஷத்தை இழந்தான்! தேக சுகத்தையும் மனோ அமைதியையும் கெடுத்துக் கொண்டான்! பத்மா இவனை இப்படி இருக்கச் சொன்னாளா? இல்லை. அவ்வளவு உன்னத ஸ்திதியிலிருக்கும் பத்மாவிடமிருந்து இவன் எதையாவது பிரதித்து விரும்பினாளா? இல்லை. தான் அவள்மேல் வைத்த அன்பையும் மற்றப்படி தன் குழந்தைகளுட்பட இவ்வுலக முழுமையும் தனித்தனித் தராசுத் தட்டில் வைத்தால் தன் அன்புதான் தாழும் தட்டாகு மென்பது அவள் நினைவு. அப்படியிருக்க அவனிடம் விரும்பவேண்டிய வேறு ஒரு பொருளும் அவளுக்கில்லை. பல பல சொல்லி என்ன. அவளுக்காகவே தான் உயிர் வாழ்வதாகவும் நினைத்துக்கொண்டிருந்தாள்.

ராஜத்தைப் பார்ப்போம். இப்பொழுது சதா அவன் வீட்டில் அவள் படுக்கை விரிக்கப்பட்டே யிருந்தது. ஏன், அவசியமான வேலைகளைச் செய்துவிட்டு அவள் படுக்கையிலேயே யிருந்தாள். என்று பத்மாவின் வீட்டிலிருந்து வந்தாளோ அன்றிலிருந்து பித்தப் பிடித்தவள் போலானாள். ஆகாரம், நித்திரை அநேகமாய்ப் போய்விட்டது. பத்மாவின் அன்பை மறக்கவோ அல்லது குறைத்துக்கொள்ளவோ அன்றி வெறுத்துத் தள்ளவோ கொஞ்சமும் முடியவில்லை. சர்வ சதாவேளையும் கண்ணீர் வடித்தவண்ணமாகவே யிருந்தது. அவள் மனதிலும் கண்களிலும் பத்மாவின் அன்பான அழகிய உருவம் ஜ்வலித்துக்கொண்டே யிருந்தது. அந்தோ! கமலாவும் பத்மாவும் சேர்ந்திருக்கும் தோற்றம் முன்னிலையிலேயே நிற்கும். "உலகில் பதியே தெய்வமென்று பூஜிக்கும்படி சாஸ்திரமும் நியாயமும் கூறுகிறது. அந்தோ! எனக்கு என் அருமை பத்மா அல்லவோ முதல் தெய்வமாகக் காணப்படுகிறாள். என் பதிக்கு இவ்வொரு விஷயம் தவிர வேறு எவ்விதத்தாலும் நான் தீங்கிழைக்கவில்லை. அவர் என்னைக் கடிந்துகொண்டதே கிடையாது. நானும் கூடியவரை நீதியுடன் தான் நடந்து வந்தேன்" என்று தன்னுள் கூறிக் கொள்வாள்.

ராஜத்தின் அகன்ற கண்களும் சிறுத்துப் போய்விட்டன. அவள் அன்புதான் சலிப்படையவில்லை. அவள் அவயவம் சலிப்புற்றது. என்ன புத்தியில்லாதவளென்று சொன்னாலும் ராஜம் பொறுமை யுடையவள் என்றே சொல்லவேண்டும். தன் துயரத்தைக் கடவுள் தவிர யாரிடமும் வெளியிட முடியாமல் சகித்துக் கொண்டாளல்லவா? அந்தோ பரிதாபம்!

கமலாவைப் பற்றி அவள் ஒன்றும் நினைக்கவில்லை. 'நான் மகாபாபம் செய்தவள். அவள் புண்ணியம் செய்தவள்" என்று மாத்திரம் நினைப்பாள். தன்னை அவள் திருப்திப்படுத்தவில்லையே என்று கருதினளே தவிர அவள் விஷயத்தில் அவளுக்குப் பொறுமையில்லை. இவள் மனம் இவ்வளவு கேடான ஸ்திதிக்கு வந்ததும் அந்த அன்பிலிருந்து உண்டானதே தவிர பொறுமையால் வந்ததல்ல. அவளுக்கு மெய்மையில் பொறுமையிருக்குமானால் அவளை அடியோடே மறந்து போயிருக்கக் கூடும். அன்றி அவளுக்கும் கமலாவுக்கும் கெடுதல் செய்யத் தோன்றியிருக்கும். ஆகையால் இது மிதமிஞ்சின அன்பின் அருமையால் உண்டான தோஷம், தான். மேலும், ராஜம் அடிக்கடி "நான் இந்த இழிவான நிலைமையை அடைந்

த்து பத்மாவால் அல்ல. என்னுடைய புத்தியில்லாத்தனத்தால் தான். ஆகையால் அவளைச் சொல்ல நான் முற்படேன்' எனச் சொல்லிக் கொள்வாள். இவளை மாத்திரம் அவள் நேசித்திருந்தாளானால், அவள் ஒன்றல்ல, ஆயிரம் கமலாவை நேசித்தபோதிலும் மனம் சோர்வடையமாட்டாள். ஏனெனில் தன் தோழியின் மனம் இன்புற்றிருந்தால்தானே தனக்கும் சந்தோஷமென்பதை நன்குணர்ந்து நடப்பாள். எப்படியானாலென்ன, அவள் கடைசியில் உலகவாழ்வையே வெறுக்கத் தொடங்கிவிட்டாள். அவள் தேகஸ்திதியும் மனோஸ்திதிக்கு ஏற்றவாறு அநுகூலமாயிருந்தது. ஆனால் "என் அன்புக்கு அணிகலமான பத்மா இருக்கும் உலகத்தை விட்டு நான் போகவேண்டியிருக்கிறதல்லவா. அவள் உருவம் அப்பொழுது என் மனதையும் கண்களையும் விட்டு நீங்கிவிடுமே. அடுத்த ஜன்மத்தில் எனக்கு அவள் நினைவு இருக்கமுடியுமோ?" என எண்ணிக் கலங்குவாள்.

"ஐயோ! கால்கள் போய்விட்டனவே! பலவீனத்துக்குக் கட்டுப்பட்டு விட்டேனே! இல்லையேல் இன்னும் ஒரு முறை அவளைப் பார்த்து ஆனந்திப்பேனே." என அங்கமுருகிக் கரைவாள். கடைசியில் ஓர் கடிதத்தையும் பேனாவையும் எடுத்தாள். "ஓ! சர்வவல்லமை படைத்த தெய்வமே! நின் பாதசாட்சியாய் என் பதிக்கு யாதொரு தீதும் நேராத வழியில், நான் என கண்ணின் மணியான அரிய பெரிய செல்வமாகிய பத்மாவை நேரான வழியில் மெய்யன்பு பூண்டொழுகினது மெய்யானால், அந்நிமித்தமே யானிந்த ஸ்திதியை அடைந்தது உண்மையானால், இச் சிறுகடிதம் என்கடைசி நேரத்தில் என்னைச் சந்தோஷிப்பிக்கட்டும். இது உண்மை, சத்தியம்" எனக் கூறி ஏதோ நான்கு வரி அதில் எழுதலானாள். விலாசமும் காணோம். கவரும் காணோம். கடைக்கு சாமான் எழுதும் கடிதமாதிரி அது இருந்தது. தன் பெண்ணாகிய அமிர்தவல்லியைக் கூப்பிட்டு ஏதோ அடையாளம் சொல்லி அக்கடிதத்தை அவள் கையில் கொடுத்தனுப்பினாள்.

அக்குழந்தை அதை பத்மா வீட்டுக்குக் கொண்டுபோய் அவளிடம் கொடுத்தாள். அன்று விடுமுறைநாள். ஆகையால் அவள் உடுத்திக் கொண்டு வெளியில் புறப்படத் தயாராயிருந்தாள். அவள் தன் மோட்டாருக்காகவும், கமலாவுக்காகவும் எதிர்பார்த்திருந்தாள். ஆனால் அன்று அவள் தினம் போல் சந்தோஷமாயிருக்கவில்லை. ஏனெனில் அன்று காலை தன் பெட்டியில் ஏதோ தேடிக்கொண்டிருந்தாள். அச்சமயம் அவளுக்குக் கைக்குட்டை ஒன்று கிடைத்தது. அதை எடுத்துப் பார்த்தாள். அது வெகுவாய் அழுக்குப் படிந்து மங்கிக்கிடந்தது. ஆனால் அதில் கைவேலை செய்யப்பட்டிருந்தது. மிகவும் அழகாயும் அபூர்வமான வேலைப் பாடமைந்ததாயுமிருந்தது. தவிர அதில் ஒரு பக்கம் 'ப' என்றும் எதிர் மூலையில் 'ரா' என்றும் சித்திரிக்கப்பட்டிருந்தது. அதைக் கண்ணுற்ற பத்மா ஏதோ பூர்வ ஞாபகத்தால் பீடிக்கப்பட்டவளானாள். சிறு வயதில் ராஜம் தன் கையால் அதைச் சித்திரித்துத் தன் தோழிக்கு ஞாபகார்த்தமாக அளித்திருந்தாள். அப்பொழுது பத்மா அதை வெகு அன்புடன் போற்றிவந்தாள். நாளடைவில் அவள் மனம் மாறி விட்டதால் அவள் அதை நினைத்தது கூடக்கிடையாது. தவிர அதை எடுக்கவுமில்லை; ஆதலால் அது ஒரு பெட்டியின் அடிமூலை ஸ்தானத்தை அடைந்திருந்தது. திடீரென்று பார்த்ததும் அவள் அதைப் பெற்றுக்கொண்ட நாளும் ராஜம் அப்பொழுது தன்னுடன் பேசின வார்த்தைகளும், மறுநாள் தன்னை விட்டுப் பிரிய வேண்டுமேயென்ற காரணத்துக்காகத் தன் மடியில்

அவள் தன்னை வைத்துப் படுத்துக்கொண்டு சிறு குழந்தைபோல் விம்மி விம்மி அழுத கோலமும், தன்னால் அவள் சமாதானப் படுத்தப்பட்டதுமாகிய பல சம்பவங்கள் ஒன்றின்பின் ஒன்றாக அன்றுதான் நடந்தவை போல் தோன்றலாயின. அதன்பின் தன்னைக் காண இருமுறை ராஜம் வந்ததையும், தன்னால் அவள் நடத்தப்பட்டதையும் உணர்ந்தாள். அச்சமயம் அவள் மனமுழுமையும் ராஜத்தினிடமே செலுத்தி விட்டாள். மறு நாள் அவள் இருப்பிடத்தை அறிந்துகொண்டு தானாகவே போவதாக உறுதிகொண்டாள். ஆகையால் அக்கைத்துண்டை எடுத்து சோப்புப் போட்டு சுத்தம் செய்து அதை வெகு அன்புடன் அன்றைய உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டாள்.

குழந்தை அமிர்தம் கொண்டு வந்த கடிதத்தைப் பார்த்தாள். அந்த அழகான அட்சரம் ராஜத்தினுடைய தென்று அறிந்து கொண்டாள். அதைப் படித்தாள். அவள் முகம் போனமாதிரியும் தேகம் விறுவிறுத்ததும், கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் வடிய ஆரம்பித்ததும் 'ஐயோ! என் அருமை ராஜம்' என்று அவள் வாயிலிருந்து வெளிக்கிளம்பிய தீனஸ்வரமும் பார்ப்பவர் மனதை இளகச் செய்தன. அக்குழந்தை செயலற்று நின்றது.

என் பத்மா அந்த நிலைமைக்கு வந்தாள். 'போய்விட்டுவா' என்று கூட சொல்லப் பிரியப்படாமல், 'உம்' என்று தலையை அசைத்த பத்மா அந்தப் பேதை ராஜத்தின் கடிதத்தால் மனங் கலங்கி முகம் வாடி மெய் சோர்ந்தாள்; திகைத்தாள்; திரும்ப கடிதத்தைப் படித்தாள். அதாவது.

“என் அருமை பத்மா!

“வெகுகாலைக்குமுன் நான் கடைசியாய்ப் பிரிந்த அன்று எனக்கு மனமாறுதல் சொல்லி சமாதானப்படுத்தி என்னை மாமியார் வீட்டுக்கு அனுப்பிய என் இன்பரசமே! நான் எப்படிப் பெரியவளானேனோ அதே போல் என் அன்பும் நாளடைவில் வளரலாயிற்று. ஆனால் என் துரதிர்ஷ்டம் குறுக்கிட்டதனால் நீ சற்று மாறி விட்டாய். பாவாயில்லை. எனக்குப் பின்னிட்டு அதை ஒரு பொருட்டாயெண்ணி நீ துக்கிக்காதே. நீ கண்ணீர் விடுவதை நான் முழு மனதுடன் வெறுக்கிறேன். உன்மேல் எனக்குக் கோபமோ பொறாமையோ இல்லை. ஆனால் உன் தாபம் எனக்கு சகிக்கக் கூடியதாயில்லை. ஆணும் பெண்ணும் நேசித்தால் காதல் என்று சொல்வார்கள். ஆனால் அது காம சுகத்துடன் கூடிய இச்சை கலந்த காதலாகும். என் காதல் மனோசம்பந்தமான மாசற்ற உண்மை பூண்ட தெய்விகத்தன்மையுடன் கூடிய காதலாகும். ஆகையால் அவ்வளவு அருமையான உன்னை நான் கடைசியில் ஒரு முறை பார்க்க விரும்புகிறேன். அப்பொழுதுதான் என் ஆத்மா சாந்தி அடையும். அதிகமெழுத முடியவில்லை. அலட்சியமாய் என்னைத் தவறிவிடாதே. என் கையில் நீ எப்பொழுதும் வீற்றிருக்கிறாய்.

“உன் வரவை எதிர் நோக்கும்,

“ராஜம்.”

என வரைந்திருந்தது.

பின்பு அக்குழந்தையை நோக்கி “நீ ராஜத்தின் பெண்ணா? உன் பெயரென்ன?” என்றாள். அது “ஆம்” என்றும், “அமிர்தம்” என்றும் சொல்லிற்று. அடுத்த நிமிஷம் அக்குழந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு ராஜத்தைப் பார்ப்பதற்கு நடந்துபோவதாக வெளிப்புறப்பட்டாள். அச்சமயம் கமலா ஆடையாபரணங்களால் தன்னையும் குழந்தைகளையும் அலங்கரித்துக்கொண்டு பத்மா வீட்டுக்கு வந்தாள். வரும்பொழுதே 'என், கார் வரவில்லையா! நேரமாகவில்லையா?' என்று கேட்டுக்கொண்டே

வந்தாள். மனோ அமைதியற்றிருக்கும் பத்மா அவளை "வாருங்கள், உட்காருங்கள், கார் வந்து விடும். அவசரமாய்ப் போய், 15 நிமிஷத்தில் திரும்பி விடுகிறேன், இருங்கள்" என்று கூறி விட்டு வெளியே போனாள். உடனே கமலா 'என்ன! கால் நடையாகவா?" எனக் கேட்டாள். "ஆம், வந்துவிட்டேன்' எனப் போய் விட்டாள். "இது யாருடைய பெண்? அக் குழந்தையுடன் இவள் எங்கு போகிறாள்? அதி லும் இந்த நேரத்தில் நடந்து செல்ல வேண்டிய அவசியமென்ன? நாமறியாமல் இவள் செல்லு மிடம் யாது?" எனத் தன்னுள் கேட்டுக் கொண்டாள் கமலா.

பத்மாவும் குழந்தை அமிர்தமும் ராஜத்தின் வீட்டை அடைந்தார்கள். வீடு எளிய நிலைமை யில் இருந்தாலும் வெகு சுத்தமாயும் அவசிய மான சாமான்களுடனும் அழகாய்க் காணப்பட்டது. அன்று காலையிலிருந்தே பத்மா ராஜம் நினைவினால் மிகவும் சங்கடப்பட்டுக்கொண்டி ருந்தாள் என்று சொன்னோமல்லவா! வரவர பழைய நினைவுகள் அவளுக்குத் தோன்ற லாயின. ராஜத்தின் வீட்டை அடைந்ததும், சிறு வயதில் அவளும் தானும் அவள் பிறந்த கத்தில் விளையாடும் பான்மை கண்முன் தோன் றியது. அது நேற்று நடந்தது போலிருந்தது. கூடத்தில் கட்டில்மேல் ராஜம் வாசல் வழியைப் பார்த்துக்கொண்டிருந்த வண்ணமாய்ப் படுத் திருந்தாள். பத்மா உள்நுழைந்ததைக் கண்ட ராஜம், இவள் நம் அழைப்புக் கிணங்கி வந்தா ளென்று மிகவும் சந்தோஷித்தாள். இவ்வளவு கேவல ஸ்திதியில் ராஜத்தைக் காண நேர்ந்த தற்காக பத்மா அடைந்த சந்தோஷமும் துக்க மும் சரி சமமாயிருந்த தெனக்கொள்ளலாம். அதில் பேதமிருந்தாலும் இருவரும் கண்ணீர் வடிக்கலானார்கள். "வா! பத்மா!" என்று ஆனந்தமாய்க் கூவினாள் ராஜம். "என்! உனக் கென்ன உடம்பு? இந்த ஸ்திதியில் நான் பார்க்க நேர்ந்ததற்காகப் பெரிதும் விசனிக்கிறேன்" என்று தழதழத்தகுரலுடன் பகன்றாள் பத்மா.

"அவளைத் தன்னருகில் வரவழைத்துப் படுக் கையில் உட்காரச் சொல்லி, அவள் மடியில் தலை யை வைத்துப் படுத்துக்கொண்டு ராஜம் விம்மி விம்மி கேவலம் ஓர் சிறு குழந்தைபோல் அழ லானாள். அவள் புதிதாய்க் கட்டியிருந்த புடவை கெட்டுப் போகுமே என்று நினைத்து ஓர் துண் டை எடுத்து அவள் மடியில் போட்டுப் படுத் தாள். "பரவாயில்லை, என் பாலிய நேசமே! என் அருமை ராஜமே! உன்னைக் காட்டிலும் என் திணி எனக்கு உயர்ந்ததாக இன்று தோன்ற வில்லை. நீ எவ்வளவு நாளாய்ப் படுத்திருக்கிறாய்? உனக்குதவிக்கு யாரிருக்கிறார்கள்? என் அகம் பாவத்தைப் பற்றி நீ என்ன நினைத்தாய்? உன்னை வெகுவாய் நான் வருத்தப்படுத்திய வளானேன். நாம் சிறு வயதில் சகுந்தலா நாடகம் நடித்தோமல்லவா? அப்பொழுது நீ சகுந்தலையாகவும் நான் துஷ்யந்தனாகவும் நடித் தோமல்லவா? அச்சமயம் நீ பகன்ற வார்த்தை களை நான் லட்சியம் செய்யாமலிருந்தது போலவே என் வீட்டுக்கு என்னை நாடிவந்த உன்னை மனம் வெறுக்கும்படி நடந்துகொண் டேனல்லவா? 'என்னை மன்னி' என்று கேட் கவும் எனக்கு வெட்கமாயிருக்கிறது. இன்று முதல் நாம் பழையபடி உண்மை சிநேகிதி களாகிவிட்டோம். இது சத்தியம். இதோ பசுங்கொம்பினால் வைக்கப்பட்ட முற்றுப் புள்ளியைப் பார். இதோ உன் கையால் செய் யப்பட்ட சிறு வஸ்திரம் பார்" என்றாள். மேலும் அவள் தன் கையாலேயே வரைந்த 'ப' என்ற எழுத்தையும் பார்த்தாள். அவள் கண்ணீரையும் தன் கண்ணீரையும் ஏககாலத் தில் துடைத்தாள்.

"ராஜம்! யார் உனக்கு வைத்தியம் செய் கிறார்கள்?" என்று கேட்டாள். "அம்மா!

எனக்கெதற்கு வைத்தியம்? நீ தான் எனக்கு மருந்து. அதைப் பருகி ஜீவித்திருக்கப் போவதில்லை. ஆனல் அதைப் பருகி சாந்தியடையப் போகிறேன். அதற்காக நீ கிஞ்சித்தும் விசனிக்காதே. எனக்குப் பதில் குழந்தை அமிர்தத்தைப் பார்த்துக்கொள்" எனச் சொல்லி, "உன்மேல் கோபமில்லை. மன்னிக்கும்படியாகவும் ஒன்றும் காணேம். ஆனல் நீ என்னை மறவாதே" எனச் சொல்லி தன் தலையணை அடியில் இருந்த தன் படமொன்றை அவளுக்கெடுத்துக் கொடுத்துவிட்டு, 'நான் உன் சிநேகிதியா? என்னை நீ நேசிக்கிருயா?' என வெகுவான தயருடன் கேட்டாள். 'ஆம், ராஜம்! என் அருமைக் கண்மணி! உன்னைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து மூவுலகிலும் நான் காணவில்லை. இந்தப் புத்தி எனக்கு இன்றுதான் உதயமாயிற்று. என் கெடுமதியால் உன்னை மறந்தேன். நீயே என் உத்தம சிநேகிதி. இனி நீ கவலை கொள்ளாதே. நான் கைதேர்ந்த டாக்டர் ஒருவரை இப்பொழுதே கூட்டிவந்து உனக்குத் தகுந்த வைத்தியம் செய்து உன்னைப் பிழைப்பிக்கிறேன்' என்றாள்.

'ஓ! அது இனி முடியாத காரியம். என்னை நேசிப்பதாக உண்மையில் சொன்னதே எனக்குப் பெரும் சிலாக்கியம். இனி நான் இவ்வுலகில் அநுபவிக்க வேண்டியது யாது மில்லை. இனி வைத்தியம் ஒன்றும் எனக்குத் தேவையில்லை' என்று சொல்லி அவள் மெல்லிய கரங்களைத் தன் கைகளால் இறுகப் பிடித்து அன்பின் பெருக்கைத் தாங்க முடியாமல் ஒரு முத்தமிட்டாள். மறு நிமிஷம் தன் அன்பை அநுபவித்து முடித்துவிட்டதால் இனி இவ்வுலகில் தனக்கு வேலையில்லை யென்று தன் ஆவியை நீத்தாள்.

ஆ! அந்தோ பரிதாபம். கொடிது, மிகவும் கொடிது. பத்மாவின் துயரை வர்ணிக்க நம்மால் முடியாது. எழுதப் புகின் விரியுமென அஞ்சி இத்துடன் நிறுத்தலானேம். கொஞ்ச நாள் கழித்து அமிர்தத்தை அவள் தகப்பனர் அநுமதியின் மேல் தன்னிடமே வைத்துக் கொண்டுவிட்டாள். ராஜத்தின் உருவப் படத்தை வெகு அன்பாய் நேசித்தாள். ஹா! ராஜத்தின் மிதமிஞ்சின அன்பே அவளுக்கு முடிவை உண்டாக்கி விட்டது. அவள் பிழைத்திருந்தாளானல் அவள் பிற்கால ஜீவியம் வெகு நன்றாயிருந்திருக்கும். அந்தோ! ஆயுளைக் கொடுக்கும் சக்தி மனிதருக்கில்லை யல்லவா! நான் எவ்வளவு யோசித்தும் ராஜத்தின் செய்கை அன்பினல் உண்டான தாபம் என்று கொள்ளுகிறேனே ஒழிய பொறுமையால் விளைந்த கேடென்று என்னல் கருதமுடியவில்லை. ராஜத்தின் ஆத்மா சாந்தி அடைவதாக!

"கோகிலம்! இதுதான் ராஜத்தின் துர்ப்பாக்கியமான சரிதையாகும். ஒரு சமயம் அவள் புத்தியில்லாத பெண்ணெனக் கொண்டாலுங்கூட அவள் அன்பு எவ்வளவு உத்கிருஷ்டம் என்பதை மெய்ப்பிக்கிறதல்லவா?"

கோகிலம்:—ஐயோ! அவள் நம்மைப் போல் ஒரு பெண்தானே, அவள் பிழைத்திருக்கக் கூடாதா? தன் தோழிபால் கொண்ட காதலால் தன் அருமைக் குழந்தைகளையும் புறக் கணித்தாளல்லவா? இக்கதையை மேலெழுந்த வாரியாய்க் கவனித்தால், 'வேணும புத்தியில்லாத பெண்ணுக்கு, எவளோ சிநேகிதியாம், தன் மேல் பிரியங் கொள்ளவில்லையாம், அதற்காகக் கொழுத்துப் போய்ப் பிராணனை விட்டாளாம்' என்று சொல்ல இடங் கொடுக்கும். சாவதானமாய்ப் பார்த்தால் அதன் உண்மை நன்கு விளங்கும். 'பாபம், ராஜம் எனச் சொல்லும போது அவளுக்கு விசனமுண்டாகி விட்டது, அவர்கள் நடுவில் நான் இருந்திருக்

தேனால் இவ்வளவு தூரத்திற்கு இடம் கொடுக்காமல் சந்தோஷமாயிருக்கச் செய்திருப்பேன்.

கன. :—இது என்ன பைத்தியம். உன் கண்ணீரைத்துடை. இது கதை என்பதை மறந்தாயா? நேரமாயிற்று, விடுதிக்குப் போகலாம் வா! இராத்திரி அல்லது நாளைக்கு உனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய மற்றொரு கதை சொல்லுகிறேன்

எனச் சொல்லி அவளைக் கூட்டிக்கொண்டு மயிலாப்பூர் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் விடுதிக்குக் கனகம் அழைத்துப் போகலானாள். அன்றிரவெல்லாம் கோகிலம் ராஜத்தின் நினைவாகவேயிருந்தாள். கனகம் எளிதில் அவள் மனதை மாற்றி விட்டாள். கொஞ்சகாலத்துக்குப் பிறகு அவர்கள் தங்கள் படிப்பை முடித்து விட்டு தங்கள் சொந்த ஊரை அடைந்து சுகமே வாழ்ந்துவரலானார்கள். ஆனால் அவர்கள் ராஜத்தின் கதையை மாத்திரம் மறக்கவேயில்லை. அடிக்கடி அதைப் பற்றி பேசிக் கொள்ளுவார்கள். கோகிலமும் கனகமும் பூவும் மணமும் போல் வாழ்ந்து வந்தார்கள். உண்மை அன்பு எதையும் செய்யும்.

சுபம்.

பாங்கிகானம்.

(காலஞ் சென்ற சிறுமி R. பாப்பம்மாள்.)

(4-ம் தொகுதி, 600ம் பக்கம் தொடர்ச்சி.)

தந்தை நம்மைத் தந்த தெய்வம் பர்ங்கிமாரே சாருந்
தயாபர னென் றெண்ணடியே பாங்கிமாரே (த)

தாய் நமது கோயிலடி பாங்கிமாரே நித்தம்
தானினைந்து வாழ்வமடி பாங்கிமாரே (தா)

தினங்காலை யெழுந்திருப்போம் பாங்கிமாரே செய்ய
தெய்வமறை பாடிடுவோம் பாங்கிமாரே (தி)

தீதான கருமமதைப் பாங்கிமாரே சிந்தை
தோா தகற்றிடுவோம் பாங்கிமாரே (தீ)

துர்ப்புத்தி நாம் பழகோம் பாங்கிமாரே சுத்தன்
துயனிலை கொண்டிருப்போம் பாங்கிமாரே (து)

தூவா மணற் கேணி பாங்கிமர்ரே தோன்றுந்
தொல்லுலகை யூட்டிடுமே பாங்கிமாரே (தூ)

தெய்வமடி நங்கணவன் பாங்கிமாரே தினம்
சீர்பாதஞ் சொர்க்கமடி பாங்கிமாரே (தெ)

தேவாதி தேவனடி பாங்கிமாரே செப்புந்
தெய்வ மணவாளனடி பாங்கிமாரே (தே)

தையலார் தந்தனமே பாங்கிமாரே யந்தச்
சாருப பாகனடி பாங்கிமாரே (தை)

தொந்தமவன் சீர்கழலே பாங்கிமாரே யென்றுந்
தொலையாத செல்வமடி பாங்கிமாரே (தொ)

தோன்றும் பெருங்குணங்கள் பாங்கிமாரே யந்தத்
தோத்திரத்தை கொள்ளடியோ பாங்கிமாரே (தோ)

தௌர்பாக்கியம் நீங்குமடி பாங்கிமாரே யவர்
சீர்பாதம் நம்மதடி பாங்கிமாரே (தௌ)

இத்துணைவ ரெம்முயிரே பாங்கிமாரே யிங்ஙன்
இருந்துதவி செய்திடுவோம் பாங்கிமாரே (இத்)

நற்குணங்க ணம்மிருக்கை பாங்கிமாரே நல்ல
நாளெல்லாம் நம்மதடி பாங்கிமாரே (ந)

நாதருக்கு நாம்பாதி பாங்கிமாரே ஞான
நல்லறங்கள் செய்திடுவோம் பாங்கிமாரே (நா)

நிலையாச் சடலமிது பாங்கிமாரே நித்தம்
நினைவிருக்க வேண்டுமடி பாங்கிமாரே (நி)

நீர்மேற் குமிழியடி பாங்கிமாரே நிமித்தம்
நிலையற்ற செல்வமடி பாங்கிமாரே (நீ)

நுண்ணறிவு வேண்டுமடி பாங்கிமாரே நுட்ப
நூலறிவு கொள்ளடியோ பாங்கிமாரே (நு)

நல் நாற்று வாழுடியோ? பாங்கிமாரே — நங்கள்
நாதனோ? சொல்லிடுவீர் பாங்கிமாரே (நா)

நேருண்டு நங்கையவன் பாங்கிமாரே — நேயம்
நெடிதுண்டு வாழ்வமடி பாங்கிமாரே (நே)

வைவதுவு மில்லையினிப் பாங்கிமாரே — நாளும்
நங்கையை யமைதன்பர் பாங்கிமாரே (வை)

நொந்தார் பசியகற்றல் பாங்கிமாரே — நங்கள்
நாதரை யென்றேயுணர்வீர் பாங்கிமாரே (நொ)

நோற்பார் பெருந்தவர்கள் பாங்கிமாரே — நங்கள்
நாட்பதவ மாறிவர் பாங்கிமாரே (நோ)

நௌவல் பழம்போல பாங்கிமாரே — நாளும்
நல்லுவப்புக் கொள்வமடி பாங்கிமாரே (நௌ)

இந்நன்றி யெப்போதும் பாங்கிமாரே — இதயத்
திருத்திநிதம் வாழ்வமடி பாங்கிமாரே (இந்)

பத்துப் புளியங்கொட்டை.

(சிறுகதை)

(சகோதரி வி. பாலம்மாள்.)

அரசனல்லூர் அழகிய சிறு கிராமம். ஊர் அருகில் உள்ள பெரிய குளமும் தெளிந்த நீரோடும் வாய்க்காலும் அக்கிராமத்தின் அழகை அதிகப்படுத்தின. ஊரைச்சுற்றிலும் மதில் சுவர் போன்ற தென்னந் தோப்பு நீண்டு வளர்ந்து நிமிர்ந்து நின்றது. அவ்வூர் அக்கிரகாரத்திலுள்ள வீடுகள் பெரும்பாலும் இடிந்து பாழ்பட்டுக் கிடந்தன. அடடா! சுமார் இருபது வருஷங்களுக்கு முன் அவ்வூரைப் பார்த்திருந்தவர் இச்சமயம் காண்பரேல் கண்ணீர் விட்டுக் கதறியழுவரென்பது திண்ணம்! அதோ! அந்த மூலையில் மூலைவீடு இருக்கிறதே, அது யாருடையது தெரியுமா? மகாபாவ தீட்சிதரல்லவோ அவ்வீட்டில் வாழ்ந்தார். அவ்வீடு ஏன் இடிந்து பாழ்பட்டிருக்கவேண்டும்? மழமழப்பாய் மண்பூசி பசுமை நிறமாக மெழுகிக் கோலமிட்டுள்ள தெருத்திண்ணையில் அநேகம் பிரம்மசாரிகள் வேதாத்தியயனம் செய்த இடமல்லவா அது! அக்கினிஹோத்திரம் நடந்த அடுப்பங்கரையில் மூன்று புறத்திய சுவர்களும் இடிந்து மற்றப் புறத்திய குட்டிச் சுவரடியில் கழுதைகள் ஒண்டி நிற்கின்றனவே. ஏன், தீட்சிதர் மகன் தீட்சிதனாகவே இருந்திருப்பின் அவ்வீடு பாழ்த்திருக்குமா? பாவதீட்சிதருக்குத் தன் மகன் நாகரிகமுறையில் உத்தியோகம் செய்யவேண்டு மென்ற ஆசை எழும்பிற்று. ஆங்கிலங் கற்று பட்டப் பரீட்சைகளில் தேறினால் மாதமாதம் நூற்றுக்கணக்காக சம்பாதிக்கலா மென்ற எண்ணத்தால் தன் மூத்த மகன் அகோர வீரபத்திரனை ஆங்கிலம் படிப்பித்தார். ஒருவாறாகப் பையன் தனது இருபத்தைந்தாவது வயதில் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறினான். மேல் படிப்பிற்கு வசதியில்லை. அகோரன் சென்னையில் டிராம் கம்பெனியில் மாதம் இருபது ரூபாய் சம்பளத்தில் அமர்ந்துள்ளான். குடும்பச் செலவிற்கே அவன் திண்டாடுங்கால் கிராமத்திலுள்ள வீட்டை கவனிக்க வழியேது? அந்த கூர்ம கனபாடி வீடு ஏன் தரை மட்டமாயிருக்கின்றது? சிறிய வீடாயிருந்தாலும் சுத்தமாயிருந்ததே. பின்புறத்தில் பால் கறக்கும் குள்ளிப்பசு ஒன்று; கூடத்தின் ஓரத்தில் வருஷம் முடியக்காணக் கூடிய நெல் கொட்டிய நெற்குதிர் ஒன்று, இவையெல்லாமெங்கே? அந்த வீடா! அது கூரை பிரிந்து மழையில் மண் சுவர்களும் கரைந்து விட்டன. கூர்ம கனபாடி பிள்ளை பிஏ தேறியதும் தாசில் ராமய்யா தன் மகளை அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்

தீர். அச்சமயம் அவர் கொடுத்த வரதட்சணை 2,000 ரூபாய்க்கு மருமகன் பி. எல். பரீட்சைக்குப் படிக்கவேண்டுமென்று கட்டளையிட்டார். மருமகன் அப்பரீட்சையிலும் தேறிவிட்டான். தெருவாயிலில் வக்கீல் என்ற கரும் பலகையும் இருக்கின்றது. ஆனால் வருமானம் மட்டும் கிடையாது. 'மனோகர விலாஸ்' காப்பி கிளப்பில் டிபன் சாப்பிட்டதில் ஏற்பட்டுள்ள இருநூறு ரூபாயையும் இன்னும் கொடுத்த பாடில்லை. இவ்வாறிருக்க, கூர்மகனபாடியின் இடிந்த வீட்டைக் கட்டுபவர் யார்? இதெல்லாம் கிடக்கட்டும். அதோ அந்த நடுத்தெருவிலுள்ள மெத்தை வீட்டில் ஒரு கிருகஸ்தன் இருந்தாரே; அவ்வீடு ஏன் பூட்டிக் கிடக்க வேண்டும்? அதுவா? பெரியபண்ணை ராமசுவாமி ஐயர் பெரும் பணக்காரர்தான். அவர் மகன் பி. ஏ. தேறவில்லை. சீமைக்கு அவனை யனுப்பினர். வாசுதேவன் அங்கு சென்ற மறுமாதமே அவ்வூரில் பிறந்த பெண் ஒருத்தியைக் கலியாணம் செய்துகொண்டானும். அவன் செலவிற்கு ஏராளமாக அனுப்பி வந்ததில் பங்கு மனைகளெல்லாம் அடமானம் வைக்கப்பட்டு முடிவில் அவைகளெல்லாம் கடன்காரர் வசமாயின. மகன் இந்தியாவுக்கு வந்து உயர்தர உத்தியோகம் வகித்தால் இழந்த ஆஸ்திகளுடன் லட்சக்கணக்கான முதலையும் சேர்க்கலாமென்ற ஆசையாலும் தைரியத்தாலும் ராமசுவாமி ஐயர் உற்சாகத்துடனேயே இருந்துவந்தார். வாசுதேவன் இந்தியா வந்தால் தன் மனைவிக்கு ஒத்துக் கொள்ளாதென்று கண்டிப்பாய்த் தெரிவித்துவிட்டான். கைக்காசும் போய் முகத்திலிருந்த பவிஷும் குறையவே ராமசுவாமி ஐயர், "உலகில் யாருக்கு யார் சம்பந்தம். அவனவன் விதி அவனுக்கு" என்று மனந்தேறி சன்னியாசம் பெற்று தீர்த்த யாத்திரை சென்று விட்டார்.

நல்லவேளை, இதோ ஒரு அழகிய சிறு வீடு சுத்தமாய் மெழுகிக் கோலமிட்டு லக்ஷ்மி கடாட்சத்தைக் கூவி யழைத்துக் கொண்டிருக்கிறதே. இதுதான் கிராமமுன்சிப் குப்பய்யர் வீடு. குப்பய்யருக்கு சேஷன் என்றொரு தம்பியுண்டு. அன்று மாலை ஏழு மணி சுமாருக்குக் குப்பய்யர் ஆற்றங்கரையில் சந்தியாவந்தனத்தை முடித்து நெற்றியில் விபூதிப் பட்டை துலங்கத் தமது தெருத்திண்ணையில் உட்கார்ந்தார். தெருத்தூணில் கட்டப்பட்டிருந்த வண்டி மாடுகள் தங்கள் கழுத்தில் கட்டிய சதங்கை கண கணவெனச் சத்தமிட உஸ், உஸ் என்று மூச்சுவிட்டவண்ணமாகக் கூடையிலிருந்த தவிட்டைத் தின்று கொண்டும், முகத்தை யடிக்கடி உயரத் தூக்கி, அவைகளில் பாதியை மண்ணில் இறைத்துக் கொண்டும் நின்றன. இதற்கிடையே யாரோ குறட்டை விடும் சத்தம் கேட்டுக் குப்பய்யர் தன் பார்வையைத் தெருத்திண்ணையின் மூலையில் திருப்பினர். முக்காடிட்டு மூலையில் படுத்திருந்தவன் தன் தம்பி சேஷனென்று அறிந்தார். "என்னடா! அஸ்தமித்து இரண்டு நாழிகையாயிற்று. கடா மாடுபோல் தூங்குகிறாய்" என்று அதட்டினர். இச்சந்தடி கேட்டுக் குப்பய்யர் தமக்கை சுப்பம்மாள் உள்ளிருந்து வெளியே வந்தாள். "குட்டிச் சுவர்போல் வயது முப்பதாயிற்று. குண்டோதரனைப் போல் வயிறு வெடிக்கத் தின்பதும் கும்பகர்ணன் போல் தூங்குவதும்தானா இவன் தொழில்? நான் எவ்வளவு முறை எழுப்பினேன், தெரியுமா?" என்று சீறினாள். இம்மட்டும் தப்பித்தோமென்று சேஷன் திண்ணையை விட்டுக் குதித்துத் தெருவில் சென்றான். குப்பய்யரும் இராச் சாப்பாட்டிற்காக உள்ளே சென்றார். அவர் சாப்பிட உட்கார்ந்ததும் தமக்கைக்கும் தம்பிக்கும் அடியிற்கண்டவாறு சம்பாஷணை நடந்தது.

குப்பய்யர் :—இதென்ன இது? இந்தத் துவையலில் புளியே இல்லை. ரசத்தில் உப்புப் போட மறந்து விட்டாயா?

சுப்பம்மாள் :—அடடா! மறந்தேபோனேன். எனக்கும் வயதாய் விட்டதால் மறதி அதிகம். வீட்டில் யாருமில்லையே என்று நான் செய்வதல்லாது என்னால் ஒன்றுமே முடிகிறதில்லை. எவ்வளவோ காரியங்கள் செய்த கை இது. எவ்வளவு சமாராதனைகளோ, திவசமோ, திங்களோ, கலியாணமோ, விடியப்பத்து நாழிக்கெழுந்து வேலை செய்த காலமெல்லாம் பறந்தோடி விட்டது.

குப்ப. :—ஏன்! அவளை யழைத்துக் கொண்டு வரச் சொல்லேன். நீ தனியாய் எத்தனை நாள் கஷ்டப்படுவாய்?.

சுப்ப. :—ஏதோ பிறந்த வீடென்றால் பெண்களுக்குப் பெரும் பித்து. அவளும் பிறந்தகம் போய் இரண்டு வருஷமாயிற்று.

குப்ப:—க்ஷாமதேவதைகள்! ஒரு ரயிலா? நல்ல வண்டிப்பாதையா? தபால் தந்தி வசதியா? ஒன்றில் ஒன்றுண்டா? அவ்வூருக்கு ஆள் நேரில் போனால் உண்டு. இல்லையென்றுமில்லை. என்ன செய்யலாம்?

சுப்ப. :—நீதான் போகவேண்டும். உன் மாமனாரும் மாப்பிள்ளை வருவதே இல்லை என்று என்னிடம் வருத்தப்பட்டார். இம்முறை நீயே போய் உன் மனைவியை யழைத்து வந்தால் நன்றாயிருக்கும்.

குப்ப. :—நான் இச்சமயம் எப்படிப் போக முடியும்? கிஸ்திவரும் காலமாயிற்றே. வாயிதாக் கொடுப்பவன் சரிவரக் கொடுத்து விட்டால் எனக்கு இவ்வளவு கஷ்டமேற்படாது. ஒக்கலை யாட்கள் குற்றமில்லை. தலையாரியை யனுப்பினால் உடனே கொடுத்து விடுகிறார்கள். இந்தப் பணக்காரர் படுத்தும் பாடு கொஞ்சமல்ல. நானே நேரில் கேட்டாலும் 'இன்று, நாளை' என்று சாக்கு தான். இவர்களை விரோதித்துக் கொண்டால் என் தலைக்கு ஆபத்துதான். இப்போது வந்திருக்கிற தாசில்தார் மகா முரடு. குரங்கு சுபாவம். என் மென்னியைப் பிடிக்கிறான். பள்ளத்தெரு அடிதடிக் கேசில் நான் முக்கிய சாட்சி. விசாரணைக்குச் சற்று முன்னதாகத்தான் போலீஸ்காரன் ஓடிவருவான். இவ்வளவு அவஸ்தையில் நான் வெளியூர் செல்வதெப்படி?

சுப்ப. :—சரி, அப்படியானால் நம்ம சேஷனைத் தான் அனுப்பு. அசடானாலும் ஆண்பிள்ளை தானே. அழைத்து வந்துவிடுகிறான்.

குப்ப. :—அது மகா அசட்டுக் கழுதையாயிற்றே. இந்த நச்சுவாயனை அங்கு அனுப்பினால் வாயில் வந்ததை உளறி விடும். பிறகு என்பாடு திண்டாட்டமே. பள்ளத் தெரு கேசில் முனியாண்டிக்காக துவரம்பட்டியிலிருந்து சில சாட்சிகள் வரப் போகிறார்கள். சடையாண்டிக்கு சாட்சி நான். நம்ம அசடு ஏதேனும் இக்கேஸ் பற்றி அங்கே உளறும். , பிறகு என் வேலைக்கே ஆபத்து தான்.

சுப்ப. :—அவனென்ன அத்தனை அசடா? கச்சிதமாய்ப் பத்துப் பேச்சுக்குமேல் பேசாதே என்று சொல்லியனுப்பினாலாயிற்று.

குப்ப. :—நீ சொல்வதற்காக நான் அவனையனுப்பவேண்டுமென்றி வேறில்லை, சரி, உன் இஷ்டம்போல் நாளைக் காலையில், அவன் சென்று வரட்டும்.

சேஷன் நல்ல பிள்ளைதான். ஆனால், கொஞ்சம் வெகுளி சுபாவம். இன்னதை வெளியிடவேண்டும், இன்னதை ஒளிக்கவேண்டுமென்று தெரியாது. சேஷன் இருபதாம் நூற்றாண்டில் பிறக்கக் கூடியவனன்று. முற்காலத்தில் பிறந்திருப்பானாயின் தலைபோனாலும்

பொய் சொல்லாத அரிச்சந்திரனெனப் பெயர் படைத்திருப்பான். உண்மையெல்லாம் ஆபத்தாகமுடியும் இக்காலத்தில் சேஷன் பேச்சுக்கள் அவனுக்குக் கஷ்டத்தையே விளைவிப்பதாயிருந்தன. குப்பய்யருக்கோ கிடைக்கும் சம்பளம் கொஞ்சம். தனது அதிகாரத்தைக் கொண்டே தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. இல்லையென்றால் அவருக்குக் கிடைக்கும் அற்ப சம்பளத்தில் ஒருகட்டு மச்சு வீடு, கறவை மாடுகள், பத்து எக்கர் நிலம், இரண்டு தென்னந் தோப்பு இவைகளெல்லாம் எப்படியுண்டாகும்? தவிர, ஓர் அடிதடிக் கேசில் அடியுண்டவன் மரத்திலிருந்து வீழ்ந்ததாக நிரூபித்துப் பெரியதனக்கார மாயாண்டியைக் காப்பாற்றியதால் ஸ்ரீமான் மாயாண்டி தனக்களித்த 600 ரூபாய்களையும் நகைகளாகச் செய்து கொண்டுவரும் பொருட்டே மனைவி சொர்ணம்பாளைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பியிருந்தார் என்றால்! அவருடைய அகடவிகட சாமர்த்தியத்திற்கு சேஷனுடைய உண்மையுரைகள் கேடு விளைவிப்பனவாயிருந்தன. இதனால் சேஷனுக்குப் பற்பல சமயம் அடி உதைகள் கிடைத்ததுமுண்டு. சேஷனுக்கிப்போது வயது முதிர்ந்து விட்டதால் குப்பய்யர் முன்போல் தம்பியைத் தடிகொண்டு அடிப்பதில்லை. நய பயத்தில் அவனைக் கண்டித்துத் தன் ரகசியங்களைக் காப்பாற்றி வந்தார். வெற்றிலை, புகையிலையென்றால் சேஷனுக்குப் பிரியமதிகம். யாராவது ஒரு சொத்தைப் பாக்கையும், காய்ந்த வெற்றிலையையும் கொடுத்தால் போதும். "என்னா! உன் அண்ணாவுக்கு சுக்கிரதிசை போலும்" என்றால் போதுமானது. உடனே சேஷன் ஆரம்பித்து விடுவான். கோடி வீட்டு கணேசய்யர் பசுமாடு தந்தது, நடுவீட்டு நாராயணன் வைக்கோல் அனுப்பியது, கிழவீதி கிட்டு நெல்வண்டி யனுப்பியது எல்லாவற்றையும் சாமரியாகப் பொழிந்து தன் தமையன் பிரதாபத்தை விஸ்தரிக்கத் தொடங்கி விடுவான். இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் தனக்கு நேரிட்ட ஆபத்துக்களைத் தீர்த்துக்கொள்வதில் குப்பய்யர் பாடு போதுமென்றாய்விட்டதுமுண்டு. தன் விரோதிகள் சேஷனின் வெற்றிலைப் பெட்டி காலியாயிருக்கும் சமயத்தை எதிர்பார்த்திருக்கும் ரக்சியத்தையறிந்துகொண்ட குப்பய்யர் வயது முதிர்ந்த சேஷனுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு கவுளி வெற்றிலை, ஒரு கட்டுப் புகையிலை இவைகளைத் தவறாது தயாரித்துக் கொடுத்ததுடன் வேளாவேளைக்கு அன்னமிட்டு அவன் தெருத்திண்ணையை விட்டுக் கீழிறங்காமல் பாதுகாத்துவந்தார். இதனால் சேஷனுக்கு அசடு, முட்டாள், முழுமூடம், பித்துக்குள்ளி, அலப்பவாயன், நச்சுவாயன், அப்பாவி, சாப்பாட்டு ராமன், வெருந்தடியன், மூளையில்லா முண்டம், கிராக்கு என்ற பல பட்டப் பெயர்கள் வழங்கின.

மறுநாள் அதிகாலையில் சுப்பம்மாள் கட்டமுது கட்டிக் கொடுத்துத் தன் தம்பி சேஷனைத் துவரம்பட்டிக்கனுப்பினாள். குப்பய்யர் ஊர்க்கோடிவரையில் சேஷனுடன் சென்று, 'நீ அங்கே ஒன்றும் சொல்லக் கூடாது, நச்சு நச்சு என்று பேசக்கூடாது, யார் என்ன கேட்டாலும் பதில் சொல்லக் கூடாது, நேரச் சென்று உன் மதனியைக் கண்டு அழைத்துவா. அங்கே பத்துப் பேச்சுக்கதிகம் பேசாதே. தெரிந்ததா? பத்திரம்! பத்துப் பேச்சுக்குமேல் பேசவே கூடாது, ஜாக்கிரதை' என்று அதட்டி அவனுக்கு வேண்டிய புத்திமதி கூறி எச்சரித்துத் திரும்பினார். தமையன் சொன்ன புத்திமதிகளை மனதில வாங்கிக் கொண்ட சேஷன் தான் அவ்வாறே நடந்துகொள்ளும் விதத்தை யாலோசித்த வண்ணம் சென்றான். வழிநெடுகக் காட்டுப் பாதை. ஒருநாள் முழுதும் கட்டை வண்டியில் சென்று மறுநாள்

காய் நடையில் ஆரம்பித்தான். பத்துப் பேச்சுக்கு மேல் பேசாதிருப்பதெப்படி என்ற யோசனையில் இடையே இருந்த பத்து மைல்களும் பத்து அடிகளாக இவனுக்குத் தோன்றின. பத்துப் பேச்சுக்கதிகம் போகாமல் கணக்கிட்டுக் கொள்வதே சிலாக்கியமான உபாயமென்று சேஷன் தீர்மானித்தான். துவரம்பட்டி அக்கிரகாரத்துள் இவன் செல்லும் போது அஸ்தமிக்க இரண்டு நாழிகைப் பொழுதுதான் இருந்தது

தெருக் கோடியிலிருந்த வீட்டின் திண்ணையில் சிறு பெண்கள் சிலர் புளியங்கொட்டையைக் குலித்து விளையாடிக் கொண்டிருந்தனர். சேஷன் அங்கு சென்று கணக்காகப் பத்துப் புளியங்கொட்டைகளை எடுத்துத் தன் இடுப்பில் இரகசியமாகச் சொருகிக்கொண்டான். ஒவ்வொரு பேச்சுக்கு ஒரு புளியங்கொட்டை வீதம் கணக்கிட்டால் பேச்சுப் பத்துக்கு மீறிவிடாதென்ற தைரியம் இவனுக் கேற்பட்டது. கிராமத்திர வழக்கப்படி தெருவில் நின்றிருந்த கிழவர், 'என்ன சம்பந்தி! சௌக்கியமா?' என்று வினவினர் 'க்ஷேமந்தான்' என்று சேஷன் விடையளித்தான். அதற்குள் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த குப்பிப் பாட்டி, 'என்னடா! சேச்சா! மன்னியை யழைத்துப்போக வந்தாயா?' என்றாள். 'ஆம்' என விடை யிறுத்தான். 'என்டா உனக்குக் கலியாணமாயிற்றோ?" என்று கிழவி மீண்டும் வினவினள். கலியாணமென்றால் யாருக்கும் சந்தோஷந்தானே, "இன்னம் இல்லை" என்று சேஷன் கூறிவிட்டுக் குப்பய்யரின் மாமன் வீடு நுழைந்தான். அவர் காய்ச்சலுடன் வழிநடையில் படுத்திருந்தார். நேரே கூடத்திற்குச் சென்றான். அங்கு பின்னுக்குப் பொடி அரைத்து (சலித்து)க்கொண்டிருந்த குப்பய்யரின் மைத்துனி முத்தம்மாள் எழுந்து நின்று, "வாருங்கள் உட்காருங்கள்; இப்போதுதான் வருகிறீர்களோ?" என்றாள். 'இப்போதுதான் வந்தேன்' என்றான் சேஷன். "ஒன்றா, இரண்டா, பத்துமைல் நடக்கிறதென்றால் கஷ்டந்தானே" என்று முத்தம்மாள் மொழிந்தாள். "ஆமாம், சிரமமாகத்தான் இருந்தது" என்றான். "வழியில் சாப்பாட்டுக்கு என்ன செய்தீர்கள்?" "அக்காள் கட்டு சோறு கொடுத்திருந்தாள்". "வழியில் நல்லதீர்த்தங்கூட கிடைத்திராதே." "அது தான் பெரிய கஷ்டம்." "கருப்பூர் வரையிலாவது கட்டைவண்டி கிடைத்ததா"? "வெகுநேரம் காத்திருந்தேன், பிறகு கிடைத்தது" "ஊரிலிருந்து எப்போது புறப்பட்டீர்கள்?" இக்கேள்விக்கு உடனே பதிலுரைக்க மாட்டாது சேஷன் சற்று தயங்கினான். ஏன்? அச்சமயம் கையிலிருந்த பத்துப் புளியங்கொட்டைகளும் செலவாயிருந்தன. ஒவ்வொரு பேச்சுக்கு ஒரு புளியங்கொட்டையை எறிந்தால் கணக்குச் சரியாய் விடுமென எண்ணினான். ஆரம்பத்தில் பேசியபின் புளியங்கொட்டையை விட்டெறிந்தேனா அல்லது புளியங்கொட்டையை எறிந்தபின் பேசினேனா என்ற யோசனையில் சேஷன் உடனே பதில் உரைக்க முடியவில்லை. முத்தம்மாள் ஆச்சரியத்துடன் இவன் முகத்தைப் பார்த்தவண்ணம் அசையாது நின்றாள். ஒருநாழிகை கழித்து, "நேற்றுக்காலையிலேயே புறப்பட்டேன்" என்று கூறிப் பெருமூச்செறிந்தான். 'இப்பேச்சுப் பதினொன்றாவதாக இருப்பின், பத்துப்பேச்சுக்கு மீறியதாகுமே. பிறகு அண்ணன் கோபிப்பாரே' என்றிவ்வாறெல்லாம் சேஷன் மனங்கலங்கினான். முத்தம்மாள் உள்ளே சென்று தன் தங்கை சொர்ணத்தினிடம் அவன் மைத்துனன் வந்துள்ள செய்தியையறிவித்தாள். சொர்ணம் ஓடோடியும் வந்து அண்மறைவில் நின்றுகொண்டு "ஊரில் எல்லோரும் க்ஷேமந்தானே?" என்றாள். சேஷன் பதிலிறுக்கவில்லை. "அக்காள் சுகமா"? பதிலில்லை. "உன்

கள் அண்ணு க்ஷேமமாயிருக்கிறுரா?'' பதிறு ரைத்தால் தமையன் கட்டளை மீறுவதாகுமே என்ற கவலையால் சேஷன், 'ஐயோ' வென்று தன்னை யறியாது கூவினுன். 'என்ன செய்வேன், ஒன்றுந் தெரியவில்லையே!'' என்று சொர்ணம் கண்ணீர் விட்டாள். இங்கிருந்தால் பேச்சுவளரு மென்றஞ்சி சேஷன் தெருக்கோடி சென்று அவ்வூர் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் முக்காடிட்டுப் படுத்து விட்டான். வழி நடந்த அலுப்பில் பொழுது விடிந்ததையும் இவன் அறியவில்லை. பகல் பத்துமணியாயிருந்தது. உடனே எழுந்து பல்விளக்கிக் கொண்டு பழை யமுது சாப்பிடலா மென்ற யோசனையுடன் சம்பந்தி வீடு சென்றுன். அவ்வீட்டில் ஒவ்வொ வரும் முக்காடிட்டு அழுதவண்ண மிருந்தார் களன்றி இவனைக் கவனிப்பாரியாருமில்லை. நெடு நேரம் நின்று சலிப்படைந்த சேஷன் தன்னை யொருவரும் லட்சியம் செய்யவில்லை என்ற கோபத்துடன் அரசகல்லூருக்குத் திரும்பி ஞன். பட்டினியாலும் கால்நடையாலும் சலிப்ப டைந்து புறப்பட்ட மூன்ருவது நாள் ஊர்வந்து சேர்ந்தான். அன்று குப்பய்யர் ஊரிலில்லை. சுப் பம்மாளும் அடுத்த ஊரில் நடந்தரிஷபவாகனக் காட்சிக்காக அன்று மாலையிலேயே சென்று விட்டாள். சேஷன் என்னசெய்வான் பாபம்! நாமும் கள்ளிக்குடி சென்று சித்தப்பாவைப் பார்த்து வருவோமென்று கம்பி நீட்டினுன்.

தம்பி சென்று ஐந்து நாட்களாயும் இன்னும் வரவில்லையே என்று குப்பய்யர் ஆலோசித்தார். மறு நாள் போலீஸ் கோர்ட்டுக்கு வந்திருந்த துவரம்பட்டி யாட்கள் சிலரை விசாரித்தார். அவர்கள், "ஐயா வீட்டில் ஏதோ சாவு நடந்து போச்சுதாம். எப்பவும் அளுவெயா (அழுகை யாக) க்கிடக்கு'' எனருர்கள். என்ன செய்தி யோ? யார் செத்தார்களோ? எல்லாவற்றிற்கும் நாமே நேரில் செல்வோமென்று குப்பய்யர் தீர்மானித்தார். அவரது அவசர வேலைகளை முடித்துக்கொண்டு புறப்பட நான்கு நாட்கள் ஆயின. ஒருவாறு பிரயாணப்பட்டு துவரம்பட்டி சேர்ந்தார். தெருமுனையில் பலர் அழுதுகொண் டுவரும் சத்தங்கேட்டு ஒரு வீட்டின் திண் ணையில் ஒதுங்கி நின்ருர். ஓர் பெண்பாலை இர ண்டு அமங்கிலிஸ்திரீகள் கட்டிப் பிடித்து ஒப் பாரி பாடியவண்ணம் நடந்தார்கள். தலைவிரி கோலமாக நடந்த அப்பெண்ணின் முகம் தெளி வாய்த் தெரியவில்லை. 'ஏதோ சாவு சமாசாரம் போலும், நாமும் கூடச்செல்வோம்' என்று குப் பய்யரும் கூட்டத்துடன் கலந்து கொண்டார். ஆற்றங்கரை செல்லுமளவும் இவரை யொருவ ரும் கவனிக்கவில்லை. திடீரென இவரைக் கண்ட இவரது மாமனுர், "என்னடா குப்பா! நீயென்ன மனுஷனு அல்லது பிசாசா?'' என்ருர். அவரது கை கால்கள் வெடவெடவென்று நடுக்குற்றன. குப்பய்யர் ஒன்றும் விளங்காது திகைத்தார். இச் சங்கதி கூட்டத்திடையே பறவிற்று. சொர்ணம் பாள் ஓடிவந்து, "ஐயோ! என் துரையே'' என் றலறி வீழ்ந்து மூர்ச்சித்தாள். நிதானத்துடன் குப்பய்யர் விசாரித்ததில் தன் தம்பி மறுமொழி கூருததால் தான் இறந்துவிட்டதாக அவர்கள் தீர்மானித்ததுடன், சேஷன் ஒருவரிடமும் சொல்லாது திரும்பி விட்டதால் கருமாதிகளைத் துவரம்பட்டிலேயே நடத்தத் தீர்மானித்தது யும், அன்று தனக்குப் பத்தாவது நாள் கருமாதி என்றும் தெரிந்து கொண்டார். குப் பய்யர் மனைவியை யழைத்துக்கொண்டு தனது ஊர் வந்ததும் சேஷனை யழைத்துக் கேட்டதில் 'கையிலிருந்த பத்துப் புளியங்கொட்டையும் செலவானபின் நான் எப்படிப் பேசமுடியும்' என்று அவன் விடையளித்தான்.

அவன் மீதென்ன குற்றம்?

சுபம்!

பெண்கள் கடமை.

(ஸ்ரீமதி கு. கமலாம்பிகை அம்மாள்.)

"என் கடன் பணி செய்து கிடப்பதே"
"நாமார்க்கும் குடியல்லோம்"—(அப்பர்)

என்ற வீரமொழி முழங்கிய நம் நாடு இன்று அடிமைப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கின்றது. இவ்வாறு வீழ்ந்து கிடப்பதற்குக் காரணம் பெண்களின் அடிமைவாழ்வே என்று கூற வேண்டுவதில்லை. பெண்களின் அடிமை வாழ்வே தேசத்தின் அடிமைத்தன்மை யென்றும், பெண்களின் விடுதலையே தேசவிடுதலை யென்றுங் கூறலாம். அவர்களின் அடிமைத் தன்மை யென்பது அறியாமை யென்னும் இருளில் அகப்பட்டுக் கடனாற்ற மாட்டாது இடர்ப்படுவதேயாகும். விடுதலை யென்பது அவர்கள் அறிவு விளக்கம் பெற்று அன்புநிலை நின்று கடனாற்றி இன்பமாய் வாழ்வதேயாகும். அவர்கள் அடிமைத் தன்மை யடைந்ததற்குக் காரணம் தங்கள் கடமையை நிறைவேற்றாமையே என்று கூறவேண்டுவதில்லை. கடமையை நிறைவேற்றுவதற்குக் கலைபயிற்றெளிவும் உலகியலறிவும் இன்றியமையாதவை. ஆதலால் பெண்கள் கல்வியைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

கல்வி.

எந்தத் தொழில் செய்வோருக்கும் நூற்கல்வி இன்றியமையாதது. தற்காலம் பெரும்பாலும் ஆடவர்கள் கற்றவர்களாகவும் பெண்கள் கல்லாதவர்களாகவும் இருப்பதனால் இருபாலர் நோக்கும் ஒருவழிச் செல்வதில்லை. ஒத்துழைப்பு முறையாக நடைபெறுவதில்லை. ஆடவர்கள் செய்யும் கருமம் பெண்களுக்குத் தெரியாது. அதனால் ஆடவர் செய்யுங் கருமங்களுக்குமிடர் நேர்கிறது. ஆதலால் அவர்கள் புரியுந் தொழிலறிந்து உதவி புரிவதற்கும் கல்வியறிவு வேண்டும். கருமமறியாதவர்களிடம் கடமையை எவ்வாறு எதிர் பார்க்க முடியும்? கல்வியறிவில்லாத பெண்களுக்குப் பொதுவாக வீட்டுக் கடமைகளும் தெரியாது. உலக நடவடிக்கைகளும் தெரியாது.

பெண்களுக்கு கல்வியறிவு இன்றியமையாதது என்று கூறுவோமாயின், 'அவர்களுக்குக் கல்வி யதிகம் வேண்டுவதில்லை. உத்தியோகம் பார்த்துப் பொருளீட்டப் போகிறார்களா?' என்று சிலர் கேட்பார்கள். வேறுசிலர் 'அவர்கள் கல்வி கற்றால் வீட்டுக் கடமைகள் ஒன்றும் பாராது இறுமாப்புடன் இருப்பார்கள்' என்றும் 'அடங்கி நடவார்கள்' என்றும் கூறுவார்கள். கல்வி கற்பது அறிவை வளர்க்கும் பொருட்டே. அறிவுக் கல்வி கற்றுக் கொண்டே பொருளீட்டும் வழிகளில் செல்ல வேண்டும். அறிவுக் கல்வி கல்லாது பொருளீட்டும் வழி ஒன்றையே அறிந்தவரிடம் அன்பு நெறியை அணுவளவும் காண முடியாது. பொருளீட்டுவதன் பொருட்டு மாத்திரம் கல்வி புகட்டுவது பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதாகாது. அறிவுக்கல்வியே பிள்ளைகளை நல்வழிப்படுத்துவது. அன்புநெறி யடையச் செய்வது. பிறவிப்பயனை யெய்விப்பது. பொருளீட்டும் வழி ஒன்றையே யறிந்தோர் பொருளுக்கே அடிமையாய்விடுவர். பொருளையும் நல்வழியிற் பயன்படுத்தி இன்பமடைய மாட்டார். ஆதலால் பிள்ளைகளை நல்வழிப்படுத்த வேண்டுமாயின் அறிவுக் கல்வி புகட்டவேண்டுமென்பது வெளிப்படை.

கல்வி கற்ற பெண்கள் கடமைகளை நிறைவேற்றார் என்று கூறுவது பயிரை 'வேலி

மேய்ந்து விடும் என்று கூறுவதை யொக்கும். முறையற்ற கல்வி கற்ற சிலர் தங்கள் கடைமைகளை அறியாதிருப்பர். தகுந்த முறையிலும் தாய்மொழியிலும் நன்றாகப் பயிற்றப்பட்டோர் ஒருநாளும் தங்கள் கடமைகளை மறக்கமாட்டார் என உறுதி கூறுவோம். பொதுவாகப் பெண்ணுலகை நோக்கவேண்டுமேயன்றி இரண்டொருவர் குற்றங் கொண்டு பெண்களைக் குறை கூறலாகாது. அடங்கி நடத்தல் என்பது அறிவு விளக்கம் பெற்று அன்பாக ஒத்து நடப்பதேயன்றி அடிமையுணர்வுடன் அடங்கி யிருத்தல் அடக்கமாகாது.

ஒரு குடும்பமும் ஒரு தேசம் போன்றதல்லவா? கல்வி யறிவில்லாத பெண்களிருக்கும் குடும்பங்களில் ஒன்று ஒழுங்கீனமே குடிகொண்டிருக்கும். அந்தக் குடும்பத்தாரும் முறை செய்யா மன்னவன் கோற்கீழ் வாழுங் குடிகளே போல் என்றும் துன்பத்துடனேயே வாழ்வர். ஒவ்வொரு குடும்பத்துப் பெண்ணும் கல்வியறிவுடையவராயிருந்து கடமைகளை நிறைவேற்றினாற்றான் ஒழுங்கும் அமைதியும் இன்பமும் நிலவும். தற்காலம் பெண்கள் கல்வி வேண்டுவதில்லை என்று கூக்குரலிடுவோர் தொகை அருகியும், வேண்டும் என்று கூறுவோர் தொகை பெருகியும் வருதல் கண்டு கழிபேருவகை பெய்துகிறோம்.

கல்வியறிவாற் சிறந்த அறிஞர்களே சிறுவர்களுக்குக் கல்வி பயிற்றவேண்டுமென்பது மேனாட்டு உயர் மொழிப் புலவர் கூற்று, அங்ஙனமே ஆண்டுள்ள கலாசாலைகளில் சிறந்த கலைகள் கற்று உயர்ந்த பட்டங்கள் பெற்ற ஆசிரியரே இளஞ்சிறுவர்க்குக் கல்வி பயிற்றுகின்றனர். ஐந்து வயதுடைய குழந்தைகட்குக் கல்வி பயிற்றுவதற்கு இத்தகைய அறிஞர்கள் வேண்டுமாயின், முதற்கொண்டே எல்லாவற்றிலும் நல்வழிப்படுத்தவேண்டிய முதலாசிரியராகிய தாய் எத்தகைய கல்வியறிவுடையவளாயிருக்கவேண்டுமென்று கூறவும் வேண்டுமோ?

திட்ப நுட்பம் விழுமிய பண்டைநூல்களே பெண்களுக்கு அறிவு, அடக்கம், பொறுமை, தூயசிந்தை, வீரம் முதலான அருங் குணங்களமைவதற்கு இன்றியமையாதன. தற்கால அறிஞர்களால் ஆராய்ந்து எழுதப்படும் நூல்களையும் அறிந்திருத்தல் நலம். அவர்களுக்கு எவற்றையும் 'நல்லது இது, தீயது இது' என்று ஆராய்ந்து துணியத்தக்க அறிவு வேண்டும். நூற்கல்விக்கே முதல் இடம் அளிக்கப்படல் வேண்டும். புத்தகங்களை வாசிப்பதோடு மாத்திரம் நில்லாமல் பலகலைகளையும் அறிந்திருத்தல் இன்றியமையாதது. மனத்தை ஒருவழி நிறுத்த வல்ல இசையையும் முக்கியமாக அறிந்திருத்தல் வேண்டும். அது பரம்பொருளையும் வசப்படுத்துந் தன்மையது. மனச்சோர்வை நீக்குவது. நுண்ணறிவை வளர்ப்பது. இன்னும் பற்பல நன்மைகட்குக் காரணமானது. கண்கவர் வனப்பு வாய்ந்த ஓவியம் வரைதல், தையல், பின்னல் முதலானவற்றையும் நன்கு அறிந்திருத்தல் நலம். இக்கலைகளும் நுண்ணறிவை வளர்க்குந் தன்மையன என்று அறிஞர் கூறுவர். பொதுவாகப் பெண்கள் எல்லோரும் பல்கலைக்களஞ்சியங்களாக விளங்கித் தமது கடமையைத் திறம்பட ஆற்றவேண்டுமென்பதே எமது பெருவிருப்பாகும்.

குழந்தை வளர்ப்பு.

“தொட்டிலை ஆட்டுங் கையே தொல்லுலகை ஆளுங் கை” என்பது ஒரு பழமொழி. இதனால் பெண்கள் எவ்வளவு அருமை பெருமை வாய்ந்த கருமத்தை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பது வெளிப்படை. தாய்மார்கள் பிள்ளைகட்குச் செய்யுங் கடமையே எல்லாவற்றுள்ளும் தலைசிறந்தது. தாய்மாரின்

வளர்ப்பே பிள்ளைகளின் வாழ்க்கைக்கு அடிப்படை. எல்லோரும் தாயின் உதவியினாலேயே மேலான நிலைக்கு வரமுடியும். தாய்மார் நற்குணமும் நல்லெண்ணமும் நற்செய்கையும் உடையவர்களாயிருக்கவேண்டும். குழந்தை வளர்ப்பு முறைகளைப்பற்றி அறிஞர்களால் எழுதப்பெற்ற நூல்களை வாசித் தறிந்து அதன்வழி ஒழுகல் இன்றியமையாதது. குழந்தைகளை அன்பாக வளர்க்கவேண்டும். முயற்சியும் வீரமும், மகிழ்ச்சியும் உடையவர்களாய் வளர்க்கவேண்டும். சோம்பலும், துக்கமும் அவர்களிடை தலைகாட்டாது காப்பாற்றவேண்டும். தகுந்த வயதிலே முறையான கல்வி கற்பிப்பதில் தாய்மார்கள் மிகுந்த கவனமுடையவர்களாய் இருத்தல் இன்றியமையாதது. தாய்மொழிப்பற்றும் தாய் நாட்டுப் பற்றும் உடையவர்களாய் நல்லுணர்வுடன் வாழும்படி கவனித்தல்வேண்டும். புதல்வன், புதல்வி என்று பேதம் பாராட்டாது ஒத்த அன்புடன் வளர்த்து ஒத்த கல்வி கற்பிக்கவேண்டும். தன்னலம் கருதாது தொண்டாற்றப் பழக்கவேண்டும். எடுத்த கருமங்களை முடிக்கத்தக்க வல்லமை யுடையவர்களாக்க வேண்டும்.

முன்னேற்றம்.

இப்பொழுது எங்கணும் முன்னேற்றம் என்னும் சொல்வழக்கத்தைக் கேட்கலாம். முன்னேற்றம் என்பதிலிருந்து நாம் ஏதோ தாழ்ந்த நிலையிலிருக்கிறோம் என்பது புலனாம். தாழ்ந்த நிலையிலிருப்போர் உயர்நிலை யடைதல் இன்றியமையாதது. முன்னேற்றம் என்றால் நமது சொந்தப் பழக்க வழக்க மூலம் சீர்திருந்திச் சிறப்பாக வாழவேண்டியதே. ஆனால் தற்காலம் பெரும்பாலும் பிறநாட்டாரது பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதே முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. பண்டைக் காலத்துச் சான்றோரது வழக்கங்கள் நமது சீர்திருத்தமான வாழ்க்கைக்கு இன்றியமையாதன. அவ்வாறின்றிப் பிறநாட்டவரது முறைகளையே எல்லாம் பின்பற்றினாற்றான் முன்னேற்றமடைவோம் என்று நினைப்போமாயின் நாம் பிறரைப் பின்பற்றுவோராவோமன்றி ஒருகாலமும் முன்னேற்ற மடைவோராகமாட்டோம். பிறரைப் பின்பற்றுவதனால் நமது சொந்தப் பழக்கங்கள் நாளடைவில் அழிந்து விடும். அதனால் நாம் பிறர் மதிப்பிற்காளாகமாட்டோம். தமக்கென நாகரிகமான பழக்கவழக்கங்களில்லாதாரே பிறரது நாகரிகத்தைப் பின்பற்றவேண்டும். நமக்கென நமது முன்னோரது தலைசிறந்த பழக்க வழக்கங்களிருக்க நாம் என் பிறரைப் பின்பற்ற வேண்டும்? இதனால் நான் பிற நாட்டாரது கொள்கைகள் ஒன்றையும் கொள்ள வேண்டாம் என்று கூறவில்லை. அவரால் வகுக்கப்பட்ட முறை சீர்திருத்த முடையதா? நமக்குப் பொருந்துமா? இன்றி யமையாததா? என்று ஆராய்ந்து கொள்ள வேண்டுமேயன்றிக் கண்டவுடன் மாறவேண்டுவதில்லை. இனி நமது முன்னோரது முறையுமொன்று நமது நல்வாழ்க்கைக்குத் தடை செய்யுமாயின் நீக்கப்படலாம். அது தற்கால வாழ்க்கைக்குத் தடை செய்கிறதா? பிழையுடையதா? தகுதியற்றதா? என்று ஆராய்ந்து தகாததெனத் தோன்றுமாயின் விட்டுவிடலாம்.

சீர்திருத்தக் கூட்டமா? ஆரவாரக் கூட்டமா?

தற்காலத்திலும் சிலவிடங்களில் பெண்கள் தமக்கு வேண்டிய கல்வி முதலியவற்றைப் பெறாது அடிமையுணர்வுடன் வாழ்கின்றனர். அதனால் அவர்கள் என்றும் குறைகேட்டுத் துன்பத்துடன் வாழ்கின்றனர். தகுந்த கல்வி கற்பியாது அவர்களை என் குறை கூறல்வேண்டும்? அத்தகைய இடங்களில் சில ஆடவர்கள் சேர்ந்த விடங்களில் சீர்திருத்தம் என்பதுபற்றிப் பேசுவார்கள். பெண்கள் கல்வியில்லாத

தனாற்றான் நமது கூட்டம் சீர்திருத்தமடைய வில்லையென்றும் அவர்கள் கல்வியின்பொருட்டு வேண்டப்படும் வழிகள் பல பேசப்படும். பிற சமயப் பெண்கள் கல்விகற்றுப் புதுமுறைகளை வழங்கிவருவதனாற்றான் முன்னேற்ற மடைந் திருக்கிறார்கள் என்றும், நமது பழைய வழக்கங்களும் சைவசமயமுமே நமது முன்னேற்றத்திற்குத் தடை செய்கின்றன என்றும் வீண் பழி கூறப்படும். இன்னும் பற்பல பேச்சுக்கள் பேசப்பட்டு அழகான தீர்மானங்கள் பல நிறைவேற்றப்படும். இந்தத் தீர்மானங்களைக் கேட்கும் பெண்கள் இலவு காத்த கிளிபோலாவார்கள். ஏனெனில் இந்தத் தீர்மானங்களும் கூட்டங் கலைந்ததும் அவர்கள் மனதினின்றும் அகன்று விடுகின்றன. இத்தகைய கூட்டங்களின் பேச்சுக்கள் நடையில் செயலில் வாயாண்டுங் கண்டிலம். இந்த ஆரவாரக் கூட்டங்களால் எத்தனையோ பெண்மணிகள் ஏமாந்துபோயினர். அந்தோ! ஏமாந்த பெண்ணுலகமே! இன்னுமா ஏமாறுவை! ஏமாந்தது போதும், போதும். இனித் தன்னுணர்வு கொண்டெழுவை உண்மைத் தொண்டாற்றும் அன்பர்களின் உதவிகொண்டு நல்வழிப்படுவை. இவர்களைக் குறைகூறுவானேன்? இவர்களது தாய்மார் இளமையிலேயே எடுத்த கருமத்தை முயற்சியாய் முடிக்குமாறு பழக்கியிருந்தால் ஆரவாரக் கூட்டம் நிகழ்ந்திராதன்றோ!

பழைய வழக்கத்தையும் சைவ சமயத்தையும் இவர்கள் குறை கூறுவதன் முக்கிய காரணங்களில் பெண்களை வீட்டில் அடைத்து வைக்கவேண்டும் என்னும் கொள்கை யுடையன என்பது மொன்று. பழைய வழக்கங்களும் சைவசமயமும் நமது நாகரிகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அரணுவனவன்றி முரணுவ தில்லை யென்பது ஆராய்ச்சியுடைய அறிஞர்கள் துணிபு. பிறசமயப் பெண்கள் கல்விச்செல்வத் தால் மாத்திரமல்ல, செவிச் செல்வத்தாலும் காட்சிச் செல்வத்தாலுமே பெரிதும் முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள். சைவசமயத்தாருள்ளும் கல்விச் செல்வத்தோடு செவிச் செல்வமும் காட்சிச் செல்வமும் பெற்றோர் மிகவும் உயர்நிலை யடைந்திருத்தல் கண்கூடு.

பழைய வழக்கம்.

பழைய காலத்துப் பெண்கள் இயற்கை வாழ்வு வாழ்ந்தனர். அவர்கள் பந்தாடச் சென்றதாகவும் பூஞ்சோலைகட்குக் கூட்டங் கூட்டமாகச் சென்றதாகவும் பழைய நூல்களில் இருப்பது காண்க. இதனால் அது முற்கால வழக்க மென்பது வெளிப்படை. பெண்களை வீட்டில் அடைத்துவைத்தல் பழைய வழக்கம் என்று கூறுவோர் எல்லாம் பழைய முறையின் படியே நடக்கிறார்களா? இவர்கள் தேனை நெய்யரியில் வடித்துத் தேனை நிலத்தில் விட்டது போல் அருமையான பழைய வழக்கங்களையெல்லாம் கைவிட்டுவிட்டு, நெய்யரியில் தங்கிய வற்றை எடுத்துவைத்திருத்தல்போல இந்த ஒரு முறையை வைத்துக்கொண்டு "நாமே பழைய வழக்கத்தின்படி நடக்கிறோம்" என்று கூக்குரலிட்டுத் தம்மைத் தாமே மேலான நாகரிகமுடையவர்களாகக் கருதி மகிழ்கின்றனர். அந்தோ! இந்த நாகரிகத்தின் பயனாக எத்தனையோ பெண்மணிகள் கண்ணிருந்தும் குருடராய் காதிருந்தும் செவிடாய், அடிமையுணர்வுடன் வாழ்கின்றனர். தமது பிறவிப் பயனை யடையமாட்டாது அன்புறுகின்றனர். இந்த அநாகரிகமான கொடிய வழக்கமானது அடியோடு நீக்கப்படல்வேண்டும். அவர்களைக் கட்டாயமாகக் கலாசாலைகட்குச் சென்று கல்வி கற்க விடல்வேண்டும். இன்னும் அறிஞர்களால் நிகழ்த்தப்படும் அரிய சொற்பொழிவுகளைக் கேட்டும், தம்மினும் கல்வி நாகரிகங்களிற் சிறந்தவருடன் பழகியும் வருவார்களாயின் எவ்

வுளவோ சீர்திருத்தமாக வாழ்வார்களல்லவோ! குருட்டு வழக்கங்களைப் பழைய வழக்கம் என்று சொல்லி வழங்குவோரிடையில் யாராவது சீர்திருத்தம் செய்யப் புகுவார்களாயின் அவர்களை அடக்கமில்லாதவர்களென்றும் கிளர்ச்சிக்காரர்களென்றும் குறை கூறுவர்.

இவர்களைக் குறை கூறுவதனால் எல்லா ஆடவர்களையும் குறை கூறுகிறேமென்று கருத வேண்டுவதில்லை. அன்பு நெறி நின்று தொண்டாற்றும் ஆடவர்களிற் பலர் பெண்கள் முன்னேற்றத்தின்பொருட்டுப் பெரிதும் பாடுபடுகின்றனர். அன்னர் பேச்சளவில் நிற்பதில்லை. நடையில் செயலில் கொணருகின்றனர். அவர்களுக்குப் பொதுவாக உலகமும், சிறப்பாகப் பெண்ணுலகமும், என்றும் கடமைப்பாடுடையன. அவர்களது நன்றி என்றும் மறக்கற்பாலதன்றென்க.

தற்கால நாகரிகம்.

உடை:—தொன்றுதொட்டு இன்றுகாறும் வழங்கப்பட்டுவரும் நம் பெண்மக்களது உடையானது நாகரிக உலகில் முதல் இடம் பெற்று வந்திருக்கிறது, இன்னும் அவ்வாறே வருகிறது. இந்த உடையானது நமது நாட்டின் நிலைமைக்கேற்ப உடல் நலத்தையும் பேணும் முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது; அழகுடையது; பிறநாட்டாராலும் விரும்பப்படுவது; புகழப்படுவது. தற்காலத்தில் சில பெண்கள் இந்த உடையைத் தம் மனம்போனபடியெல்லாம் மாற்றிக் கைபோனபடி யெல்லாம் திரித்து அணிந்து மகிழ்கின்றனர். பிற நாட்டாரைப்போல அணிவதே நாகரிகமெனறெண்ணி அன்னரைப் பின்பற்றுகின்றனர். அவ்வாறு அணிவது சீர்திருத்தமுடையதா, அழகுடையதா? உடம்பிற்குப் பொருத்தமா, என்று ஆராய்வதில்லை. இளச்சிறுமிகளுக்கும் முழங்காலளவில் உடையணிந்து தலைவிரிகோலமாக வளர்ப்பது நாகரிகமாகக் கருதப்படுகிறது. இன்னும் தற்கால நாகரிக உடைகளைப்பற்றி எழுதப் புகின் மிக விரியும். உடைகளை வாங்கும்பொழுது எமது நாட்டிலேயே செய்யப்படும் கதருடைகளை வாங்கி அணிவோமாயின் எமது நாடு செல்வத்தாலும் செழிப்படையுமென்று ஈண்டுக் கூறவும் வேண்டுமோ. கல்வி முதலியவற்றைப் போலவே உடைநடையிலும் சீர்திருத்தமாக வாழவேண்டியது இன்றியமையாதது. நமக்கென ஒப்புயர்வற்ற நாகரிகமான உடையிருக்க, விளக்கிருக்க மின்மினித்தீக் காய்தல் போலப் பிறரைப் பின்பற்றுவது எற்றுக்கு?

வீட்டு வேலை:—வீட்டுக் கருமங்களை நடத்தும் பொறுப்புப் பெண்களுடையதே. அவர்கள் வீட்டுக் கருமங்களை முறையாக நடத்தினுற்றான் வீட்டில் ஒழுங்கும் அமைதியும் இன்பமும் நிலவும். அவர்கள் வீட்டைச் சுகத்துக்கேற்ற நன்முறையில் வைத்திருக்க நன்கு அறிந்திருத்தல்வேண்டும். உடல் நலத்தைப் பேணும் முறையில் உணவமைக்கும் முறைகளையும் நன்குஅறிந்திருத்தல் நலம். சமையலை எவரும் அறிந்திருப்பது குற்றமல்ல. அறிந்திருந்தால் தாம் செய்யாதுவிடினும், பிறரைக் கொண்டு முறையாகச் செய்விக்கலாமன்றோ! சிலபெண்கள் சமையல் செய்வது ஒன்றே தமது கடமையெனக் கருதுகின்றனர். அதனால் அவர்கள் வீடுகளில் என்றும் ஒழுங்கீனமே குடிகொண்டிருக்கக் காணலாம். குழந்தைகளையும் கவனிப்பதில்லை. சமையலின்பொருட்டு மற்றக் கடமைகள் ஒன்றையும் வழுவ விடக்கூடாது. கடமைகளுடனும் அதனை ஒரு தொழிலாகக் கருதலாமேயன்றி, அதுவே தமது கடமையென்று ஒருபோதுங் கருதலாகாது.

தற்கால நாகரிகத்தில் சிக்குண்ட சில தாய்மார் தங்கள் பிள்ளைகளை வீட்டு வேலை செய்யப்

பழக்குவதில்லை. இவர்கள் 'எங்கள் பிள்ளைகள் வீட்டில் ஒன்றும் செய்வதில்லை' என்று பெருமையாகப் பேசிக்கொள்வர். நாமே நாகரிகமாகவும் அருமையாகவும் வளர்க்கிறோம் என்று இறுமாப்புடன் கூறுவர். பிள்ளைகளும் இவற்றைக் கேட்டு அவ்வாறிருப்பதே மேலான நிலை என்று நினைக்கின்றனர். இவர்கள் வீட்டில் ஒரு செயலுமின்றி யிருக்கின்றார்களென்பதை ஒத்துக்கொள்ள முடியாது. முற்றுந் துறந்த பெரியோர்களும் மூச்சாவது விட வேண்டியிருப்ப உலகத்தோடு தொடர்புடைய இவர்கள் எவ்வாறு ஒரு செயலுமின்றியிருக்க முடியும்? ஆதலால் இது ஒரு பெரு வியப்பிற்கிடமானதாயிருக்கின்றதன்றோ! இன்னும் ஒரு செயலுமின்றியிருந்தால் உடம்பு பழுதாய் விடும். இங்ஙனம் அறியாமை நிரம்பப்பெற்ற தாய்மாரால் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் அந்த இறுமாப்பாகிய சுமையை இறக்கி எறிந்துவிட்டு அன்புநெறி நின்று தொண்டாற்ற முன் வருவாராயின் நாடும் நன்னிலை யடையும், அவர்களும் நல்வழிப்படுவர். பிள்ளைகளைத் தங்கடனாற்றுவதில் வல்லுனராகி நல்வழியில் வளர்ப்பது நாகரிகமும் அருமையுமான வளர்ப்பாகுமன்றி இவ்வாறு வளர்ப்பது மேன்மையாகமாட்டாது.

தற்காலம் பலவிதமான பிறநாட்டு நாகரிகங்கள் வந்து நமது நாட்டில் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன. அவை கடும் பெருக்கெடுத்தோடும் ஆறுகள் மரங்கள் முதலான பொருள்களையும் வாரிச் சென்று கடலிற்சேர்ப்பதுபோல நம் நாட்டுச் செல்வத்தையும் வாரிச்சென்று பிறநாடுகளில் சேர்க்கின்றன. அத்தோடு நம் உடல் நலத்தையும் கெடுத்து விடுகின்றன. இவற்றைக் கண்டு பெண்கள் மயங்கலாகாது. எதிர்த்து நிற்றல்வேண்டும். எதிர்த்து நிற்போராயின் அவை தம் தாண்டவம் நிறுத்தித் தாம் வந்த வழியே திரும்பிச் சென்று விடும். நமது பண்டை நாகரிகம் பொலிந்து விளங்கும்.

கடமை.

அருமைச் சகோதரிகாள்! நீங்கள் கடனாற்றுவதிலிருந்துதான் பெருமையடைய முடியும். பெண்குழந்தை யென்று கேட்டவுடன் இடி கேட்ட நாகம் போல் நடுநடுங்கும் காலம் போய் முகிற் குழாம் கண்ட மயிற் குழாம் போல மகிழ்வுறும் காலம் வரும். இந்திய நாடும் பண்டை நிலையெய்தும். தற்காலம் நீங்கள் ஆற்றவேண்டிய கடமைகள் பல கிடக்கின்றன. அவற்றை அமைதியுடன் ஆற்றுங்கள். தன்னலங் கருதாது செய்யும் கடமையே தலை சிறந்தது. மாடமாளிகைகளில் இருந்து பல வேலையாட்களை வைத்து வேலை வாங்குவோரினும் அன்பு நிலை நின்று தன்னலங் கருதாது தொண்டு செய்வோரே தலை சிறந்த இன்பத்துடன் வாழ்வர். அந்த இன்பத்தின் அருமை அவ்வாறு ஆற்றுவோர்க்கே இனிது புலனாகும். அவர்களே எல்லோராலும் போற்றப்படுவர்; புகழப்படுவர்; இன்பத்துடன் வாழ்வர்; கடவுள் நிலை யெய்துவர். பெண்களுக்கு வீட்டிலுள்ள கடமைகள் போல வெளியே செய்யவேண்டிய கடமைகளும் உண்டு. வீட்டிலுள்ள கடமைகளின்பொருட்டு வெளியே செய்யவேண்டிய கடமைகளை மறத்தலாகாது. வெளியே செய்யவேண்டிய கடமைகள்பொருட்டு வீட்டிலுள்ள கடமைகளையும் மறத்தலாகாது. இரண்டும் ஒருங்கு நடப்பதே பெண்கள் கடமை யெனப்படும்.

முடிவுரை.

அருமைச் சகோதரிகாள்! பெண்கள் கடமை யென்னும் பொருள் பற்றி யெழுதப் புகின் மிக விரியும். ஆயினும் இன்றியமையாத சிலவற்றைப்பற்றி மேலே கூறியிருக்கிறேன். இன்னும் ஆற்றவேண்டிய கடமைகளை நன்கு ஆராய்ந்து ஆற்றுங்கள். வீண் எண்ணங்களுக்கும் வீண்பேச்சுக்கும் இடங்கொடாது

உயர்ந்த எண்ணத்துடன் நன்று ஆற்றுங்கள். அடக்கம், பொறுமை, அன்பு, தொண்டு, பாலம், வீரம் முதலான பெண்மைக் குணங்களுடன் நின்று ஆற்றுங்கள். வாய்மைக் குறைவிடமாய் தூய்மைக் இருப்பிடமாயிருந்து ஆற்றுங்கள். சிறு சிறு வேற்றுமைகளைப் பாராட்டாது சகோதர உணர்வுடனும் சமரச நோக்குடனும் ஆற்றுங்கள். நமது நாடு நன்னிலை அடையத்தக்க வழிகளிலெல்லாம் பாடுபடுங்கள். உங்கள் கடமைகளைத் திறம்பட ஆற்றுவீராயின் நமது நாடும் நன்னிலையடையும். இன்பமணம் கமழும்.

தன்னலம் கருதாது பெண்ணுலகு தன் கடனாற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக!

“அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி
விட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே”

தாயுமான சுவாமிகள்.

பூர்ண சக்தி.

உபவாச தத்துவம்.

III.

(ஸ்ரீமான் புதுக்கோட்டை கி லக்ஷ்மண சர்மா.)

“லங்கனம் பரம ஔஷதம்” என்பதே ஆயுர்வேதத்தின் சாராம்சம். இக்காலத்திலோ, லங்கனம் பரம விஷம் என்று நேர் எதிரான முறைகளே அனுஷ்டானத்திலிருந்து வருகின்றன. வைத்தியர்கள் கூட லங்கனமொரு ஆபத்தான முறையென்று நடுங்குகிறார்கள். அன்னத்துவேஷமாயிருந்தாலுங்கூட எப்படியாவது உள்ளுக்குக் கொஞ்சம் அன்னம் செலுத்தவேண்டியது அவசியம் என்று எண்ணுகிறார்கள். காய்ச்சலானாலும் அஜீரணமானாலும் வயிற்றை மன்னிக்கிறதே கிடையாது. பாக்கியமற்ற அந்தக் கருவிக்கு நிமிஷங்கூட விடுமுறை விடாமல் அதன் மேல் வேலையைச் சுமத்தி, அதை வதைத்து வருகின்றோம். “வயிற்றுக்கு ஏதாவது ஆகாரம் வேண்டாமா?” என்று பேசுகிறோம். வயிற்றுக்கு ஆகாரமா, நோய்க்கு ஆகாரமா? என்று விசாரிக்கவேண்டும்.

எவ்வளவுக் கெவ்வளவு வயிற்றில் அன்னுதிகளைத் திணிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு தாதுபுஷ்டி, சரீரபலம், ஆயுசு, ஆரோக்கியம் எல்லாம் பெருக்கல் வாய்ப்பாட்டின்படி சித்திக்கும் என்று நம்புகிறோம். இது நியாயம் தானா என்று விசாரிப்பார் கிடையாது. பதினைந்து வருஷம் கலைகள் கற்றுப் பட்டம் பெற்றவர்களுக்கும் இப்படித்தான். படிக்கப் படிக்கப் புத்தி மழுங்கும் போலும்!

முற்காலத்தைக்காட்டிலும் இப்போது நாம் அதிகத் தடவை சாப்பிடுகிறோம். முன்னிலும் புஷ்டிகரமாயும் விசித்திர விசித்திரமாயுமுள்ள ஆகாரங்கள்—இட்டலி, ரவா உப்புமா, கெட்டியாகக் காய்ச்சின பாலுடன் காப்பி, பஜ்ஜி, பக்கவடா தினுசுகள், அல்வா, ஜிலேபி முதலிய பக்ஷணங்கள், இன்னும் நாளுக்கு நாள் புதிது புதிதாய் உற்பத்தியாகும் பட்சிய வகைகளெல்லாம் சாம்பலில் இட்ட ஆகுதியாய்ப் போகின்றனவே! ஆயுள் அளவும் ஆண்டுக்காண்டு குறையக் காண்கிறோமே! எண்பது வயது கடந்தவர் அரிதாயிற்றே! ஏன் இத்தனை விபரீதம்! விசாரிக்கலாகாதா?

வைத்தியர்களே நம் தேக சுகத்திற்குப் பொறுப்பாளிகள் என்று நோய்கள் காணும் வரை சும்மா இருந்துவிட்டு, அப்பால் சீக்கிரம் வழக்கம்போல் உண்டு திரிவதற்கு உபாய மாகிய கடுமையான மருந்துகளை வழங்கும் வைத்தியனைத் தேடுகிறோம்.

உண்மையில் நாம் நோய் வாய்ப்படுவது நம் வயிற்றை நாம் மூர்க்கத்தனமாக நடத்துவத னாலேதான் என்று திருவள்ளுவர் முதலான பெரியோரும் இக்காலத்திய விவேகிகளும் ஒத்துக் கூறுகிறார்கள். முன் சுமத்திய சுமை முழுவதும் உடம்பைவிட்டுக் கழிந்துவிடவே, எங்கும் தெளிவும் கலகலப்பும் விளங்கி, சக்தி யும் பசியும் ஏககாலத்தில் வரும். அதுவே மறுபடி சாப்பிடத்தக்க சமயம் என்பது வள் ளுவனார் தீர்ப்பு. அவர் பாடியிருக்கும் திருக் குறளில் 'மருந்து' என்னும் அதிகாரத்தையும் அதற்குப் பரிமேலழகர் எழுதியுள்ள உரையை யும் பாருங்கள். திருக்குறள் பதிப்புகளிலே நாவ லர் பதிப்புப் புஸ்தகமே சரியான பதிப்பு. மற்றப் பதிப்பில் பிழைகளுண்டு.

மேல்நாட்டுப் பண்டிதரொருவர் எழுதுவதா வது:—நாம் தினமும் அன்றன்றைக்குள்ள ஆகாரத்தோடு நிற்காமல் வருங்காலத்துக்குரிய ஆகாரத்தையும் முன்னுக்கு வரவழைத்துச் சாப்பிட்டுவிடுவதால் நம் சாப்பாட்டுக் கணக் கில் அன்றன்று நம் வயிற்றுக் கருவிகள் சமாளிக்கக்கூடிய அளவுக்குப் பல நாள் அல் லது பல மாதம் அதிகமாகவே முன் சென்று இருக்கிறோம். வயிறானது என்றை நமக்கு ஓய்வு காலம் வருமோ, அல்லது நம் யஜமானன் தான் சாகானோ என்று ஏங்கிக்கொண்டே நாள் கடத்திவருகிறது. வயிற்றின் சாபமே நமக்கு நோயாக விளைகிறது.

ஒருவனுடைய ஆயுட்கணக்கானது இத் தனை நாள், மாதம், ஆண்டு என்றப்படி தம் தலையி லெழுதப்பட்டிருக்கிறதென்று நாம் நம்புகி றோமே அது தப்பு. மொத்தத்தில் இம்மண்ணு லகில் அன்னாதி பொருள்களே அவரவருக்குத் தனித்தனியாகத் திட்டப்படுத்தியிருக்கிறதென் றும், அதை நிதானமாக உண்டு, அழித்து வந்தோமானால், ஏற்கனவே உள்ள கணக்குப் படி, அந்த ஆகாரமலை செலவாகும்வரை நாம் இவ்வுடம்போடு வாழ்வது நிச்சயம். நம் சோற்று மலை தீர்ந்தாலொழிய நமன் நம்மிடம் அணுகமாட்டான். இதனால் தான் 40, 50 நாள் ஒரே மூச்சாகப் பட்டினி கிடந்தவரும் பிழைத்துச் சுகமடைந்து வாழ்கிறார்கள். மேலும் நிதான போஜனசாலிகளின் சோற்று மலையானது தேவர்களால் இடை யிடை யே வளர்க்கப்படுகிறதென்றும், பெருந்தீனிக் காருடைய சோற்றுமலையை அவர்கள் தாமும் குறைத்து வருகிறார்களென்றும் சொல்லவேண் டும். இதனாலேதான் பெருந்தீனிக்காரன் வெகு சீக்கிரத்தில் சாகிறான். அவன் சோற்று மலை யானது அவன் சாப்பிடுவதின் அளவுக்குமேல் அதிக வேகமாகக் குறைந்து வருகிறது. மித ஆகாரக்காரர்கள் சதாயுசு புருஷர்களாக வாழ் கிறார்களென்பதற்கு எவ்வளவோ அத்தாட்சி களுண்டு. அவர்கள் முற்பாதி வயதில் அமித மாகச் சாப்பிட்டு, நோய்களால் பீடிக்கப்பட் டாலும் பிற்பாதியில் திருந்தி வாழ்ந்து பூர்ண ஆயுசுடனிருப்பதையும் காண்கிறோம். இப் படியிருக்க, நம் வாழ்வெப்படி?

பசியென்பதை நாம் அறியோம். பசியல்லாத தோற்றங்களை யெல்லாம் பசியென்றே வைத் துக்கொண்டு, முன்னுக்கு முன்னதாகவே சோற்றுச் சுமையை வயிற்றுக்குள் தள்ளி, மனப்பால் குடித்து வருகிறோம். பசியென்பது என்ன,பொய்ப்பசி எது என்று விசாரிக்கவேண் டும். பசியறியாதவன் தன்னையே அறியாதவ னாவான். இதைப் பின்னொரு பகுதியில் விளக்கு கிறேன்.

பசிவரும்வரை ஒரு போதும் காக்காமல், முன்னுக்கு முன்னதாகவே நாளுக்கு நாலைந்து முறை உண்டு திரிகிறவனுக்குப் பசி என்பது எப்படி விளங்கும்? பட்டினி கிடந்தே தான் பசியைப் பிரத்தியட்சிகரிக்க வேண்டும். உண்மையான பசியைக் காண்பது ஆத்ம சாட்சாத்காரத்திற்கு ஒப்பாகும். பசியைத் தன்னுள்ளே கண்டவன் நோயின் பந்தத்தினின்றும் விடுபடுவான்.

பசியையும் நாமறியோம். மிதத்தையும் நாமறியோம். நோயேன் நம்மை விட்டு விலகியிருக்கும்? வேறொரு வைத்திய சிரோமணி சொல்லுவதாவது:—"நாம் கொள்ளும் ஆகாரத்தில் நாலில் ஒரு பங்கு நமக்குப் புஷ்டி தருவது; பாக்கி மூன்று பங்குகளும் வைத்தியர்களுக்காக—அவர்கள் பிழைப்புக்கு வகையுண்டாக்க—உதவுகிறது."

நம்முடைய மூடத்தனத்தினால் பாபமறியாக் குழந்தைகள் படும் பாட்டைப் பார்த்தால் பேயுமிரங்கும். ஒன்றுமறியாத் தாய்கள் குழந்தைகளைப் படுத்துகிறபாடு கணக்கில்லை. ஒரு விநாடி கூட வயிறு தழைந்திருக்கக் கூடாதாம். மேன்மேலும்—ஒரு நாளைக்கு நாலுதடவை குறைந்தபட்சம்—வயிற்றில் சோற்றையாவது கஞ்சியையாவது கட கட வென்று வார்த்துக் கொண்டேயிருப்பார்கள். முலைப்பாலானால், அதற்கு கணக்கே கிடையாது. எதற்காக அழுதாலும், உடனே பால் கொடுக்கிறதே பரிகாரம். தூங்குகிற சிசுக்களையும்கூட தாயார் விடுவதில்லை. எழுப்பி யடித்துச் சாதம் போடுகிறார்கள்.

இதற்கு முன் குறித்த வைத்திய பண்டிதர், சிசுவுக்குத் தினம் எத்தனை தடவை ஆகாரம் வேண்டுமென்பதைச் சோதித்ததில், மூன்று தடவையே பரமோத்தமமென்றும், நான்கென்றுகூட, (அதிகப்படியான ஒரு தடவையால்) நோயும் சங்கடமும் விளையுமென்றும் கண்டார். முதலில் ஒரு சிசுவை மூன்று தடவையாகப் பால் கொடுத்து, ஒரு வயதுக்குள் அது அரோக திடகாத்திரமாக வளர்ந்து, சைசவாநந்தத்தில் வாழ்ந்து, மாதா பிதாக்களுக்கும் ஆநந்தத்தையே தந்தது. அடுத்த சிசுவை சோதனார்த்தமாக நாலு தடவை பால் கொடுத்துப் பார்த்ததில், அது வாவா நோய் வாய்ப்பட்டு வந்ததனால், ஒன்பது மாதத்திற்குள்ளாக அந்த சோதனையைப் போதுமென்று நிறுத்தி, அதிகப்படி ஒரு வேளையைக் குறைத்து, சிசுவைச் சுகப்படுத்தினார்கள்.

'பசி இல்லாமலாவது அதிகமாயாவது ஆகாரம் கொண்டால் என்ன மோசம்? தேவையானது போக மீதம் மலத்தில் வெளியே போகட்டுமே. ஆகாரம் குறைந்தால் குற்றமல்லவோ. ஆகையால் சாவதானத்துக்காக அதிகமாகவே சாப்பிடுவது உசிதம் தானே' என்றெல்லாம் உல்லேகனம் செய்வார் பலர்.

ஒரு களஞ்சியம் போலும்! வேப்பம் பலகைகளால் இணைத்த களஞ்சியத்தில் பொதிக்கணக்காக நெல்லைக் கொட்டி வைப்பது போல், வயிற்றுக் களஞ்சியத்தில் சோற்றுக்குப்பையைப் போட்டு வைத்துக்கொள்ளலாமென்று மனிதர் எண்ணம் போலும்!

உண்மை அப்படிக்கல்ல, இனி எழுதுவதை கவனமாகப் படியுங்கள்.

நாம் உண்ணும் உணவு அத்தனையும் இயற்கைப்படி விநியோகமாகி, முற்றிலும் அற்றுப் போகவேண்டும். அதன்மேல் தான், மறுபடி உண்பதற்கு நமக்கு யோக்யதை உண்டு. ஆகாரம் முதலில் வயிற்றுக் கருவிகளின் ரசங்களால் கரைந்து இரத்தச் சத்துக்களாக மாறவேண்டும். தீர்வாயுவாதிகளாக மாறாயிருக்கவேண்டும். இரத்தச் சத்துக்களை இரத்தக் குழாய்கள் உறிஞ்சி, உடம்பெங்கும்

கொண்டு போய்த் தனித்தனி அங்கங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். இந்தச் சத்துக்கள் அங்கங்கே பிராண வாயுவால் தகிக்கப்பட்டு சாம்பலாக வேண்டும். இந்தச் சாம்பல் நீரினால் கரைந்து, மறுபடி இரத்தத்தின் வழியாய்ச் சில கருவிகளில் புகுந்து, வியர்வை, மூத்திரம், சுவாசம், மலம், என்ற வகையாக வெளிவந்து உடம்பு சுத்தமாக வேண்டும். இத்தனை வேலைகளிலும் முந்தினவற்றினும் பிந்தினவைகளே முக்கியமாம்.

"உடம்பு வேண்டாம், கையை விடு" என்ற கதைபோல் நம் கதியாகிறது. நம் உயிரானது ஆகாரம் வேண்டாம், மலஜலவாயுக்கள் கழிந்தால் போதும் என்று கத்திக்கொண்டேயிருக்கிறது. ஆனால் மேன்மேலும் வயிற்றில் சுமை விழுந்துகொண்டேயிருக்கிறபடியால், அதைத் தாங்கிப் பக்குவப்படுத்துகிற வேலைக்கு ஓய்வே கிடையாது. மலாதிகளைக் கழிக்கும் வேலையை உயிரானது அன்றன்றைக்குச் செய்து முடிக்கக்கூடாமல், அந்த வேலை பாக்கிப்பட்டுக்கொண்டே வருகிறது. உடம்பு முழுவதும் நாற்றமெடுத்து, நெருக்கடியடைந்து, மேலே ஆயிரம் சோப்புப் போட்டுக் குளித்தாலும், உள்ளுக்குள் ஒரே கக்கூசு மயமாகிவிடுகிறது. பிராண சக்திக்கு முக்கிய ஆதாரமான ஆகாச சக்தி இதனால் குறைகிறது. ஆகாச சக்தி குறைந்தால் என்ன என்று கேட்கலாம். ஆகாச சக்திதான் உடம்பை உடையானுக்கு இலேசாகத் தோற்றும்படி செய்கிறது. ஒரு சமயம் நாலுபேர் சுமக்கும் பொருளை உயிரானது அலட்சியமாகத் தூக்கிக் கொண்டு செல்லவில்லையா? அது ஆகாச சக்தியின் வேலை. அந்த சக்தி குறைந்துவிட்டால், உடம்பைத் தூக்குவது உயிருக்குப் பெரும் சுமையாய் விடுகிறது. சோம்பல், பலஹீனம், அஜீர்ணம், மூலச்சூடு, மலச்சிக்கல் எல்லாம் இனிமேல் ஏற்படும். பின்னும் நாளுக்கு நாள் உடம்பின் நெருக்கடி அதிகமாய்க் கொண்டு வருமானால், இந்த அவகுணங்கள் நிலைத்துப் போகும்.

இப்படிப்பட்ட உடம்புக்குத்தான் நோய்கள் வரக்கூடும். தானாகப் பட்டினி கிடக்காதவனைக் கட்டாயப்படுத்திப் பட்டினிபோடும் பொருட்டே தெய்வம் காய்ச்சல் முதலான நோயைக் கிளப்பி, அன்னம் செல்லாதபடிக்கும், எழுந்து நடமாட முடியாதபடிக்கும் செய்கிறது.

இடைவிடாமல் அக்கிரமமாக வேலை செய்யும்படி அடிக்கப்பட்ட வயிற்றுக் கருவிகள், நாடிகள் எல்லாவற்றிற்கும் ஓய்வு கொடுக்கவே, நோய் என்பது ஈசனால் உண்டாக்கப்பட்டது. குற்றம் நம்மிடமே யிருக்கிறது. மடமையே அதற்குக் காரணம்.

பட்டினியே ஓய்வு. அதில்லாமல் ஓய்வே கிடையாது. வயிறு நிறையச் சாப்பிட்டவன் படுக்கையில் கிடந்தாலும், அவன் உடம்பின் உட்கருவிகளுக்குக் கடுமையான வேலைதான்.

பட்டினி கிடந்தால், அப்போது பல வருஷங்களாக பாக்கிப்பட்டிருக்கும் சரீர சுத்திவேலையில் கொஞ்சத்தையாவது செய்யலாமென்று உயிரானது உத்தேசிக்கிறது. அவ்வேலையின் பாக்கியைக் கழிக்க, வேறு சமயம் கிடையாது. வயிறு காலியாயிருக்கும் சமயமே சமயம்.

என்றைக்கும் தெய்வ சம்மதமான ஒழுங்கின்படி—உட்கருவிகளின் இயற்கைப்படி—சாப்பாடு முதலியதை நடத்துகிறவன் அன்றன்று இடையிடையே போதுமான நோம்பட்டினி யிருப்பதாகும். நல்ல தேகத்துக்குத் தினம் ஒரே சாப்பாடு போதும். அது மலம் வேறு, சத்து வேறாகப் பகுக்கப்பட்டு, மலங் கழிந்து, சத்துக்கள் சாம்பலாகி, அற்றுப்

போக, சுமார் ஐம்பது நாழிகை வேண்டும். பின்னும் பத்து நாழிகைப் போது உயிரும் கருவிகளும் இளைப்பாறும். அப்பால் பசி யெடுக்கும். அப்போது மறுநாள் சாப்பிட வேண்டிய வேளை கிட்டும். இதனால் அன்றன்று தேகசுத்தி வேலை பாக்கிப்படாமல் பூர்த்தியாகி, தேகம் உள்ளும் புறமும் நிர்மலமா யிருந்துவரும். நோயென்பது அவனுள்ள திசையையே எட்டிப்பார்க்க அஞ்சும். நிர்மல மான தேகமே நோயற்ற தேகம்.

இப்படிக்கில்லாதவர் என்ன செய்யவேண்டும்? கட்டாயப் பட்டினியாகிய நோய் வரு முன், தாமாகவே பட்டினி கிடந்து, தம் குற்றங்களை நீக்கிக்கொள்ளவேண்டும். நோய் வந்தால், அப்போதாவது பட்டினி கிடந்து, மருந்துகளையும், மருந்திடும் வைத்தியரையும் தூரவிலக்கி, இயற்கையினாலேயே நோயைத் தணித்துக்கொள்ளவேண்டும். இனி, வைத்திய சாஸ்திரத்தின் அடிப்படை அறிவாகிய பசியறிதலென்னும் விஷயத்தை அடுத்த சமயம் வர்ணிப்போம். பசியை உள்ளபடி அறிந்து, அதைத்தானென்றே மகிழ்வுடன் பாதுகாத்து வந்தால், நோயேன்? மருந்தேன்? அற்பாயுளில் மரணமேன்?

நிகலாத்

அல்லது

எகிப்திய மன்னனை ஏமாற்றிய எத்தன்.

(ஸ்ரீமான் S. M. பக்தவத்ஸலன்.)

அத்தியாயம் 1.

ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடதிசையில் எகிப்து என்று ஒரு தேசம் உண்டு. முன்னொரு காலத்தில் ராப்ஸினிட்டஸ் என்னோர் அரசன் அந்நாட்டை ஆண்டு வந்தான். அத்தேசம் வெகு காலத்திற்கு முன்பு வெகு சிறப்பு வாய்ந்திருந்தது. அதில் வசித்த ஜனங்கள் எல்லோரும் மிகவும் நாகரிகமுள்ள வர்களாயிருந்தனர். அக்காலங்களில் அந்நாட்டில் பெரிய கோயில்களும் கோபுரங்களும் மாடமாளிகைகளும் மாணுற விளங்கின.

ஆனால் அவ்வரசன் ஆண்ட காலத்தில் அங்கிருந்தகோயில்களிற் பல பாழடைந்திருந்தன. அரசன் அக்கோயில்களை யெல்லாம் புதுப்பிக்க வேண்டுமென்று நினைத்தான். உடனே மன்னன் தன் நாட்டிலும், தூரதேசங்களிலுமுள்ள வெகு திறமை வாய்ந்த சிற்பிகளைக் குறித்த நாளில் வருமாறு கட்டளையிட்டான். அக்காலத்துச் சிற்பிகள் தெய்வலோகத்தில் உள்ள மயனைக்காட்டிலும் திறமை வாய்ந்தவர்கள். அரசன் குறித்த நாளில் சிற்பிகள் எல்லோரும் வந்து சேர்ந்தனர். அப்பொழுது அரசன் அவர்களை ஒவ்வொருவராக அழைத்து அவரவர்களுடைய திறமைகளைக் குறித்து விசாரித்தான்.

அப்பொழுது அசிரியா, கிரீஸ், இந்தியா, பாபிலோன் முதலிய தேசங்களிலிருந்து சிற்பிகள் பலர் வந்திருந்தார்கள். அவர்களில் அசிரியா என்ற தேசத்திலிருந்து வந்திருந்த ஒரு சிற்பி அரசனை நோக்கி, "அரசே! அசிரியா நாட்டிலுள்ள அரசனுக்கு ஒரே கல்லில் மிகவும் விசித்திரமாக சித்திரமெழுதிக் கொடுத்

திருக்கிறேன். இதோ அதன் மாதிரியைப் பாருங்கள்'' என்று காட்டினன்.

கிரீஸ் தேசத்திலிருந்து வந்த சிற்பி அரசன் முன்னே வந்து, "மன்னனே! முன்னொரு காலத்தில் கிரேக்க அரசனுக்குத் தனியாக ஒரு சித்திர மண்டபங்கட்டிக் கொடுத்திருக்கிறேன். அந்த இடத்திற் செய்த வேலைப்பாடுகள் எல்லாம் கண்கவரத்தக்கன. இதோ பாருங்கள்! இப்படத்தை யெல்லாம்'' என்று அரசனிடம் சொன்னன்.

இந்தியாவிலிருந்து வந்த சிற்பி மன்னனது ஆசனத்தின் எதிரே சென்று, "ராஜாதி ராஜனே! இந்தியாவிலிருந்த ஜீவகனுடைய தந்தையாகிய சச்சந்தன் என்னும் மன்னனுக்கு நான் மாயமான மயிற்பொறி ஒன்று செய்து கொடுத்தேன். அந்த மயில் வானத்தில் இருவரைச் சுமந்து பறக்கும் திறமை வாய்ந்துள்ளது. அத்தகைய மயிலைச் செய்து கொடுத்தவன் யான்'' என்று சொன்னன்.

கடைசியில் பாபிலோன் நகரத்திலிருந்து வந்தவனன பலாத் என்பவன் அரசன் எதிரே சென்று வணங்கி, "மன்னரேறே! நான் பாபிலோன் நகரத்திலிருந்த அரசனுக்கு விசித்திரமான வேலைப் பாடமைந்த ஓர் அறை கட்டிக் கொடுத் திருக்கிறேன். அந்த அறையில் யாராவது ஒருவர் இருப்பாராயின் அவரைக் கண்டு பிடிக்க முடியாது. அந்த அறை எங்கிருக்கின்றது என்றுயினும் சொல்லவும் முடியாது. அதில் எப்படி வெளிச்சமும், காற்றும் வருகின்றன என்பதையும் ஏவராலும் அறிய முடியாது. அவ்வளவு திறமையுடன் செய்திருக்கிறேன். இதோ இந்தப் படத்தைப் பாருங்கள்'' என்று சொல்லித் தன் கையிலிருந்த படத்தைக் கொடுத்தான்.

அரசன் அவனது சொல்லைக் கேட்டு மயங்கிவிட்டான். பிறகு அந்தப் படங்களைப் பார்த்து, "இவனே நம் வேலை செய்யத்தகுந்தவன்'' என்று தீர்மானித்தான். பிறகு அரசன் மற்றச் சிற்பிகளைக் கூப்பிட்டு பலாத்தினது தலைமையில் வேலை செய்யும்படிக் கட்டளையிட்டான். அவர்களும், "அப்படியே செய்வோம் அரசே!'' என்று ஒத்துக்கொண்டனர்.

சிற்பிகள் எல்லோரும் பலாத்தினது தலைமையில் வேலை செய்தனர். அவர்கள் எல்லோரும் வெகு அழகாக ஒவ்வொரு கோயிலையும் புதுப்பித்தனர். அவைகள் எல்லாம் அன்று செய்து வைத்தவை போற் காணப்பட்டன. அக்கோயில்களின் வேலைப்பாடுகள் பார்க்கப் பார்க்க வெகு விசித்திரமாக அமைந்திருந்தன.

கோயில்களை எல்லாம் புதுப்பித்தவுடன் அரசன் தனது மந்திரிகளோடு அங்குச் சென்ருன். அங்குச் சென்றதும் ஒவ்வொரு கோயிலிலும் துலங்கிய வேலைப்பாடுகளைக் கண்ணுற்ருன். அவை அரசனுக்குப் பார்க்கப் பார்க்க ஆச்சரியத்தை உண்டாக்கின. மன்னன் தனக்குள், "நம் செல்வத்தைச் சேமித்து வைக்க ஒரு பொக்கிஷசாலை கட்டத் தகுந்தவன் இவனே'' என்று நினைத்துக்கொண்டு தனது பரிவாரங்களுடன் அரண்மனைக்குத் திரும்பினன்.

அரசன் பெருஞ் செல்வம் படைத்திருந்தான். அச்செல்வத்தைக் கொண்டு பிறதேசங்களின் மீது படையெடுத்துச் செல்லவேண்டுமென்று நினைத்திருந்தான். ஆனல் அதற்குள் வேற்றரசர்கள் யாராவது வந்து பணத்தைக் கவர்ந்து கொண்டு போய் விடுவார்களோ என்ற பயம் அரசனது மனத்தில் குடிகொண்டது. ஆதலால் அரசன் ஒரு பொக்கிஷசாலை கட்டவேண்டுமென்று தீர்மானித்தான். அப்பொழுது சிற்பிகளின் தலைவனுயிருந்த பலாத்தினது சமர்த்தைக் கண்டு அவனைக் கொண்டே அவ்வேலையை முடித்துக் கொள்ள

வேண்டுமென்று நினைத்தான். அதற்காகத் தன் சேவகர்களில் ஒருவனிடம் பலாத்தை அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

சேவகர்கள் சென்று பலாத்தை அழைத்து வந்தனர். பலாத் அரசனை வணங்கி, "அரசே! நின் கட்டளை யாது?" என்று கேட்டான். உடனே அரசன் அவனைத் தன்னருகில் வருமாறு சைகைகாட்டினான். அப்படியே அச்சிற்பன் அரசன் அருகிற் சென்று வணங்கி நின்றான். பிறகு அரசன் பலாத்தை நோக்கி, "எனக்கு ஒரு இரகசியமான பொக்கிஷசாலை கட்டிக் கொடுக்கவேண்டும். அந்தப் பொக்கிஷசாலையானது அரண்மனையின் சமீபத்திலிருக்க வேண்டும். அஃது வெள்ளத்தாலும் தீயாலும் கவாப்படாத காவலுடையதாயிருக்க வேண்டும்" என்று சொன்னான். உடனே பலாத், "அப்படியே ஆகட்டும் அரசே!" என்றான். அரசன் கோரியவாறே தான் அமைக்கக் கருதிய பொக்கிஷசாலையின் மாதிரி ஒன்று செய்து காட்டினான். தான் செய்த மாதிரியை அரசனுக்கு விளக்கிக் கூறினன். அரசன் அதைக் கண்டு மிகவும் சந்தோஷித்தான்.

மறுநாட்காலை பலாத் பல வேலையாட்களுடன் வேண்டிய சாமான்களைத் தயார் செய்து கொண்டு வேலையை ஆரம்பிப்பதற்கு அரண்மனையின் வெளிமுற்றத்தில் வந்து சேர்ந்தான். அங்கே பெரிய பூதாகாரமான கற்கள் எல்லாம் வந்து சேர்ந்தன. யானைகளாலும் அசைக்கமுடியாத பருமனும் பாரமும் உடைய கற்கள் அநேகம் இருந்தன. வேலையாட்கள் எல்லோரும் பலாத்தினது உத்தரவுப்படியே வேலையைச் செய்ய வாரம்பித்தனர். அரசனும் சில சமயங்களில் வந்து பார்த்துப் போனான்.

இப்படி வேலை நடந்து வரும்பொழுது ஒரு நாள் பலாத் ஒரு மரத்தினடியில் உட்கார்ந்து தன் வேலையாட்கள் செய்துகொண்டிருந்த வேலையைப் பார்த்திருந்தான். அப்பொழுது, அவனுக்கு ஒரு எண்ணம் உதித்தது. அது என்னவென்றால், "நான் இப்படிப்பட்ட ஓர் இரகசியமான பொக்கிஷசாலை கட்டுகின்றேன். இந்த அறையைப் பற்றிய மாயங்கள் எல்லாம் எனக்கும் அரசனுக்குந் தவிர வேறொருவருக்கும் தெரியாது. ஆதலால் நான் மற்றவர்களுக்கு அந்த இரகசியத்தைச் சொல்லி விடுவேன் என்று அரசன் அஞ்சுவான். முடிவில் என்னை எப்படியாவது கொன்றே தீருவான். நான் இறந்தால் என் மனைவி மக்கள் எவ்வாறு பிழைப்பார்கள். ஆதலால் யான் அரசனறியாவண்ணம் ஓர் இரகசிய வழி அமைக்கிறேன். அப்பொழுது என் பிள்ளைகள் அந்த வழியாகச் சென்று வேண்டிய பொருள் கொண்டு போய்ச் சுகமாய்ப் பிழைத்திருப்பார்கள்" என்று நினைத்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் மற்ற வேலைக்காரர்கள் எல்லோரும் சாப்பிடப் போயினர். உடனே பலாத் மெதுவாக அக்கட்டடத்தின் ஒரு மூலைக்குச் சென்றான். அங்குச் சென்று ஒரு பெரிய கல்லை யெடுத்தான். அதன் ஒரு மூலையில் கீல் முதலியவைகள் அமைத்துக் கற்கதவாக ஓரிடத்தில் பொருத்தினான். இரண்டு ஆணிகளை எடுத்து வெகு சூட்சுமமாகப் பொருத்தினான். அவ்வாணிகளில் அற்புதமான பொறிமுறை அமைத்தான். பின்னர் அதில் ஓர் ஆணியை அழுத்தினான். உடனே அக்கற்கதவு மெதுவாகத் திறந்தது. மற்றொரு ஆணியை அழுத்தினான்; அப்பொழுது அக்கற்கதவு மெதுவாக மூடிக்கொண்டது. பிறகு பலாத் அக்கதவு ஒருவராலும் அறிந்து கொள்ளாதபடி யிருக்கவேண்டுமென நினைத்தான். அதற்காக அவன் அதன் பக்கத்தில் இருந்த கற்கள் எவ்வாறு அமைந்திருந்தனவோ அவ்

வாறே தன் சமர்த்தை யெல்லாம் காட்டித் தான் வைத்த கல்லைப் பொருத்தி முடித்து விட்டு முன்னிருந்த இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

பிறகு வேலையாட்கள் எல்லோரும் வந்தார்கள். அவரவர்கள் தங்களுடைய வேலையைச் செய்து முடித்துச் சாயங்கிரம் வீட்டிற்குப் போய் விட்டார்கள்.

இரண்டு மூன்று மாதங்கள் சென்ற பிறகு அந்தப் பொக்கிஷசாலை முடிவு பெற்றது. ஆனால் கதவுமாத்திரம் வைக்கவில்லை. ஏனென்றால் அக்கதவை அதிகச் சிற்பவேலைப்பாடுகளோடு அமைக்கவேண்டியதாயிருந்தது. அதனால் அவன் அந்தக் கதவைத் தானே செய்ய வேண்டு மென்று நினைத்தான். அந்தக்கதவைப்பற்றிய இரகசியம் பலாத்துக்கும் அரசனுக்கு மாத்திரந் தான் தெரியும். அதனால் பலாத் மற்ற வேலைக்காரர்களை அனுப்பி விட்டு ஒருவருக்குந் தெரியாமல் அந்தக் கதவைச் செய்யத் தொடங்கினான். வெண்கலத்தை உருக்கித் தான் அமைத்த அச்சிலேயே வார்த்து அக்கதவைச் செய்தான். அதில் பற்பல பொறிகள் அமைத்திருந்தான். அதில் ஒரு சிங்கத்தின் உருவம் காணப்பட்டது. அந்தச் சிங்கமானது பொய்ச்சிங்கமாயிருந்தது. அருகே யாராவது செல்ல நேரிட்டால் உடனே அச்சிங்கம் தன் கைகளால் அவரைப் பற்றித் தன் கோரமான வாயைத் திறந்து கடித்துக் கொன்று விடும். அது பலாத்தின் மாயா வன்மையினால் அமைந்த வெண்கலச் சிங்கம். அக்கதவைத் திறப்பதற்கும் பூட்டுவதற்கும் அமைந்த இரகசியம் அவன் ஒருவனுக்கே தெரியும். அந்தச் சிங்கத்தின் வாயைக் கட்டவும் அவனே யறிந்திருந்தான். இத்தகைய கதவினை பொக்கிஷசாலையின் வாசலில் அமைத்தான்.

மறு நாட்காலை அரசனை அழைத்து அவ்வெண்கலக் கதவிலும் அச்சிங்கத்திலும் அமைத்திருந்த மாயப் பொறிகளை யெல்லாம் அரசனுக்கு அறிவித்தான்.

ஆனால் அவன் செய்த திருட்டு வழியை மட்டும் முற்றிலும் மறைத்து விட்டான். அரசன் உள்ளே நுழைந்து பார்த்தான். அது ஒரே கல்லைக் குடைந்து செய்த ஒரு மண்டபம் போலிருந்தது. அரசன் அவ்வற்புத மண்டபத்தைப் பார்த்து அதிசயித்தான். பிறகு அச்சிற்பிக்கு ஏராளமான செல்வத்தைப் பரிசாகக் கொடுத்தனுப்பினான். பலாத் மன்னன் அளித்த பெருஞ் செல்வத்தோடு தன் மனைக் கேகினன்.

அத்தியாயம் 2.

அரசன் மெதுவாகத் தன் மந்திரிமார்களுடன் அரண்மனையைச் சார்ந்த நந்தவனத்தின் வழியாகச் செல்லுகையில், தனக்குள், "இனிமேல் நமக்குப் பயமில்லை. எவரும் பொக்கிஷசாலைக்குள் புகுந்து திருடமாட்டார்கள். என்னைப் போல செல்வவந்தரும் இவ்வுலகில் இரார்" என்று சொல்லிக்கொண்டான். இப்படிச் சந்தோஷமாக நினைத்துப் போய்க்கொண்டிருக்கையில் திடீரென்று அரசனுக்கு ஓர் எண்ணம் உதித்தது. அதாவது, "அந்தத் தச்சனுக்குப் பொக்கிஷசாலையைப்பற்றிய மாயமெல்லாம் நன்றாகத் தெரியும். எப்படியாவது அந்த இரகசியத்தை மற்றவருக்குச் சொல்லிவிடுவான். அதனால் நிச்சயமாக நமக்குத் தீங்கு நேரிடும்" என்று நினைத்தான். உடனே அரசன் தன் அரண்மனைக்குப் போய் இரண்டு அடிமைகளை இட்டுவருமாறு தன் சேவகர்களுக்குக் கட்டளையிட்டான். அப்பொழுது அரசன் ஆணைப்படி கரிய மேனியும், திண்ணிய புயமும், பரந்த மார்பும், விரிந்த முகமும், சுருண்ட மயிரும், எவரும் கண்டு அஞ்சத்தக்க நோக்கமு முடைய

இரண்டு அடிமைகள் வந்து தோன்றி அரசனைப் பணிந்தனர். அரசன் அவர்களை நோக்கி, "நீங்கள் இன்று இரவு பலாத்தின் மனைக்குச் சென்று எவரும் அறியாது பலாத்தையெடுத்துச் சென்று நைல் நதிக்கரையிலுள்ள காட்டிற் கொண்டுபோய்க் கொன்றுவருக'' என்று கட்டளையிட்டான்.

இஃது இவ்வாறாக, பலாத் தன் பெருஞ் செல்வத்தோடு வீடுபோய்ச் சேர்ந்தான். அவன் கொண்டு வந்த பெருஞ் செல்வத்தைக் கண்டு அவனுடைய மனைவிமக்கள் பெருங் களிப்படைந்தனர். இவ்வாறு அவனுடைய வீட்டில் யாவரும் அகமகிழ்ந்திருக்கையில் பலாத்தன் உள்ளத்தில் ஏதோ ஒன்றை நினைத்துப்பெருங் கவலையுள் ஆழ்ந்தான்.

"கூடியசீக்கிரம் அரசன் எவ்வாறாயினும் என்னைக் கொன்றுவிடுவான். பொக்கிஷசாலையின் கதவைத் திறக்கும் மாயம் யான் ஒருவனே அறிவேன். நான் இம்மாயத்தை மற்றவர்க்கு உரைத்திடுவேன் என்று அரசனுக்கு ஓர் எண்ணம் எழும். தன்னலமே பெரிதெனக் கருதும் மன்னன் மன்னுயிர்க்கு இரக்கமற்றவனாகி என்னைக் கொன்றுவிட ஆணையிடுவான். காற்றன்னபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். இப்பொழுதே என் மக்களுக்கு யான் பொக்கிஷசாலையில் அமைத்த காவடமான வழியை உணர்த்துவேன்'' என்று மனதில் சிந்தனை செய்தான்.

அக்கணமே தன் இருபிள்ளைகளுடனும் மனைவியுடனும் ஓர் இரகசிய அறைக்குட் சென்றான். அங்கே தன் இருபிள்ளைகளையும் அவன் அருகில் அழைத்து, "எனதருமைப் பிள்ளைகளே! நான் இப்பொழுது உங்களுக்கு ஓர் இரகசியமான சமாசாரம் சொல்லப்போகிறேன். அதை யாருக்கும் நீங்கள் வெளியிடலாகாது. வெளியிடுவீராயின் உங்கள் உயிருக்கே சேதம் வரும். நான் இவ்வளவு காலமாக மெய் வருந்தி உழைத்து அரசனுக்கு ஓர் இரகசியமான பொக்கிஷ சாலை கட்டிக் கொடுத்தேன். யானும் அரசனு மன்றி மற்றெவரும் அவ்வறையைப்பற்றிய இரகசியங்களை யறியார். ஆதலால் அரசன் எப்படியாவது நான் அதை வெளியேசொல்லிவிடுவேன் என்று என்னைக் கொன்றுவிடுவான். அதற்காக நீங்கள் துக்கப்படாதீர்கள். அந்த இரகசிய அறையில் நான் ஓர் இரகசிய வழி உண்டு பண்ணி யிருக்கிறேன். பொக்கிஷசாலையின் வடகிழக்கு மூலையில், நிலத்திலிருந்து நான்கு அடி உயரத்திலிருக்கிற கல்லைத் தடவிப் பாருங்கள். அந்தக் கல்லில் ஒரு மூலையில் ஒரு விரல் பதியத்தக்க சிறு பள்ளம் ஒன்று இருக்கின்றது. அதற்கு நேராகக் கிழக்கே மூன்றடி தூரத்தில் ஒரு சிறு பள்ளம் இருக்கின்றது. அவை பார்ப்பவர் கண்ணுக்குத் தெற்றெனப் புலப்படா. கைகொண்டு தடவிப்பார்ப்பீராயின் அவை தெற்றெனப் புலப்படும். மேற்றிசையிலிருக்கின்ற பள்ளத்தை அழுத்துவீர்களாயின் உங்கள் விரல் உள்ளே போகிறதைக் காண்பீர்கள். உடனே அக்கல்லானது எவ்வித ஓசையுமின்றி ஒரு கதவுபோல் திறக்கும். நீங்கள் அது வழியாகச் சென்று வேண்டிய திரவியத்தை யெடுத்துக்கொண்டு வரலாம்'' என்றான். அப்போது மூத்த பிள்ளை, "அப்பா! கதவை அடைப்பது எவ்வாறு?" என்று கேட்டான். அதற்குத் தகப்பன், "நீங்கள் மற்றொரு பள்ளத்தை விரலால் அழுத்துவீர்களாயின் உடனே அக்கல்லானது மெதுவாய் ஓசையின்றி மூடிக்கொள்ளும். நான் இறந்த பிறகு உங்களிடத்தில் பணமில்லாத சமயத்தில் அங்குச் சென்று வேண்டிய பணம் எடுத்துக் கொண்டு வந்து சுகமாய் வாழுங்கள்'' என்று அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்ச் சொன்னான்.

அம்மொழிகளைக் கேட்ட இருபிள்ளைகளும் அவர்களுடைய தாயும் ஆறாத் துயரடைந்தனர். இருபிள்ளைகளும் தகப்பனது கைகால்களை பிடித்துக்கொண்டு, "அப்பா! அப்பா! உங்களை மறுபடியும் நாங்கள் என்று காண்போம்"? என்று கதறிக் கதறி அழுதார்கள். அதைக் கண்ட தகப்பனும் அழவாரம்பித்தான்.

பின்பு, பலாத் தன் மனைவி மக்களுடன் இராப் போஜனம் அருந்திப் படுத்துக்கொண்டான். தாயும் இருபிள்ளைகளும் வருத்தத்தினால் நன்றாய்த் தூங்கிவிட்டனர். ஆனால் பலாத் மட்டும் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தான். பிறகு எண்ணி எண்ணிக் களைத்துத் தூங்கி விட்டான்.

அரசனது ஆணையின்படி நள்ளிரவில் இரண்டு அடிமைகள் வெகு தந்திரமாக பலாத்தினுடைய வீட்டிற்குச் சென்றனர். அங்கு அவர்கள் எல்லோரும் நன்றாய்த் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டு, அதுவே தக்க சமயம் என்று பலாத்தைத் தூக்கிக்கொண்டு நைல் நதிக்கரையில் உள்ள காட்டிற்கு எடுத்துச் சென்றனர். அங்கு அவனைக் கொண்டு போய்க் கொன்று புதைத்து விட்டனர்.

மறுநாள் காலை பலாத்தினது வீட்டில் தாயும் இருபிள்ளைகளும் கோவென்று அழுது கொண்டிருந்தார்கள். அந்த வீட்டில் அந்நாளெல்லாம் துக்கமே குடிகொண்டிருந்தது. பலாத்தின் மனைவி ஓயாமல் அழுது கொண்டிருந்தாள். அவ்வாறு அவர்கள் அழுவதைக் கண்ட அயல் வீட்டார் அனைவரும் வந்தனுேப் பலவாருகத் தேறுதல் சொல்லிப் போயினர்.

நாள் பல செல்ல, அந்த இருபிள்ளைகளுக்கும் தந்தை இறந்த துக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தது. இருபிள்ளைகளும் தகப்பன் கொண்டுவந்த செல்வத்தையெல்லாம் ஆடல் பாடல்களிலும், கேளிக்கை விநோதங்களிலும், மிதமிஞ்சிய சுகபோகங்களிலும் வீண் செலவு செய்யலாயினர். அப்படி அவர்கள் செலவு செய்த போதிலும் தன்னை அண்டினவர்களை ஆதரித்தார்கள். இல்லையென்பாருக்கு இல்லையென்று சொல்லாமல் கொடுத்து உதவினர். ஏழை ஜனங்கள் சில்லோரும் அவர்களை வாழ்த்தினர்கள்.

இவ்வாறு அவர்கள் உல்லாசமாகச் செலவு செய்யவே பணமெல்லாம் காற்றிற் பட்ட பஞ்சுபோல் பறந்துவிட்டது. அதைக்கண்ட மூத்தவன் தன் தம்பியைப் பார்த்து, "தம்பி! நாம் இன்றைக்கு அரசனது பொக்கிஷசாலைக்குச் சென்று பணம் திருடி வருவோம்" என்றான். அதைக் கேட்ட தம்பியும், "ஆமாம் அண்ணா! பணம் எல்லாம் செலவாய்விட்டது. இன்றைக்கு நாம் போகவேண்டாம். நாம் நாளைக்குப் போகலாம். ஏனென்றால் நாளைக்குக் கொஞ்சம் இருள் அதிகமாயிருக்கும். அப்பொழுது நம்மை ஒருவரும் பாரார்." என்றான். அவ்வாறே மறுநாள் போகத் தீர்மானித்தார்கள்.

மறுநாள் இரவு அவர்கள் தீர்மானித்தபடி அரசனது பொக்கிஷசாலைக்குப் போகத் தயாராயிருந்தனர். நள்ளிரவு வந்ததும் இருவரும் பொக்கிஷசாலைக்குப் புறப்பட்டனர். தந்தை சொல்லியவைகள் எல்லாம் அவர்கள் மனத்தில் வைத்திருந்தனர். அவர்களும் அநேக வீடுகளையும் கடந்து அரசனது அரண்மனைக்கு வந்தனர். அங்கு எங்கு பார்த்தாலும் ஒரே இருளாயிருந்தது. தங்கள் முகமே தங்களுக்குத் தெரியவில்லை. முதன் முதலில் அங்கு வருவதால் அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் இப்படி அரண்மனைக்குள் போய்க் கொண்டிருக்கும்பொழுது இளையவன் ஒரு கல்லில் இடறி விழுந்தான். உடனே

இருவரும் யாராவது பார்க்கப் போகிறார்கள் என்று நினைத்துத் தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டனர்.

இடறிவிழுந்த சத்தம் அங்கு காவல் செய்து கொண்டிருந்த காவலாளிகளின் செவியிற் படவே அவர்கள் வெகு விரைவாக என்னவென்று பார்க்க ஓடினார்கள். எங்கும் ஒரே இருளாயிருந்ததினால் அவர்கள் கண்ணுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அவர்கள் சுற்றிப் பார்த்து விட்டுத் தங்களிடத்திற்குக் காவல் செய்யப் போய்விட்டனர்.

சற்று நேரம் சென்றதும் இருவரும் மெதுவாய்த் தரையோடு தரையாய் நகர்ந்தார்கள். அதன் பிறகு அவர்கள் இருவரும் எழுந்து மெதுவாகத் தந்தை குறிப்பிட்ட மூலையை யடைந்தனர். அங்குச் சென்றதும் அவர் குறிப்பிட்ட கல்லைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கடைசியில் இருவரும் தனித்தனியாகப் பிரிந்து தேடவாரம்பித்தனர். அப்பொழுது இளையவன் அந்தப் பள்ளத்தைக் கண்டு பிடித்தான். உடனே தன் அண்ணனைக் கூப்பிட்டு அக்கல்லிலிருந்த பள்ளத்தை அழுத்தினான். திடீரென்று ஒரு கல்லானது மெதுவாக ஓசையின்றித் திறந்தது. இருவரும் வெகு சந்தோஷத்தோடு உள்ளே நுழைந்தனர். அங்கு எங்கு பார்த்தாலும் இருளாகவே யிருந்தது. அந்த அறையில் பணமெல்லாம் குவியல் குவியலாக யிருந்ததால் அவர்கள் வெகு சுலபமாய்த் தங்களுக்குத் தேவையான பணத்தை யெடுத்துக் கொண்டு வெளியே வந்து தந்தை சொன்னபடியே அக்கல்லை மூடிவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

மறுநாள் முதல் அவர்கள் எவ்வாறு முன் நாட்களைக் கழித்தனரோ அவ்வாறே கழிக்கவாரம்பித்தனர். பணமும் செலவாய் விட்டது. மறுபடியும் அரசனது பொக்கிஷசாலைக்குச் சென்று வேண்டிய பணம் கொண்டு வந்தனர். அப்படியே அவர்கள் பணத்தைக் கொண்டுவந்து உல்லாசமாய் வாழ்ந்து வந்தனர்.

அத்தியாயம் 3.

ஒரு நாள் மன்னன் தன் பொக்கிஷசாலையைப் பார்க்கச் சென்று அதன் மாயக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்து தன் செல்வமனைத்தையும் உற்று நோக்கினன். அப்பொழுது அவனுக்குச் செல்வம் குறைந்திருப்பது தெளிவாயிற்று. உடனே தன் சேவகர்களைக் கூப்பிட்டு பணத்தை யெல்லாம் பைகளில் போட்டு மூட்டைகளாகக் கட்டி இலக்கமிடுமாறு கட்டளை யிட்டான். அவர்களும் அவ்வாறே பணத்தை யெல்லாம் பைகளில் போட்டு மூட்டைகளாகக் கட்டி இலக்கமிட்டு வெளியே சென்றனர். பிறகு அரசனும் தன் அரண்மனைக்குப் போய்விட்டான். இதற்கு மூன்றாம் நாளிரவில் பலாத்தினது, இருபிள்ளைகளும் மறுபடியும் பணம் திருட வந்தார்கள். அவர்கள் இருள் நிறைந்த இரவில் வந்தார்களாதலால் பைகளில் இலக்கமிட்டிருந்ததைப் பார்க்க முடியவில்லை. அவர்கள் தங்களுக்கு வேண்டிய பணப்பைகளைத் தூக்கிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தனர்.

மறுநாள் காலையில் அரசன் பொக்கிஷசாலையைப் பார்க்க அந்த மாயக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். உடனே, "இஃதென்ன விந்தை! நாம் கதவுகளில் அன்று இட்டுப் போன முத்திரை அவ்வாறேயிருக்கிறது. அப்படியிருக்க, எப்படி இதனுள் நுழைந்து பதினைந்து பணப்பைகளைத் திருடிச் சென்றனர்!" என்று யோசித்தான்.

சிறிது நேரம் அரசன் திகைத்து நின்ற பின் நேரே அரண்மனைக்குச் சென்று தன் சேவகர்களைக் கூப்பிட்டு பிரதான மந்திரியை அழைத்து வருமாறு சீற்றத்தோடு சொன்னான். அரசனுக்கு இரண்டு கண்களும்

கொவ்லைக் கனிபோல் சிவந்தன. முகம் உகாந்த காலத்துத்தியெனத் தோன்றிற்று. இரண்டு புயமும் துடித்தது. சிறிது நேரம் சென்ற பிறகு மந்திரியும் வந்து சேர்ந்தான். மந்திரி அரசன் முகத்தைப் பார்த்துக் கோபமாயிருக்கிறானென்று தெரிந்துகொண்டு அரசன் எதிரே சென்று வணங்கி நின்றான்.

உடனே அரசன் தன் மந்திரியை நோக்கி, "அமைச்சரே! நம் நாட்டில் பொறி வைப்பதில் மிகவும் திறமை வாய்ந்தவன் எவனாவது இருக்கிறானா?" என்றான். அதற்கு மந்திரி, "ஆம் அரசே! நம் நாட்டில் முன்னொருகாலத்தில் பொறிவைப்பவன் ஒருவனிருந்தான். அவன் இப்பொழுது இருக்கிறானோ இல்லையோ, தெரியாது. நான் போய்ப் பார்த்து வருகிறேன், அரசே!" என்றான்.

அவ்வாறே மந்திரி அரசனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு பொறிவைப்பவனுடைய வீட்டிற்குச் சென்று அவனை அரண்மனைக்குக் கொண்டுவந்தான். அவன் அரசனுக்கு எதிரே சென்று வணங்கி, "அரசே! நின் கட்டளை யாது?" என்று கேட்டான். உடனே மன்னன் அவனை அருகில் வருமாறு கட்டளையிட்டான். அவ்வாறே அவன் அருகில் சென்று வணங்கி நின்றான். அப்பொழுது அரசன் அவனை நோக்கி, "பொறிவைப்பவனே! இன்றைக்கு என்னுடைய பொக்கிஷசாலையில் வெகு தந்திரமாகப் பொறிவைக்க வேண்டும்" என்றான். அதற்கு அவன், "அவ்வாறே ஆகட்டும் அரசே! நான் என்னுடைய வீட்டில் சாமான்களை எல்லாம் வைத்து விட்டு வந்திருக்கிறேன். ஆகலால் நான் வீட்டிற்குப் போய்ச் சாமான்களையெல்லாம் எடுத்து வருகிறேன்" என்று சொன்னான்.

அரசன் சரி என்று இசைந்ததும் அவன் விடுபோய்த் தன்னுடைய சாமான்களையெல்லாம் ஒன்று விடாமல் எடுத்துவந்தான். அரசன் எதிரிலேயே வெகுதந்திரமாக ஒரு ஈ புகுந்தாலும் அகப்பட்டுக் கொள்ளும்படி வலைகளை அங்கங்கே கட்டி வைத்தான். அரசன் மிகவும் மகிழ்ச்சியடைந்து பொறிவைத்தவனுக்கு நன்றாகப் பரிசளித்து வீட்டுக்கனுப்பினான்.

இப்படியிருக்கும்பொழுது பலாத்தினும் இரு பிள்ளைகளும் பணத்தையெல்லாம் தாறுமாறாகச் செலவு செய்தனர். மறுபடியும் அவர்கள் அரசனது பொக்கிஷசாலைக்குச் செல்லப் புறப்பட்டனர். அவர்கள் புறப்பட்டு வெளியே கொஞ்சதூரம் வந்தார்கள். அப்பொழுது ஒரு பூனை யிறந்திருப்பதைக் கண்டார்கள். இன்னும் கொஞ்சதூரம் வந்தபொழுது ஒரு பூனை அன்னத்தைக் கொன்று தின்பதைப் பார்த்தார்கள். இவைகளையெல்லாம் கண்ட இளையவனான நிகலாத், "அண்ணா! என்ன இது! முதலில் இறந்த பூனையைப் பார்த்தோம். இரண்டாவது, பூனை அன்னத்தைக் கொன்று தின்பதைப் பார்த்தோம். இவைகளெல்லாம் அவசகுனங்களாயிற்றே; நமக்கு ஏதாவது தீங்கு நேரிடுமோ?" என்று சொன்னான். உடனே மூத்தவன், "தம்பி! பயப்படாதே, வா போகலாம். தைரியத்தைக் கைவிடாதே!" என்று சொல்லித் தம்பியை அழைத்துக்கொண்டு சென்றான். அரசன் அங்குப் பொறிவைத்திருந்தது அவர்களுக்குத் தெரியாது. மூத்தவன் இரகசிய வழியாக உள்ளே சென்றான். உள்ளே இருளாயிருந்ததினால் வலைகள் அவர்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை. அப்படி அவர்கள் நுழைந்த மாத்திரத்தில் மூத்தவன், "தம்பி! தம்பி!" என்று மெதுவாகக் கூறினான். இதைக்கேட்ட இளையவன், "என்ன! என்ன!" என்றான்.

உடனே அண்ணன், "தம்பி! இங்கே வலை வைத்திருக்கிறார்கள். நீ வாராதே; அங்கேயே இரு. நான் இதில் அகப்பட்டுக் கொண்டேன்.

நான் வேண்டிய பணப்பைகளை யெடுத்துக் கொடுக்கிறேன். அவைகளை யெடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போய் தாயாரைக் காப்பாற்று. நீ போகும்பொழுது என் தலையை மாத்திரம் வெட்டி யெடுத்துக் கொண்டு போய் விடு. ஏனென்றால் அரசன் பலாத்தினுடைய பிள்ளைகள் என்று அறிவானாகில் நிச்சயம் நம்மையும் நம் குலத்தையும் அழித்து விடுவான். நீ ஒரு சமயம் நல்ல நிலைமையில் வந்தாலும் வரலாம். ஆதலால் என் தலையை வெட்டி யெடுத்துக்கொண்டு போய்விடு. அப்பொழுது அரசன் என்னை இன்னானென்றறியான். அதற்காகத் துக்கப்படாதே" என்று மிகவும் துயரத்துடன் சொன்னான்.

அதைக் கேட்ட நிகலாத், "அண்ணா! நாம் இதுகாறும் இணைபிரியாதிருந்தோமே! இணை பிரியுங்காலம் வந்ததா? அண்ணா! நீ இறக்க நான் இருப்பதா? அண்டம் புரண்டாலும், ஆதித்தன் இருண்டாலும், அலை புரண்டுவருகிற சமுத்திரமானது நீர்த்துளியின்றி வறண்டாலும் உன்னைப்பிரிந்து யான் உயிர்தரியேன்! அண்ணா! அண்ணா! நான் உன்னோடு இறப்பேனே தவிர உன்னை விட்டுப்போகேன்!" என்று கதறிக்கதறி அழுதான். அதைக்கேட்ட மூத்தவனும் அழத்தொடங்கினான். சற்று நேரம் இருவரும் வாளாயிருந்தனர். பிறகு மூத்தவன், "தம்பி! நாம் இருவரும் இறந்து விட்டால் நம்மை பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த தாயாரை யார் காப்பாற்றுவார்? இதற்குத் துயர் உறாதே. இதோ இந்தப் பணப்பைகளை என்னுடைய தலையுடன் வீட்டிற்கு எடுத்துக் கொண்டுபோ" என்று மிகவும் விசனத்துடன் சொன்னான். கொஞ்சநேரம் சென்ற பிறகு நிகலாத், "அண்ணா! என்கையாலே உன்தலையை வெட்ட வேண்டுமோ! ஐயோ! ஐயோ! இது என்ன கொடுமை! அந்தோ! அந்தோ! எல்லாம் தெய்வச்செயலோ! பரந்தாமனே! கருணாகரனே!" என்று சொல்லித்தன் கையிலிருந்த வாளாலே அண்ணனுடைய தலையை வெட்டி யெடுத்துக் கொண்டு பணப்பைகளுடன் வீட்டிற்குப் போனான்.

அத்தியாயம் 4.

மறு நாள் அரசன் பொக்கிஷசாலைக்குச் சென்றான். அங்கு சென்றதும், அரசன் திடுக்கிட்டு நின்றான். ஏனென்றால் அங்கிருந்த வலையில் தலையின்றி ஒரு முண்டம் மாத்திரமிருக்கக் கண்டான். உடனே அரசன் தன் சேவகர்களை அழைத்து, "அம்முண்டத்தை ஜனங்கள் அதிகமாய் நடமாடுகிற கடைவீதியில் தொங்கவிடுங்கள். காவலர்கள் இருபுறங்களிலும் உருவிய கத்தியும் கையுமாய் இருங்கள். அவ்வாறு இருக்கும் சமயத்தில் யாராவது அருகில் வந்து அழுதால் அவர்களை உடனே பிடித்துக்கொண்டு வருக" என்று கட்டளையிட்டான். அவ்வாறே அந்த முண்டமானது ஜனங்கள் நடமாடும் கடைவீதியில் தொங்க விடப்பட்டிருந்தது. காவலரும் மிகவும் எச்சரிக்கையாகக் காவல் காத்திருந்தனர். ஜனங்கள் ஒருவரும் அம்முண்டத்தின் அருகில் வரவில்லை.

இஃது இவ்வாறாக, பலாத்தினுடைய மனைவி மறு நாள் காலை கடைவீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கே தொங்கவிடப்பட்ட முண்டத்தைப் பார்த்துத் திகைத்து நின்றாள். ஆனால் சேவகர்கள் தன்னைப்பார்த்தால் பிடித்துக் கொண்டுபோய் விடுவார்களென்று பயந்து நேரே வீட்டுக்கு வந்தாள். அங்கே தன் மகன் நிகலாத்தைப் பார்த்து, "அண்ணனுடைய முண்டத்தை கொண்டுவரப் போகிறாயா? இல்லாவிட்டால் அரசனிடத்தில் இதை வெளியிடுவேன்" என்று பயமுறுத்தினாள்

இதைக் கேட்ட நிகலாத் எப்படியாவது அதை அங்கிருந்து கொண்டுவர வேண்டு

மென்று தீர்மானித்தான். உடனே பணம் கொஞ்சம் எடுத்துக்கொண்டு வெகுதூரத்திலிருந்த கழுதை வியாபாரிகளிடத்திற்குச் சென்று ஐம்பது கழுதைகளை விலைக்கு வாங்கினான். பிறகு கடைக்குச் சென்று ஐம்பது தோற் பைகள் வாங்கிக்கொண்டுநேரே சாராயக்கடைக்குச் சென்றான். அங்கு சாராயம் வாங்கி அந்தத்தோற் பைகளில் நிரப்பிக் கழுதைகளின் மேல் வைத்து வீட்டிற்குச் சென்றான்.

இரவு வந்ததும் ஐம்பது கழுதைகளையும் ஓட்டிக்கொண்டு, முண்டமிருக்கும் கடைவீதியினருகில் சென்று நின்றான். அங்கே போனதும் சில தோற்பைகளிலிருந்த மூடிகளையெல்லாம் திறந்து விட்டு, "ஐயோ! என் சாராயமெல்லாம் கொட்டி விட்டதே!" என்று கோவென்று அலறிக் கத்தி அழுதான். அங்கு முண்டத்தினருகில் காவல்செய்துகொண்டிருந்த காவலர்கள் அவன் அழும் சத்தத்தைக் கேட்டு தங்கள் தண்ணீர் குடிக்கும் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு ஓடிவந்தார்கள். முதலில் நிகலாத் கடுங்கோபங் கொண்டு அவர்களைத் திட்டினான். பிறகு சாந்த குணத்தோடு அவர்களிடத்தில் பேசவாரம்பித்தான். அது கண்ட அவர்களும் அவனிடத்தில் நடந்த சம்பவத்தைக் குறித்துத் துக்கப்பட்டனர். சிறிது நேரஞ் சென்றபிறகு அவர்களிடத்தில் மிகவும் பட்சமாயிருப்பது போல் பாவனைகாட்டி அவர்களுக்குத் தான் கொண்டுவந்த சாராய மெல்லாவற்றையும் குடிக்கக்கொடுத்தான். அவர்கள் சந்தோஷத்துடனே சாராய மெல்லாவற்றையும் குடித்துவிட்டு மயக்கத்தினால் ஒன்றும் தோன்றாமல் அப்படியே உறங்கிவிட்டனர்.

உடனே நிகலாத் தான் கொண்டுவந்த கத்தியை எடுத்து அவர்களது ஒரு தாடையை மாத்திரம் க்ஷவரம் செய்து விட்டு, அங்கு தொங்கியிருந்த முண்டத்தை யெடுத்துக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான். அங்கு அவன் தன் அண்ணனுடைய ஒரு கையை மாத்திரம் வெட்டிப் பத்திரமாக வைத்துக் கொண்டு பிரேதத்தைப் புதைத்து விட்டான்.

அத்தியாயம் 5.

மறுநாட்காலை ஊரெல்லாம் அல்லோலகல்லோலப்பட்டுக்கிடந்தது. அரசன் திருடன் தன் காவலர்களை வெகு தந்திரமாக ஏமாற்றி அவர்களுடைய முகத்தின் ஒரு பக்கத்தைச் சிரைத்து விட்டுப்போனதையும் அறிந்து மிகவும் கோபித்தனன். என் செய்வது என்று தோன்றாது திகைத்தனன். அவன் முகத்தில் நெல் போட்டால் பொரியும் போலிருந்தது. அரசன் முண்டத்தினருகில் காவல் செய்திருந்த காவலர்கள் எல்லோரையும் சிறையிலடைத்தனன்.

கோபமே உருவாகி நின்ற அரசன் தன் சேவகர்களை நோக்கி மந்திரிமார்களை யழைத்து வருமாறு கட்டளையிட்டான் அரசனுணைப்படி மந்திரிமார்கள் வந்து சேர்ந்தனர். அரசன் மந்திரிமார்களைப் பார்த்து, "அமைச்சர்களே! நீங்கள் எப்படியாவது திருடனைக் கண்டு பிடிக்க வேண்டும். அவ்வாறு நீங்கள் பதினைந்து நாட்களுள் கண்டு பிடிக்காவிடில் உங்களை யான் காராக்கிரகத்தில் அடைப்பேன்" என்று சிங்கம் போல் கர்ஜித்துச் சொன்னான்.

அதைக்கேட்ட அமைச்சர்கள் எல்லோரும் என் செய்வது என்று திகைத்தார்கள். பிறகு அவரவர்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர். அவர்களில் சிலர் மாறுவேடம் பூண்டு இரவெல்லாம் அங்கும் இங்கும் திரிவதாயிருந்தனர். சிலர் சந்நியாசிகள் போல் வேடம் பூண்டு வீடுதோறும் சென்று குறிசொல்லித் தம்மாலியன்றவாறு திருடனை அறிய முயன்றனர். ஆயினும் ஒருவரும் திருடனைக் கண்டு பிடிக்கவில்லை. மந்திரிமார்கள் எல்லோரும்

என்ன செய்வதென்று தோன்றாமல் திகைத்திருந்தனர். சிலர் அரசனுக்குத் தெரியாது வேறெந்த நாட்டிற்காவது ஓடி விடலாமென்று நினைத்தனர். இவ்வாறாகப், பதினைந்து நாட்களும் வெகுசீக்கிரத்தில் கடந்துவிட்டன. மந்திரிமார்கள் எல்லோரும் அரசனது அவைக்களஞ் சென்று பலவாறாக முறையிட்டனர். ஆனால் அரசனோ ஒரே பிடிவாதமாய் எல்லோரையும் சிறையிலடைத்தான்.

அரசன் தன் மந்திரிமார்கள் ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லையே என்று மிகவும் மனம் வருந்தினான். அன்று முதல் அரசன் பெரிதும் வியாகுலமடைந்தான். பணத்தினாலாவது முயற்சியினாலாவது அத்திருடர்களைக் கண்டு பிடிக்கவேண்டுமென்று தீர்மானித்தான்.

அப்படி அரசன் இரவும் பகலும் வியாகுலப்பட்டிருப்பதைக் கண்ட அவனது மகள் நீதிநிஸ் மிகவும் வருத்தப்பட்டாள்; தன் தகப்பன் பக்கத்திலிருந்து அவனுக்கு அடிக்கடி தேறுதல் கூறினாள். அப்படியிருக்கையில், ஒருநாள் நீதிநிஸ் தகப்பனைப் பார்த்து, "அப்பா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நான் ஒரு தந்திரமான வழியினால் அக்கள்வனைக் கண்டு பிடிக்கமுடியும் என்று கருதுகிறேன். அதற்குச் செய்யவேண்டிய காரியங்கள் எனக்குத் தெரியும். நான் எப்படியும் அவனைக் கண்டு பிடிப்பேன். நான் அவ்வாறு செய்ய எனக்கு அனுமதி தரவேண்டும்" என்று தகப்பனிடத்தில் உறுதி கூறித் தேற்றினாள்.

அதைக் கேட்ட அரசன் முதலில் கோபத்தோடு, "பைத்தியமாகப் பேசாதே! மகாபுத்திசாலிகளான மந்திரிகளாலும் ஆகாத காரியம் உன்னாலாகுமா? நீயோ அதற்குத் தகுந்தவள்? நீ போகவேண்டாம்" என்றான். ஆயினும் அவனுடைய மகள் அவனைப் பலவாறு மன்றாடி வேண்டினாள். முடிவில் அரசன் அவளை நோக்கி, "உன் விருப்பப்படியே செய்க!" என்று சொன்னான்.

நீதிநிஸ் மிகவும் சந்தோஷத்தோடு தன் மாளிகைக்குச் சென்று தான் செய்ய வேண்டிய காரியத்தை முறைபெற வகுத்துக் கொண்டாள். பிறகு திடீரென்று அரசனிடத்தில் சென்று, "அப்பா! இந்நகரத்திலுள்ள பெண்கள் எல்லோரும் என் மாளிகைக்கு வந்து எனக்குப் பல கதைகள் சொல்லவேண்டுமென்று நகரெங்கும் பறை சாற்றுமாறு கட்டளையிடுங்கள்" என்று சொன்னாள். அவ்வாறே அந்நகரில் உள்ள பெண்கள் யாவரும் நாள் தோறும் கூட்டங் கூட்டமாக இராசகுமாரியின் மாளிகை சென்று அவளோடு சம்பாஷித்து மகிழ்வாராயினர்.

அங்கு கூடிய பெண்கள் எல்லோரும் ஊர்க்கதைகளையும் தங்கள் அயல் வீட்டாரின் கதைகளையும் குறித்து வம்பளந்து வீண்பொழுது போக்கினர். அவ்வாறு இருக்கையில், ஒரு நாள் சாயந்திரம் ஓர் பெண்ணுக்குக் கதை சொல்லும் முறைவந்தது. அப்பொழுது அவள், "அரசிளங்குமரியே! என் கதையானது உனக்கு வியப்பைத்தரும். நான் குடியிருந்த வீட்டிற்கு அடுத்த வீட்டில் ஒரு தச்சனது இரண்டு குமாரர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் தந்தையற்ற தனயர்கள். சில நாட்களுக்கு முன்பு அரசனுடைய ஆணையால் கொலையாளிகள் அவர்களுடைய தகப்பனைக் கொன்று விட்டதாகப் பலரும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவன் இறந்தது முதல் அவர்கள் வெகு உல்லாசமாக நாட்களைக் கழித்து வந்தார்கள். அவர்கள் அண்டினவரை ஆதரித்தார்கள். இல்லை யென்போருக்கு இல்லை யென்று சொல்லாமலிடுவர். ஆனால் ஒரு நாள் அவர்களில் மூத்தவன் திடீ

றென்று மறைந்து போய் விட்டான். மூத்தவன் மறைந்த பிறகு இளையவன் வெகு மாயமாய் வாழ்கிறான்'' என்று சொல்லி முடித்தனள்.

அதைக்கேட்ட அரசன் மகள் அந்தப் பெண்ணை மாத்திரம் நிறுத்திக்கொண்டு மற்ற வர்கள் எல்லோரையும் மறுநாள் வருமாறு கட்டளையிட்டு வீட்டிற்கு அனுப்பிவிட்டாள். மற்றப் பெண்கள் எல்லோரும் வீடுபோய்ச் சேர்ந்ததும், அரசன் மகள் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு தன் சேவகர்களில் சிலரை மாறு வேடம்பூண்டு, மறைவாகத் தன்னைப் பின்பற்றி வரக் கட்டளையிட்டு வெளியே புறப் பட்டாள். அவள் நேரே பலாத்தினுடைய இரு பிள்ளைகள்வசித்துவந்த வீட்டிற்குச் சென்றாள். அங்கே போய் தன் சேவகர்களை மறைவா யிருக்கச் செய்து, அவள் மட்டும் உள்ளே நுழைந்தாள். அப்போது நிகலாத் மிகவும் துக்கமாய் ஆழ்ந்த யோசனையில் இருந்தான். யாரோ வருவதைக் கண்ட நிகலாத் உடனே எழுந்து யாரென்று விசாரித்தான். அவள், "நான் ஒரு தனவந்தனுடைய மகள். சில நாட்களாய் உன் கொடையையும் சிறந்த குணங்களையும் கேள்விப்பட்டேன். நான் உன்னையே விவாகம் செய்து கொள்ளவேண்டு மென்று தீர்மானித்தேன். ஆனால், எனக்கு ஒரு சபதமுண்டு. யார் நான் கேட்கும் இரு கேள்விகளுக்குத் தகுந்தவிடை யளிக்கிறார் களோ அவர்களையே மணப்பதென்று தீர் மானித்திருக்கிறேன். அக்கேள்விகளுக்கு நீ விடை கூறமுடியுமானல் நான் செய்த சபதம் நிறைவேறும். என் ஆசையும் கைகூடும்'' என்றாள்.

அதைக் கேட்ட நிகலாத் அவளது போழ கில் ஈடுபட்டு, "அழகில் சிறந்த தெய்வப் பெண்ணே! நீ யாது கேட்பினும் கூறுவேன்; கேள்'' என்றான். நிதிதிஸ் சற்று நேரம் யோசித்து விட்டு, "நீ உன் வாழ்நாளில் ஏதே னும் ஒரு கொடிய காரியமும் ஒரு தந்திரமான செய்கையும் செய்திருந்தால் அதை எனக்கு வெளியிடவேண்டும். நீ அவ்வாறு வெளியிடு கின்ற செய்கைகள் எனக்குப் பெரிதும் வியப்பை அளிக்குமானல் நான் உன்னையே விவாகம் செய்து கொள்வேன்'' என்றாள். அதைக் கேட்ட நிகலாத் ஒன்றும் தோன்றமல் திகைத்தான். சற்றுநேரம் மௌனமா யிருந்த பிறகு நிதிதிஸைப் பார்த்து, "பெண்ணே! கேட்பாய். நான் என்னுடைய அண்ணன் கழுத்தை வெட்டியதே மிகவும் கொடிய செய்கையாகும். பிறகு வெகு தந் திரமாகக் கடைத் தெருவில் தொங்கவிடப்பட் டிருந்த முண்டத்தைத் திருடிக்கொண்டு வந் ததே மிகவும் தந்திரமான செய்கையாகும்'' என்று சொன்னான். அதைக் கேட்ட நிதிதிஸ் உடனே நிகலாத்தினுடைய கையைப் பிடித் துக்கொண்டு மறைவாய் நின்று கொண்டிருந்த சேவகர்களை உரக்கக் கூவி அழைத்தாள். அவ ளுடைய சூதை யறிந்த நிகலாத் தன் கைக்குப் பதிலாக அண்ணனுடைய கையை நீட்டியிருந் தான். ஆதலால் சேவகர்களை நிதிதிஸ் கூப்பி டவே, அவன் அவள் பற்றியிருந்த அண்ணனு டைய கையை அவள் வசமே விட்டு ஓடிப் போய் விட்டான்.

நிதிதிஸ் அந்தக் கையைப் பற்றிக்கொண்டே தன் சேவகர்கள் மறைவாய் நின்று கொண்டிரு ந்த திசையை நோக்கி யிருந்தாள். அதனால் நிகலாத் ஓடிப்போனதை அவள் பார்க்கவில்லை. சேவகர்கள் எல்லோரும் வந்ததும் திரும்பிப் பார்த்தாள். அப்போது தன் கையில் ஓர் வெட் டுண்ட கையை மாத்திரம் கண்டாளே தவிர வேறு ஒருவரையுங் காணவில்லை. உடனே தன் மனதில், "மிகவும் கெட்டிக்காரன்'' என்று சொல்லிக் கொண்டே தன் சேவர்களுடன் அரண்மனைக்குச் சென்றாள்.

அங்கு தன் தகப்பனிடத்திற்கு நேரே சென்று வணங்கி நின்றாள். அரசன் தன் மகளைப் பார்த்து "என்ன விசேஷம்? திருடனைக் கண்டு பிடித்தாயா?" என்று கேட்டான். அதற்கு நிதிநிஸ் சற்றுநேரம் ஒன்றும் பேச நாவெழாமல் நின்றாள். பிறகு "அப்பா! கண்டு பிடித்தேன். ஆனால் கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போயிற்று. மிகவும் சமர்த்தன். வியந்தேன்! வியந்தேன்!" என்று ஆச்சரியத்தோடு சொன்னாள். அதைக்கேட்ட அரசன், "அப்படியா! அதற்கு நாம் என்ன செய்யலாம்" என்று வினவினான்.

உடனே நிதிநிஸ் தன் தகப்பனைப் பார்த்து, "அப்பா! நான் திருடனைக் கண்டுபிடித்து அவனிடத்தில் ஒரு சத்தியம் செய்திருக்கிறேன். அதாவது நான் அவனை விவாகம் செய்து கொள்வதாய் வாக்களித்திருக்கிறேன்" என்று சொன்னாள்.

அரசன் தன் மகளைப் பார்த்து, "அப்படியா செய்தி; நல்லது நான் அதை நிறைவேற்றுகிறேன்" என்று சொல்லி மந்திரிமார்களை அழைத்தான். அவர்களிடத்தில், "நான் திருடனை மன்னிப்பதாகவும், அவனுக்கு என் பெண்ணை விவாகம் செய்து கொடுப்பேனென்றும் நான் இறந்த பிறகு இந்நாட்டிற்கு அவனை அரசனாக்குவேன் என்றும் நாடு எங்கும் பறை சாற்றுங்கள்" என்றான். அவ்வாறே பறையயோர் எங்கும் பறை யறைந்தனர்.

இவற்றை யெல்லாம் கேட்ட நிகலாத் மிகவும் தைரியத்துடன் ஓர் அரசிளங்குமாரனைப் போல் தன்னை ஆடை அணிகலன்களால் அலங்கரித்துக் கொண்டனன். தன் இடைக்கச்சையில் உடைவாள் பொருத்தினன். புரவி மீதேறி அரசன் அவைக்களம் சென்று மன்னனை வணங்கி நின்றான். அரசன் அவனையும் அவனது பொலிவையும் கம்பீரமான தோற்றத்தையும் பார்த்து மிகக்களிப்போடு அவனை வரவேற்றான். பின்பு மன்னன் நிதிநிஸை அழைத்து வர ஓர் ஏவலனை யனுப்பினான். திரை மறைவில் அரசன் ஆணைக்காகக் காத்திருந்த நிதிநிஸ் உடனே சர்வாலங்கார பூஷிதையாய், மகா செளந்தரியவதியாய் அரசன் முன் தோன்றினாள். நிகலாத் தன் முன் நின்ற பேரழகியைப் பார்த்தான். அவளும் அவனை நோக்கினாள். அப்பொழுது நிதிநிஸ் நிகலாத்தைப் பார்த்து, "ஓ வீரரே! அன்று தாம் எவ்வாறு என் கைக்கப்படாது தப்பிச் சென்றீர்? அதைக் கூறுவீராக" என்று மொழிந்தாள். உடனே நிகலாத் மன்னன் மகளை நோக்கி, "பேரெழில் மலரே! நான் என்னுடைய அண்ணன் இறந்துவிட்டபொழுது ஞாபகார்த்தமாய் அவனது ஒரு கையை மாத்திரம் வெட்டி வைத்திருந்தேன். அதை என் வலது கையில் துணியால் மூடிவைத்துக் கொண்டிருந்தேன். நீ என் கையைப் பிடித்தபொழுது அக்கையை நீட்டினேன். அதை நீ பிடித்துக் கொண்டு சேவகர்கள் வரும் திக்கை நோக்கிய பொழுது நான் அக்கையை அப்படியே விட்டுவிட்டு அருகாமையில் குவிந்து கிடந்த ஆடைகளின் உள் மறைந்திருந்தேன். ஏவலர்கள் அறையை யெல்லாம் தேடத் தொடங்கினபொழுது, நானும் அவர்களில் ஒருவனாய் ஒவ்வொருவன் முதுகு மறைவிலும் நின்று தேடினேன். நீயும் என்னைக் கண்டிலை. பின்பு நீங்கள் எல்லோரும் என் வீட்டை விட்டுப் போய் விட்டீர்கள்" என்று சொன்னான்.

இதைக் கேட்ட மன்னன், பெரும் வியப்படைந்து, நிகலாத்தை நோக்கி, "ஆண்மை மிக்காய்! நான் உன் வரலாறனைத்தையும் கேட்க விரும்புகிறேன்" என்றான். உடனே நிகலாத் அரசனுக்குத் தன் தந்தையாகிய பலாத்தின் திறமைகளையும், அவன் பாபிலோனிய அசிரிய மன்னர்களின் அரண்மனைகளை திரு

மிருந்து அந்நாடுகளில் ஒரு மாகாணத்திற்குத் தலைவனுயிருந்து அதிகாரம் செலுத்தியதையும், பின்பு அந்நாட்டு அரசாது ஆதரவை இழந்து எகிப்து நாட்டிற்கு வந்ததையும், பின்பு மன்னனுக்குப் பொக்கிஷசாலை அமைத்ததையும் கூறினன். பொக்கிஷசாலை யமைத்து முடிந்ததும், அரசனுல் தனக்கு நேரிடும் தீமையை உணர்ந்தபலாத், பொக்கிஷசாலைக்குக் கரவடமான வழியமைத்ததையும், மன்னனது வேலையாட்கள் கொல்லவந்த இரவில் தந்தை தங்களுக்குக் கூறியதையும் உரைத்தான். முடிவில் தானும் தன் சகோதரனும் செய்த திருட்டுக்களையும் தான் தன் சகோதரனைக் கொன்றதையும், தன் சகோதரனின் உடலைச் சந்தைக்கடைகளின் நடுவிலிருந்து திருடிக்கொண்டு வந்ததையும் அமைச்சர்களுக்கு அகப்படாமல் நகரத்திலேயே வெகு தந்திரமாக மறைந்து நடந்ததையும் சொன்னுன். முடிவில் இராசகுமாரி தன்னைப் பிடிக்கத் துணிந்து, நகரத்துப் பெண்களையெல்லாம் கதை சொல்ல அழைத்ததையறிந்து தான் ஒரு பெண்ணிடம் தன் கதைகளை இராசகுமாரிக்கறிவித்து அவளைத் தன்னிடம் அழைத்து வருமாறு செய்த சூழ்ச்சியையும் புகன்றுன்.

இதைக் கேட்டவரசன் மிகவும் சந்தோஷமடைந்து அவனது சாமர்த்தியத்தை மெச்சினுன். அவனதுபெருந்தன்மையையும் நற்குணத்தையும் பார்த்து மிகவும் அதிசயித்தான். பிறகு நல்ல நாள் பார்த்துத் தன் மகளை நிகலாத்துக்கு நன்மணம் சூட்டினன். இப்படிச் சில வருடம் சென்றதும் ராப்சினிடஸ் இறந்து விட்டான். நிதிதிஸும் நிகலாத்தும் ஆருத்துயரடைந்தனர். அவர்கள் செய்ய வேண்டிய கிரியைகளை எல்லாம் சரிவரச் செய்து முடித்தனர். அதன்பிறகு நிகலாத் எகிப்து தேசத்தை அரசாளத் தொடங்கினுன்.

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக"

பறவைகள்.

(ஸ்ரீமான் வி. நடராஜன், B.A., L.T.)

பறக்கும் ஜந்துக்களைப் பறவை என்போம். சில பூச்சிகளும் பறக்கின்றன. ஆனல் பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பவை. மேலும் பறவைகளின் ரத்தம் உஷ்ணமாக இருக்கும். பறவைகளுக்கு முதுகெலும்பும் உண்டு. அதிக எலும்புகள் இல்லாமல் இலேசான தோல் மூடப்பெற்றிருப்பதால் பறவைகள் சுலபமாகப் பறந்து செல்லும்.

ஒரு பறவையின் சிறகை நீ முன்னமேயே பரீட்சை செய்து இருக்கிருய் அல்லவா? அதில் இறகுகள் அமைந்திருக்கும் விதத்தைக் கவனி. இறகுகளின் இருபுறங்களிலும் பஞ்சுபோல் இருக்கும் தூவிகள் விசாலமாயிருப்பினும் வெகு இலேசாக இருக்கின்றன. சிறகுகள் பறக்கும்போது குடைபோல விரிந்து இருக்கும்; பறக்காதபோது குவிந்து உடல் மீது மூடியிருக்கும்.

உனக்குத் தெரிந்த பல பறவைகளின் பெயர்களைச் சொல். காகம், கோழி, புரு, வாத்து இவைகளைச் சாதாரணமாக நீ பார்த்திருக்கிருய். கிளி, மயில், சிட்டுக்குருவி, மரங்கொத்தி, குயில், மைனு, வானம்பாடி முதலிய சிறு பட்சிகள் பார்க்க அழகாகவும், அவைகளின் குரல் இனிமையாகவும் இருக்கும். இப்பட்சிகளைச் சிலர் வளர்ப்பதுண்டு. காடை, கௌதாரி, உள்ளான், நீர்க்கோழி இவைகளைச்

சிலர் புசிப்பதுண்டு. பருந்து, ஆந்தை, கழுகு முதலிய பட்சிகளைச் சில சமயம் நீ பார்க்கலாம். ஆந்தை பகற் காலங்களில் தென்படமாட்டா. கொக்கு, நாரை, வாத்து, அன்னம் முதலிய பட்சிகள் நீரிலும் நிலத்திலும் வசிக்கும். சில பறவைகள் பறக்க முடியாமல் கஷ்டப்படும். கோழியினால் அதிகதூரம் பறக்கமுடியாது. வாத்தும் அம்மாதிரியே. தீப்பறவையும் பறக்க முடியாது. தீப்பறவை நம் நாட்டில் இல்லை. தென் ஆப்பிரிக்காவில் ஏராளமாக இருக்கின்றது. சென்னை மிருகக் காட்சிசாலையில் தீப்பறவையை வளர்க்கிறார்கள். அது ஒரு குதிரை அளவு உயரம் இருக்கும். அதன் முதுகில் ஏறிச் சவாரிசெய்யலாம். அது வேகமாக ஓடும். அதை வண்டி இழுக்கவும் உபயோகிக்கிறார்கள்.

பறவைகள் முட்டையிடுவதற்காக வெகு அழகாய்க் கூடுகள் அமைக்கும். மரங்களிலும், வீட்டு முகடுகளிலும், பாறை இடுக்குகளிலும், குச்சிகள், தழை, நார் முதலியவைகளால் கூடுகள் கட்டும். பூமியிலே முட்டையிடும் பட்சிகள் வெகு அபூர்வம். முட்டைகளைக் காப்பாற்றவே அவ்வளவு நேர்த்தியாகக் கூடுகளைக் கட்டுகின்றன. தம் விரோதிகள் கண்களில் புலப்படா வண்ணம் கூடுகளை மறைத்து வைக்கும். பறவைக் கூடுகளைப் பிடுங்கி எறியாதே.

பறவை முட்டை ஒவ்வொன்றும் ஒரு விதை போன்றது. விதையில் இருப்பது போலவே, குஞ்சு வளருவதற்கான உணவு முட்டையினுள்ளேயே இருக்கின்றது. முட்டையின் வடிவம் சரியான உருண்டையல்ல. கோழி முட்டை வடிவம் என்றே இதற்குச் சொல்வது. பட்சியின் உருவத்திற்கு ஏற்றவாறு முட்டைகள் சிறியனவாகவும் பெரியனவாகவும் இருக்கும். குருவி முட்டை சிறியது. நாரை முட்டை பெரியது. முட்டைகள் இடப்படும் இடத்திற்கு ஏற்ப அவற்றின் நிறம் அமையும்.

பறவைகளின் கால் நகங்களும், அலகுகளும், அவைகள் உண்ணும் உணவிற்கும், வசிக்கும் விதத்திற்கும் தகுந்தவாறு அமைந்திருக்கும். மீன்களைப் பிடித்துத் தின்ன உதவியாக நாரை, கொக்கு இவைகளுக்கு அலகு நீண்டு முனை கூராக இருக்கும்; கொட்டைகளை உடைத்துத் தின்னும்படி கிளி மூக்குகள் இருக்கும்; தானியங்களைப் பொறுக்கித் தின்ன உதவியாகக் கோழி, காகம் முதலியவற்றிற்கு மூக்குகள் அமைந்துள. கால் விரல்களும் இவ்விதமே உபயோகத்திற்கேற்றவாறு அமைந்திருக்கும். மாமிசந்தின்னும் பட்சிகளுக்கு உறுதியான விரல்களும் கூர்மையான நகங்களும் உண்டு. இந்தப் பட்சிகள் யாவை? மரக்கிளைகளில் உட்கார வசதியான குட்டைக் கால்களும் கெட்டியான வளைந்த விரல்களும் குருவிகளுக்கு உண்டு. மரங்களில் உட்காரும் இப்பட்சிகள் நிலத்தில் நடக்கும்போது தத்தித் தத்திச் செல்லும். தரையைக்கிளறி உணவு பொறுக்கும் பட்சிகளுக்குத் தடிப்பான நகங்களும் பலமான விரல்களும் உண்டு. கொக்கு, நாரை முதலியன ஜலத்தில் நின்றும், நடந்தும் உணவு தேடும். இப்பட்சிகளுக்குக் குச்சிபோல் நீண்ட கால்களும் மெல்லிய விரல்களும் இருக்கும். ஜலத்தில் நீந்தும் வாத்து, நீர்க்கோழி, அன்னம் முதலியவற்றிற்குக் குட்டைக்கால்களில் உள்ள விரல்கள் மெல்லிய தோலினால் சேர்க்கப்பட்டிருக்கும்.

சகோதரி வி. பாலம்மாள்,
சிந்தாமணி பத்திராதிபர்.

சிந்தாமணி ஆபீசு,
மயிலாப்பூர், சென்னை, 17—10—29.

கடித எண் 4.



என தருமை சகோதர சகோதரிகளே!

எனது 3-வது எண் கடிதத்திற்கு உங்களிற் பலர் என் மனந் தெளியும்படிக்கு "எழுதியிருந்த கடிதங்கள் கிடைக்கப் பெற்றேன். என் மனத்துயரில் சமமான பங்கெடுத்து அன்பே யுருவாக எழுதியுள்ள ஆறுதற் சொற்கள் கண்டு ஒருவாறு மனத்தெளிவடைந்துவருகின்றேன். 31-5-29ல் பிறந்துள்ள இளங்குழவியும், மற்றுமுள்ள மக்களும், கடவுள் கிருபையால் சுகமே இருக்கின்றார்கள். உங்கள் அன்பார்ந்த கடிதங்களைக் காணுந்தோறும் உங்களை நேரில் காண்பது போன்றதோர் பெருமகிழ்ச்சியை எனதுள்ள மடைகின்றது. சுக்கில ஆவணி (29 ஆகஸ்டு) முதல் சிந்தாமணிக்கு ஆறுவது ஆண்டு ஆரம்பமானதால் அதற்காக வேண்டியவற்றைக் கவனிப்பதில் சிறிதளவும் ஒய்வு கிடைக்கவில்லை, ஆறுவது ஆண்டில் சிந்தாமணி 80 பக்கங்களில் வெளிவருவது கண்டு உங்கள் மனம் களிப்படைந்திருக்குமென நினைக்கிறேன். "சிந்தாமணி" தனது பிறப்பு முதல் சகஜமாக எற்படக்கூடிய பல விபத்துக்களுடனும் பின்வாங்காது போராடிப் படிப்படியாக வளர்ச்சியுற்றுக் கடவுள் கிருபையால் ஆறுவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளாள். சிற்சில எதிர்பாராத சந்தர்ப்பங்களால் ஆறுவது ஆண்டின் 2-வது இதழ் சிறிது காலதாமதத்தில் வெளிவந்திருப்பினும் கூடிய சீக்கிரம் முன்போல் அந்தந்த மாதம் 30 தேதியில் வெளியாவதற்கான முயற்சிகளைச் செய்து வருகின்றேன். சிந்தாமணி யபிமானிகள் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். தயவு செய்து அவ்வாறே நடத்தி என் முயற்சியை யாதரிக்க வேண்டுகிறேன். பழைய பாக்கியின்றி முழு சந்தாவையும் ஒவ்வொருவரும் அனுப்பி விடுவார்களாயின் பத்திரிகையின் நிருவாகத்தில் நான் இவ்வளவு சிரமப்பட நேரிடாது. அயல் நாட்டுச் சந்தாதார்களுக்கு வி.பி. அனுப்பிப் பணம் வசூலிக்க இடமில்லை. உள் நாட்டு சந்தாதார்களுக்கனுப்பப்படும் வி. பி. களும் தயவு தாட்சிணியமின்றி திருப்பப்படுகின்றன. இவ்வாண்டில் இக்கடிதங்கண்டும் பழைய பாக்கியைச் சுமத்திக்கொண்டிருக்கும் சந்தாதார்கள் தங்கள் சந்தா முழுவதையும் அனுப்பத்தவறுவார்களாயின் இதுவரையிலேற்பட்டுள்ள நஷ்டங்களில் அதைக் கணக்கிட்டு அவர்களுக்கு இனி பத்திரிகையை யனுப்பாது நிறுத்திக் கொள்வதே மேலெனநிச்சயித்திருக்கிறேன். ஆரம்பமுதல் சந்தாவை முற்பணமாகவும் பாக்கியின்றியுமளித்து சிந்தாமணியை அதன் இளமை முதல் ஆதரித்து வரும் அபிமானிகளின் ஆதரவைக் கொண்டு மற்றவர்களுக்குப் பத்திரிகைகளை யனுப்பி யாதொரு பயனுமின்றி இனியும் நஷ்டப்பட முடியாது. சிந்தாமணியை அன்புடன் வரவேற்று மகிழ்ச்சியுடன் சந்தாவளித்து

வரும் அபிமானிகளின் மனம் குளிரத்தக்க வழியில் பத்திரிகையைச் செவ்வையாக நடத்த வேண்டுமென்பதே எனது நோக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இக்கடிதம் கண்டதும் சிந்தாமணியைப் பெற்றுக்கொண்டுவரும் ஒவ்வொருவரும் தங்கள் சந்தாபாக்கியுள்ளதா வென்பதைக் கவனித்து அனுப்பவும் ஆரம்ப சந்தாதாராக உள்ளவர்கள் சாசுவத சந்தாதாராகி ஐம்பது ரூபா யனுப்பி ஆதாரவளிக்கவும் முன் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நிற்க. கைம்மாறு கருதாமல் வழுவில் நிருபங்களெழுதிச் சிந்தாமணியை அலங்கரித்து வரும் சகோதர சகோதரிகளுக்கு வந்தனமளிக்கின்றேன். கைக்குவரும் நிருபங்களைப் படித்தும், அவசியமாயின் திருத்தங்கள் செய்தும் வெளியிடுவதற்குச் சிறிது தாமதமேற்படுகின்றது. உடனே ஏன் வெளியிடவில்லையென்றும், உடனே ஏன் பதிலளிக்கவில்லையென்றும் என்னைக் கோபித்தால் நான் என் செய்வேன். சற்று சாவகாசத்திலேனும் வெளியிடக் கூடியவற்றைக் கைவசம் வைத்துக் கொள்வதல்லாது சிந்தாமணிக்குத் தகுதியற்றவைகளாயின் உடனே திரும்பி வந்துவிடுமென்பதை எனது நிருப சகோதர சகோதரிகள் கவனிக்கவேண்டுகிறேன்.

மேடிச் செய்திக்கு அடிக்கடி எழுதவில்லையெனச் சிலர் வருந்தி எழுதுகிறீர்கள். நான் இது விஷயத்தில் இயற்றும் பிழையை மன்னிக்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஒய்வின்மை காரணமன்றி உங்களை மறந்து விட்டதாகவோ அசட்டை செய்ததாகவோ கனவிலும் நினையாதிருக்கக் கோருகிறேன். தவிர, மாதந்தோறும் தவறாது போஸ்ட் செய்யப்படினும், சிலருக்குப் பத்திரிகை தவறிவிடுகின்ற காரணம் தெரியவில்லை. நான் போஸ்ட் செய்யும் மயிலாப்பூர் போஸ்டாபிசில் எலி பெருச்சாளிகளின் உபத்திரவங்களுமில்லை. அது நல்ல சுத்தமும் வெளிச்சமுமுள்ள கட்டிடம் தவிர உடனுக்குடன் முத்திரையிட்டுப் பையிலடைக்கப்பட்டு வெளியே சென்று விடுகின்றன. இவ்வாறிருந்தும் மாதத்தில் பத்து பத்திரிகையாவது மீண்டும் அனுப்பவேரிடுகின்றது. போஸ்டில் வாராது தவறியவர்களுக்கு நான் மீண்டு மனுப்பக்கடமைப் பட்டிருக்கிறேன். ஆனாலும் ஒழிந்த சமயத்தில், சந்தா கேட்கும் சமயத்தில், சாவகாசமாக ஆறேழு பத்திரிகை கிடைக்கவில்லை யெனத் தெரிவித்தால் நான்என்னசெய்வது. உடனுக்குடன் எழுதினால் நானும் உடனுக்குடன் அதை மீண்டுமனுப்பிவிடுவது சௌகரியமாயிருக்கும். பலமாதங் கழித்துப் பழைய பத்திரிகைகள் தேவையாயின் கைவசமிருப்பினும் அதற்குத் தனிக்காசு பெற்றுத்தான் மீண்டு மனுப்புவது வழக்கம். இனிமேலாயினும் உடனுக்குடன் விலாசமாறுதல்களையும் தெரிவிப்பதுடன் அந்தந்த மாதத்திலேயே பத்திரிகை கிடைக்கத் தவறியிருந்தால் தெரிவிக்கவும். பாக்கியின்றி சந்தாவை யனுப்பி விடும் சந்தாதார்களுக்கும் முற்பணமாகவே ஆரம்ப முதலளித்து வரும் சந்தாதார்க்கும், சிந்தாமணி பழைய வால்யூம்களைத் தபாற் கூலியின்றி 4-0-0 (நான்கு ரூபாய்)க்கு அனுப்பத் தயாராயிருக்கிறேன். சில பிரதிகளே இருப்பதால் தயவு செய்து உடனே தெரிவிக்கவும். ஒவ்வொருவரும் புதிய சந்தாவொன்றைச் சேர்த்தனுப்பி ஆறுவது ஆண்டில் வளர்ச்சியுற்றிருக்கும் சிந்தாமணியை ஆதரிப்பது உங்கள் கடமை யெனத் தெரிவித்தும், உங்கள் அன்பார்ந்த விசாரிப்புகளுக்கு வந்தனமளித்தும், ஆறுவது ஆண்டில் சிந்தாமணியானது ஒவ்வொரு தமிழகத்திலும் வரவேற்கப்பட்டும், சந்தா பாக்கியின்றி அளிக்கப்பட்டும் அபிவிருத்தியடையும்படி கடவுளைப் பிரார்த்தித்தும் இக்கடிதத்தை முடிக்கின்றேன்.

உங்களை இமைநேரமும் மறவாத உங்கள் பட்சமுள்ள,

சகோதரி வி. பாலம்மாள்.